கிராம நலம்

ஜூலை '62 13 ந.பை



"புதிய பஞ்சாயத்து ஆட்சியில் கிராமத்தொழில் மறுமலர்ச்சி...."

தமிழ்நாட்டின் அழகுணர்ச்சிக்கும் உழைப்புத் திறனுக்கும் சான்றாகத் திகழ்பவை, நமது கிராமக் கைத்தொழில்கள். (சிறப்பாக, பத்தமடைபாய், கதர், கை நெசவு, முதலியன). புதிய பஞ்சாயத்து ஆட்சி, இவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்களை, உருவாக்கி, நிறைவேற்றும்.

"நம்முடைய தலையாய கடமை"

"கிராமவாசிகளுக்கு நாம் படு பாதகமான தீங்கு செய்து விட்டோம். அதற்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரே வழி அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உடனடி யாக மார்க்கட் கிடைக்கும் என்று உறுதியளித்து அவர்கள் இழந்துவிட்ட கைத்தொழில்களை மீண்டும் புனருத் தாரணம் செய்ய உற்சாகம் அளிப்பதுதான். கடவுளைக் காட்டிலும் பொறுமையானவரோ, மன்னிப்பு அளிக்கக் கூடியவரோ யாரும் இல்லை. ஆனால், அவருடைய பொறுமைக்கும் மன்னிப்புக்கும்கூட ஓர் எல்லையுண்டு. நாம் கிராமங்களுக்குச் செய்யவேண்டிய கடமையை அலட்சியம் செய்தோமானால், நமது அழிவை நாமே தேடிக்கொண்டவர்களாவோம். இந்த கடமை அவ்வளவு கடினமானதும் அல்ல; அது மிகமிக எளிதானது. நாம் கிராமிய மனப்பான்மையுள்ளவர்களாக வேண்டும். நம் முடைய தேவைகளையும், வீட்டுத் தேவைகளையும் கிராமிய அடிப்படையிலேயே சிந்திக்கவேண்டும். இதற்கு அதிகம் செலவும் ஆகப்போவதில்லை. அண்மையில் உள்ள கிராமங் களுக்குச் சென்று, அவைகளில் உற்பத்தியாகும் பொருள் களெல்லாம் நகரங்களில் உடனடியாக விற்பனையாகும் என்று உறுதியளிக்க, தொண்டர்கள் தேவை. எல்லாச் சாதிமதங்களைச் சேர்ந்தவர்களும், பல்வேறு கட்சிகளையும் கொள்கைகளையும் சேர்ந்தவர்களும் இக்கடமையைச் செய்ய முடியும். நமது நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த காரியம் இதுவே."

மகாத்மாவின் மணிமொழி.

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7 | ஜூலை 1962 | படி 10

"கிராமப் பொருளாதாரம் பெருக பாடுபடுவீர்"

கிராமிய நல் வாழ்வே நாட்டு நல்வாழ்வு. ஒவ்வொரு கிராமமும், பிறர் கையை எதிர் பாராமல், தன்னுடைய தேவைகளை தானே பூர்த்திசெய்து கொண்டு, தன்னிறைவும், சுயபலமும் பெற்றுத் திகழவேண்டும் என்பது தேசப்பிதா காந்தியடிகளின் கனவாகும். கிராமக் கைத் தொழில்கள் பெருகி, கிராமிய முறைப்படி அவை மீண்டும் புனருத்தாரணம் செய்யப்படுவது மிகவும் அவசியம் என்பதை தமிழ் நாடு அரசாங்கம் உணர்ந்துள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்து வருகிறது.

கிராமிய மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் பொறுப்பில், கிராமியக் கைத் தொழில் வளர்ச்சியினையும் அரசாங்கம் ஒப்படைத்துள்ளது. புதிய பஞ்சாயத்துச் சட்டம் 66-வது பிரிவின்படி, விவசாயம், கால் நடைப்பராமரிப்பு, கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட எல்லா அபிவிருத்தி வேலைத் திட்டங்களும், அவைகளைச் செயல்படுத்தி வைக்கின்ற பொறுப்புகளும், பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தின் கீழ், சிறு தொழில் வளர்ச்சித் திட்டங்களை மாநிலக் கதர், கிராமத் கைத்தொழில் போர்டின் வசம், முன்பே அரசாங்கம் ஒப்படைத்து விட்டது. கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இந்த வேலையை, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைத்து, தமிழ் நாடு அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.
[கிராம நல-தல நிர்வாகத்துறையின் 30-5-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1250—இதே இதழில் பகுதி II–vi-ம் பக்கம் பார்க்க.]

புதிய பஞ்சாயத்து ஆட்சியில், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு மிகவும் முக்கியமானது. உண்மையான அதிகாரப் பரவல் முறை என்ற அடிப்படையின் கீழ், முக்கியமான பொறுப்புக்கள் மக்கள் பிரதிநிதிகள் வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. மதிய உணவுத் திட்டம், விவசாய உற்பத்தித் திட்டம், அடிப்படைப் புள்ளி விவரங்கள், ஜனன மரணக் கணக்கெடுத்தல் போன்ற முக்கிய பொறுப்புகளை, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் வசம் அரசாங்கம் முன்பே ஒப்படைத் துள்ளது.

கிராமங்கள் சுயபலமும் தன்னிறையும் பெற்றுத் திகழ வேண்டும். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற சமூக நல மாநாட்டில், முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் பேசும்பொழுது, கிராமப் பெண்களுக்கு சிறு இயந்திரங்கள் மூலம் இயங்குகின்ற சிறு தொழில்களில் பயிற்சி அளித்து, அவர்களுடைய வருவாயினைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். (அவருடைய பேச்சின் முழு விவரம்.—22-ம் பக்கம் பார்க்க.) புதிய பஞ்சாயத்து ஆட்சியில் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற மக்கள் பிரதிநிதிகள், தங்களுடைய பொறுப்புக்களை உணர்ந்து, செம்மையான முறையில், இத்திட்டத்தை நடத்தி வைப்பார்களென நம்புகிறோம்.

கிராமப் புறங்களில் விவசாயக் காலம் தவிர, மற்ற நேரங்களில் கிராம மக்களுக்கு ஓய்வு கிடைக்கிறது. அந்த ஓய்வினை, நல்ல முறையில் கிராம மக்கள் பயன் படுத்தும்படியாகப் பார்த்துக்கொள்வது பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பாகும். கிராம மக்களின் ஓய்வு நேரத்தை வீணாக்காமல், அதை நல்ல முறையில் செலவிடவும், அவர்கள் வருவாய் பெருகுவதற்கு வழி வகுத்துக்கொடுக்கும் வகையில் கிராமியக் கைத்தொழில்கள் வளர்ச்சியில் பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்கள் மிகுந்த அக்கறையுடன் பாடுபடுவார்கள் என நம்புகிறோம்.

ஆசிரியர்.

கிராமநலம்

தனிப் பிரதி 0·13 ந.பை. ஆண்டு சந்தா 1·50 ந.பை.

நிர்வாகம், கட்டு வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியின் முதல் கூட்டம்

சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம் சம்பந்தமாக செய்யப்படுகின்ற வேலைகள் பற்றியும், அந்தத் துறையில் கண்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் அவ்வப்போது பரிசீலனை செய்வதற்காக வேண்டி, மாநில பூர்வாங்க ஆலோசனைக்குழு, முதல், அமைச்சரின் தலைமையில், இது வரையில் இயங்கி வந்தது. இப்பொழுது மாநிலம் பூராவும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 1958-ம் ஆண்டு சென்னை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டத்தின்கீழ், இந்த மாநிலமானது, 21 அபிவிருத்தி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட அபிவிருத்தி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சி மன்றங்களின் வேலைகள் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மாநில அரசுக்கு ஆலோசனை கூறுகிற பொறுப்பும், மாவட்டங்களின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவது சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆலோசனை கூறுகிற பொறுப்பும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்படி அதிகாரப் பரவல் முறையின் கீழ், உள்ளாட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கேற்ப, இதற்கு முன் இயங்கிவந்த மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவானது கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, பஞ்சாயத்துக்கள் சம்பந்தமான பல்வேறுபட்ட விஷயங்கள் பற்றி கவனிக்க பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் குழுக்களை (Consultative Committees on Panchayat Development) ஏற்படுத்த மாநில அரசு முடிவு செய்தது. (1962-ம் ஞு மார்ச்சு மாதம் 31-ந் தேதி யிட்ட, கிராம நல-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 797-ல் இவ்வாணையின் தமிழாக்கத்தினை "கிராமநலம்" மே இதழில் பகுதி II-ல் பக்கங்கள் v–viii-ல் காணலாம்.) (1) நிர்வாகம், கட்டுவேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு, (2) உற்பத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு, (3) க்ஷேம நலப்பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு என்று மூன்று குழுக்கள் இவ்வாணையின் படி ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மூன்று குழுக்களுக்கும் முதல் அமைச்சரே தலைவராக இருப்பார்.

2. நிர்வாகம், கட்டு வேலைகள் (Administration and Works) பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம் உதகமண்டலத்தில் 1962-ம் ஞு மே மாதம் 10, 11, 12தேதிகளில் நடைபெற்றது.

தமிழ் நாடு கவர்னர் **ஸ்ரீ விஷ்ணுராம் மேதி** அவர்கள் இக்கூட்டத்தைத் துவக்கி வைத்தார். முதல் அமைச்சர், கவர்னர் அவர்களையும், குழுவின் அங்கத்தினர்களையும் வரவேற்றுப் பேசினார். தமது துவக்க உரையில், கவர்னர் அவர்கள், புதிய பஞ்சாயத்துச் சட்டமானது இந்த மாநிலத்தில் நிறைவேற்றி வைக்கப்பட்டிருப்பதையும், அத்துறையில் கண்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள். மாநிலத்தின் அபிவிருத்தியில் மக்கள் ஸ்தாபனங்களான பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் தங்களுடைய பொறுப்பினை உணர்ந்து கடமையுணர்ச்சியுடன் பணியாற்ற வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனைக் குழுக்களும் தங்களுடைய கடமைகளை நல்ல முறையில் செயலாற்றும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கூட்டத்தில் விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள் மீது குழு பரிசீலனை செய்தது. விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள்கள் (1) கட்டு வேலைகள், (2) வரவு-செலவுத் திட்டம்—கணக்குகள், (3) நிர்வாகம் என்ற மூன்று பெருந்தலைப்புகளாக வகைப் படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டன. எல்லா உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்து கொண்டனர். அரசாங்க உத்தியோகஸ்தராயில்லாத அங்கத்தினர்கள் (Non-official members) விவாதத்தில் மிகுந்த அக்கறையுடன் கலந்து கொண்டனர். மாநில அளவில் எதிர் நோக்கி நிற்கின்ற பல்வேறு பிரச்னைகளையும் அவர்கள் தெளிவாகப் புரிந்திருந்ததுடன், அவைகளை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியும், விளக்கங்கள் அளித்தார்கள்

3. குழுவினால் பல்வேறு சிபாரிகள் செய்யப்பட்டன. பஞ்சாயத்து நிர்வாகத்தில் கிராம அதிகாரிகளின் பங்கு, பஞ்சாயத்து அபிவிருத்தி அலுவலர்களின் மாதாந்திரக் கூட்டங்கள் பற்றியெல்லாம் நல்ல உருப்படியான யோசனைகள் சொல்லப்பட்டன. கிராம வேலைகள் மானியம், சிறிய நீர்ப்பாசனமானியம், பிரதேச சாலைகள் மானியம் ஆகிய வற்றின்கீழ், கடந்த ஆண்டில் கண்டுள்ள முன்னேற்றம் பற்றி பொதுவாக திருப்தி தெரிவிக்கப்பட்டது. கிராம வேலைகள் திட்டத்தின் கீழ், நடை முறை ஆண்டில் எடுத்துக் கொள்ள வேண்டிய புதிய வேலைகள் பற்றியும், பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தினை பலப்படுத்துவது பற்றியும் சிரிய யோசனைகள் அங்கத்தினர்களால் சொல்லப் பட்டன.

கடைசி தினத்தன்று முதல் அமைச்சர் **ஸ்ரீ காமராஜ் அவர்கள்** எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்றி கூறினார். அவர் தமது நன்றியுரையில் "நம்மை நோக்கியுள்ள பிரச்னைகளையெல்லாம் ஒரே நாளில் தீர்த்துவிட முடியாது. கிராமத்தில் உள்ள எல்லா மக்களும் தாமாகவே முன்வந்து

ஒத்துழைப்பதின் மூலம், இப்பிரச்னைகளுக்கெல்லாம், நல்ல முடிவினை நாம் காண முடியும். கூட்டுறவு மனப்பான்மையும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சமூகமாகப் பணியாற்றுதலும் மிகவும் முக்கியமானவை. இந்த நிலையினை உருவாக்க பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் பாடுபட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த **ஸ்ரீ ஆர். எம். குமாரசாமி கவுண்டர்** அங்கத்தினர்கள் சார்பாக அரசாங்கத்திற்கு நன்றி கூறினர்.

கூட்டம் முடிந்த பிறகு, அரசாங்க உத்தியோகஸ்தரா யில்லாத அங்கத்தினர்கள் குந்தா மின்சார நிலையத்திற்கு விஜயம் செய்தனர். மின் உற்பத்தி நிலையத்தினைப் பார்வையிட்டு, அங்கே ஏற்பட்டுள்ள நல்ல முன்னேற்றத்தினை அவர்கள் வெகுவாகப் பாராட்டினர்கள்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் விவரம் :—

ஸ்ரீ கே. காமராஜ், முதல் அமைச்சர்.

ஸ்ரீ எம். பக்தவத்சலம், நிதி அமைச்சர்.

ஸ்ரீ ஆர். வெங்கடராமன், தொழில் அமைச்சர்.

ஸ்ரீ பி. கக்கன், விவசாய அமைச்சர்.

ஸ்ரீ நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார், கூட்டுறவு அமைச்சர்.

ஸ்ரீ ஜி. பூவராகன், செய்தி அமைச்சர்.

ஸ்ரீ எஸ். எம். அப்துல் மஜீது, தல நிர்வாகத்துறை அமைச்சர்.

ஸ்ரீ பி. ராஜகோபால், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, வடக்கு வேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எம். கிருஷ்ண கவுண்டர், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தெற்கு வேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ கே. ராமசாமி ரெட்டியார், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, வடக்கு கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஜி. தண்டபாணி நாயுடு, தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தெற்கு கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ கே. கமலக்கண்ணன், எம். எல். சி., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ பி. கே. முத்து வேலப்ப கவுண்டர், எம்.எல்.ஏ., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, கோயமுத்தூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஆர். எம். குமாரசாமி கவுண்டர், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, கோயமுத்தூர் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எம். கே. நஞ்சா கவுடர், தலைவர், பொதுவேலைகள் நிலைக்குழு, நீலகிரி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஆர். திருமலைசாமி, பி. ஏ., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, வடக்கு மதுரை மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஏ. எம். நல்லதம்பி, தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தெற்கு மதுரை மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ. எஸ். பி. கே. எல். லட்சுமணன் செட்டியார், எம்.எல்.சி., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ டி. ஆர். செங்கோட கவுண்டர், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, சேலம் வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எம். ஆறுமுகம், தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, சேலம் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எம். டி. தியாகராஜ பிள்ளை, எம்.எல்.ஏ., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஏ. தியாகராஜன், எம்.எல்.ஏ., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தெற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எஸ். வரதராஜன், பி.ஏ., பி.எல்., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, வடக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ எஸ். சங்கர நாயுடு, தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, வடக்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ., தலைவர், பொது வேலைகள் நிலைக்குழு, தெற்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ். தமிழ்நாடு அரசாங்கப்பிரதமச் செயலாளர்,

ஸ்ரீ டி. ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ். நிதித்துறைச் செயலாளர்-அபிவிருத்திக் கமிஷனர்.

ஸ்ரீ எஸ்.ஆர். கெய்வார், ஐ.ஸி.எஸ்., நிலவரிக் கமிஷனர்.

மற்றும், மாவட்டக் கலெக்டர்கள், ஆகிய அங்கத்தினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்துடன், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துறைகளின் உயர்தர அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதிய பஞ்சாயத்து ஆட்சியில்

கல்வி வளர்ச்சி

[ஆரம்பக்கல்வி, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் ஒருமைப்பாட்டுணர்வினையும், கடமையுணர்ச்சியையும் இளம் மாணவர்களின் மனத்திலே பதியும் வகையில், கல்வியானது புகட்டப்படவேண்டியது அவசியம். ஆசிரியர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, பணியாற்றுவார்கள் என நம்புகிறோம். ஆரம்பக்கல்வி பற்றி, கல்வித்துறையினர் அனுபவத்தின்பேரில் வெளியிடுகின்ற விளக்கக் குறிப்புகள் இந்த மாதம் முதல், தொடர்ந்து 'கிராமநல'த் தில் வெளிவரும். பெற்றோர்களும், கல்வி விஷயத்தில் அக்கறை கொண்ட எல்லோரும் இந்தப் பகுதியில் வெளியாகும் கருத்துக்களை கவனத்துடன் படித்து, தங்கள் அனுபவங்களையும், அபிப்பிராயங்களையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்]

பள்ளிக்கூடத்தின் தோற்றமும், சுற்றுப்புறமும்

பள்ளிக்கூடத்தை தெய்வமணம் கமழும் இடமாகக் கருத வேண்டும். பள்ளிக்கூடம் என்பது கலைக்கோயில். கலைக்கோயிலின் தோற்றம், எவ்வாறு அமைய வேண்டும்? அங்கு போகும் வழி எவ்வாறு இருத்தல் நலம்? இவற்றைப் பற்றி சிறிது சிந்திப்போம்.

பள்ளிக்கூடம் உள்ள இடம் குச்சு வீடாகவும் இருக்கலாம்; மச்சு வீடாகவும் இருக்கலாம். சொந்தக் கட்டடமாய் இருக்கலாம்; வாடகை இடமாக இருக்கலாம்; எப்படி இருந்த போதிலும், பார்க்க கவர்ச்சிகரமாக, இருக்க வேண்டும். கவர்ச்சியை பொருட் செலவினால் மட்டும் ஏற்படுத்த முடியாது. கவர்ச்சியை முயற்சியாலும், உழைப்பாலும் தான் ஏற்படுத்தலாம்.

எப்பொழுதோ ஒரு விழாவுக்கு கட்டப்பட்ட மாந் தோரணம் காய்ந்து சருகாகத் தொங்குவதை சிற்சில இடங்களில் பார்க்கிறோம். அதை அகற்ற சிறிது நேரம் ஆகாது. உழைப்புத் தேவையில்லை. பின் ஏன் அவை அகற்றப்படவில்லை? அப்படி இருக்கக் காரணம் என்ன? அதைப் பற்றி சிந்தனை செய்யாததேயாகும். இதே போல, காகித தோரணங்கள், வெளியே சுவற்றில் ஒட்டப்பட்ட படங்கள் முதலியவை எப்பொழுதோ நடந்த விழாவன்று சோபித்திருக்கும். ஆனால், இன்று படத்தின்மேல் படிந்துள்ள தூசும், தும்பும் இங்கும் அங்கும் கிழிந்து தொங்கும் படங்களும் அவ்வளவு அழகாயில்லை. எனவே, பள்ளிக்கூடத்தின் விழாவுக்காக எந்த அலங்காரம் செய்தாலும், அதை விழா முடிந்ததும், கலைத்துவிட்டு, பள்ளிக்கூடத் தோற்றம் துப்புரவாக இருக்குமாறு வைப்பது நலம்.

மற்றும், பள்ளிக்கூட சுவற்றின்மேல் பெயர் எழுதியிருந்தால், பெயர் அழகாக எழுதப்பட்டிருக்க வேண்டும். பெயர்ப் பலகை என்று தனியே தொங்கவிட்டிருந்தால் அதில் உள்ள எழுத்துக்களும் அழகாக இருக்க வேண்டும். சில இடங்களில் மாவட்டக் கழகத்தாரால் தரப்பட்ட பலகைகள் அதே பெயருடன் காணப்படுகின்றன. "கழகத் தொடக்கப் பள்ளி" என்ற பழைய பெயரை "பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளி" என்று மாற்றியிருக்க வேண்டும். இப்படி மாற்றம் செய்ய முனையுங்கால், எழுத்துக்களை கோணல் மாணலாக எழுதுவது தகாது.

பள்ளிக்கூடத்தின் முன்புறத்தின் கொடி வணக்கம் நடப்பது எல்லாருக்கும் தெரியும். கொடிக்கம்பு நடும் இடம் நன்கு தெரிய, செங்கற்களை மூலைவாக்கில் வட்டமாகப் புதைத்து, சுண்ணாம்பை மேலே அடித்திருந்தால், அழகாகவும் இருக்கும். கொடிக்கம்பு நடும் இடம் எது என்றும் தெரியும்.

பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் பாதை, மேடு பள்ளமில்லாமலும் கல்லும் முள்ளும் இல்லாமலும் இருக்க வேண்டும். இதைச் செய்ய, உழைப்புதான் தேவை. சிறிது அழகாக, பாதையை அமைக்க விரும்பினால், இருமருங்கிலும் செங்கற்களை (சுவர்க்கற்களே போதும்) மூலைவாக்கில் பாதைக்கு இருமருங்கும் புதைத்து, சுண்ணாம்பு அடித்தால் அழகாக இருக்கும்.

பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த இடம் இவ்வளவு என்று தெரிய சர்வே கற்கள் நான்கு மூலைகளிலும் புதைத்து முள்வேலி சுற்றிலும் போடலாம். நான்கு புறமும் முள் வேலி போட்டபின், உள்ளே போக பள்ளிக்கூடத்தின் முன்புறம் ஒரு மூங்கிலால் செய்யப்பட்ட கதவு (gate) இருக்கலாம்.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்தின் முன்புறத்தை சிறுநீர் கழிக்கும் இடமாக மாற்றாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

"பண்பட்ட வாழ்வு வாழ......"

''நம் சித்தத்தில் சக்திகள் பல இருக்க, பல்கலைக் கழகப் படிப்பில் ஞாபக சக்தி என்ற ஒன்றையும், தர்க்க சக்தி என்ற இரண்டாவதையுமே வளர்க்கிறார்கள். மற்ற எந்த சக்தியும் கவனிக்கப்படுவதில்லை. சித்தத்தில் ஒத்துழைத்தல், தியாகம், சகிப்பு, அன்பு செலுத்துதல், துணிவு, அஞ்சாமை என்ற எத்தனையோ சக்திகள் உள்ளன. இவையெல்லாம் கவனிக்கப்படுவதே இல்லை. உண்மை பேசுதல் என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொல்லுகிறார்கள். நீங்கள் மேற்கோள்களுடன் பல பக்கங்களில் பிழையின்றி எழுதிவிட்டால், தேறிவிட்டதாகச் சொல்லி விடுகிறார்கள். நீங்கள் உண்மையே பேசுகிறீர்களா என்பதை எவரும் கவனிப்பதில்லை. அதாவது, படிப்புக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லை. பழைய காலத்தில், பிள்ளைகளும் பெண்களும் பள்ளியில் படிப்பதோடு, வீட்டில் தம் பெற்றோருக்கு உதவியாக வேலைகள் செய்வார்கள். இப்போதோ பிள்ளைகளைச் சொல்லுவானேன். பெண்களும் தாம் இது எழுத வேண்டும் அது படிக்க வேண்டும் என்று சொல்லி வீட்டில் ஒரு வேலையும் செய்வதில்லை. இதனால், அவர்களுக்கு பிறருக்கு உதவும் பழக்கமே இல்லாது போய்விட்டது. பழைய காலத்தில், ஆசிரியர் வீட்டில் போய் இருந்து கல்வி கற்றபோது, அங்கே ஆசிரியருக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டியிருந்தது. இப்போது ஆசிரியர் வீடே இல்லாமையால், பெரியோருக்குப் பணி புரியும் பழக்கமே இல்லாது போய்விட்டது. பணி புரியாது பெறப்படும் கல்வியினால், தற்பெருமையும், கர்வமும் வளருமே தவிர, நன்மை எதுவும் ஏற்படாது.

புத்தி அல்லது அறிவைத் தவிர, திரம் என்ற ஒரு சக்தியும் இருக்கிறது. அதுவும் கல்வியில் வளர்க்கப்பட வேண்டும். அதனால் தன்னம்பிக்கை பெருகும். இக்காலத்தில், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடந்து கொள்ளுதல், மாணவரிடையே அரிதாகி விட்டது. இப்போது 10 வயதான பையனுக்குத் தெரிந்துள்ள விஷய ஞானம், உலக அறிவு பழைய காலப் பிள்ளைகளுக்கு இருந்ததில்லை. ஆனால், அப்போது பிள்ளைகளிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும், அடக்கமும், ஒழுங்கு முறை தவறாது நடத்தலும் இப்போது இல்லை. மாணவர்களுக்கு தம்மீதே நம்பிக்கை இல்லை. கல்வியெல்லாம் ஒரு சார்பினதாய் இருக்கிறது. புத்தியை வளர்க்கிறார்களே தவிர, தைரியமும் இன்னும் பலகுணங்களும் கவனிக்கப்படுவதில்லை. பெண்களுக்கு அளிக்கும் கல்வியில் நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்படவும், நல்ல காரியங்களிலும், கடவுளிடமும் சிரத்தை உண்டாகவும், தன்னம்பிக்கைத் தோன்றி வளரவும், பிறருக்கு உதவுவதில் ஆர்வம் ஏற்படவும், ஆன்மீக நூல்களைப் படிப்பதிலும், கருத்துக்களைப் புரிந்து கொள்வதிலும் அவர்கள் மனம் செல்லுமாறு செய்யவும், சிறந்த பக்திப் பாடல்களை இனிமையாகப் பாடவும், துப்புரவு விஞ்ஞானத்தை நன்கு தெரிந்து கொள்ளவும், வீட்டு வேலைகளில் பழக்கமும், பொருளாதார சாஸ்திரத்தில் பயிற்சியும் ஆரோக்கியம் பற்றிய முழு அறிவு பெறவும் வகை செய்ய வேண்டும். பெண்களுக்கு இவை எல்லாம் தெரிந்திருந்தால், அவர்களால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கமுடியும்.''

ஆசார்ய வினோபாஜி

['கிராம ராஜ்யம்' இதழிலிருந்து]

பள்ளிக்கூடத்தை அணுகும்பொழுதே பள்ளிக்கூடம் அருகே வருகிறது என்று தெரிவிக்கத் தக்க வகையில் முன்புறம் அமைந்துள்ள தோட்டத்தில் நடைபாதைக்கு இருபக்கமும் வாசனைப்பூ செடிகளையும் வாசனைப்பூ மரங்களையும் வைக்கலாம்.

இவையன்றி, தோட்டத்தில் பலன்தரத்தக்க மரங்கள் நட வேண்டும். முருங்கையும், தென்னையும் நல்ல பலன் தரும் மரங்கள். இவற்றைத் தோட்டத்தில் வேலி ஓரத்தில் வைக்கலாம்.

இதர இடங்களில் காய்கறிச் செடிகள் பயிரிட்டால், நண்பகல் உணவுக்கு உதவியாயிருக்கும். இயற்கை பாட போதனைக்கும் உதவும்.

பார்க்க அழகாயிருக்கும் செடிகளையும் வைத்தால், பிள்ளைகளுக்கு இயற்கை அழகைக் கண்டு ரசிக்கும் தன்மை ஏற்படும்.

எளிய மருந்துச் செடிகளையும்—துளசி தும்பை போன்றவற்றை—ஒரு புறம் வைத்தால், ஊருக்கும் உதவியாயிருக்கும்.

தோட்டத்தின் பின்புறம் பிள்ளைகள் ஒதுங்க ஒதுங்குமிடம் அமைத்தல் இன்றியமையாதது. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்பார்கள். இன்று மறைவிடம் எங்கு இருக்கிறது என்று தேடி ஒதுங்கும் மாணவன் நாளை எங்கும் திறந்த வெளியில் ஒதுங்க அஞ்சுவான். இப்படி ஒதுங்குமிடத்தை அமைக்க ஏராளமான பணம் செலவு செய்து கல் கட்டிடம் அமைக்க வேண்டும் என்று எண்ணுதல் தகாது. "மனமிருந்தால் வழியுண்டு" என்பது போல, மூங்கில் கம்புகள் தட்டிகளை வைத்து அமைக்கலாம். பெரிய திருவிழாக் காலங்களில் சுகாதார அதிகாரிகள் இப்படி அமைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இதே போல் செய்யலாம். ஆண் பிள்ளைகளுக்கு தனியிடமும்; பெண்பிள்ளைகட்குத் தனியிடமும் அமைக்க வேண்டும்.

[தொடரும்]

கனவும் நனவும்

[திரு என். எஸ். ஆர். சாலமன் ராஜ், பி.எஸ்.ஸி., தொழில் வளர்ச்சி அலுவலர், திருப்பூர்]

[கூட்டுறவே நாட்டுயர்வு. நாட்டின் வளம் பெருக, பஞ்சாயத்து, பள்ளிக்கூடம், கூட்டுறவு நிறுவனம் ஆகிய மூன்று அடிப்படை ஸ்தாபனங்கள் அவசியம், கோவை மாவட்டத்தில் அனுப்ப பாளையம் பித்தளைப் பாத்திரத் தொழிலாளர் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விவரிக்கிறது இக்கட்டுரை. —ஆசிரியர்.]

1958-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி காலையில் பெங்களூர் கிராமத் தொழில் பயிற்சி நிலைய முதல்வர் அங்கே பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த நாங்கள் ஒவ்வொருவரும் எந்தெந்த வட்டாரங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அறிவித்தார். எங்களிடையே நான் திருப்பூருக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறியவுடன், என் சிந்தனை பின்நோக்கி ஓடத்தொடங்கியது. பழைய நினைவுகள்—திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள்-அனுப்பபாளையம் பித்தளைப் பாத்திர தொழில் நிலையங்கள்—வீரபாண்டி அகில பாரத சர்வ சேவா சங்கம்—கதர் கிராமத் தொழிற் பயிற்சி நிலையம்—இவையெல்லாம் என் கண்முன் தோன்றித் தோன்றி மறைந்தன.

கல்லூரி படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவன் தன் எதிர்கால வாழ்வைப்பற்றியும், எப்படிப்பட்ட துறையில் நுழைவது என்பதைப் பற்றியும் பலவாறு சிந்தித்துக்கொண்டே தன் ஊரை நோக்கி எப்படி செல்வானோ, அதே போல, திருப்பூரில் போய் என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி எண்ணியவாறே புகை வண்டியில் உட்கார்ந்திருந்தேன்.

மாணவனாக இருக்கும்பொழுது "வாழ்க்கை" என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அது போலத்தான், பயிற்சி நிலையத்தில் இருக்கும்பொழுது, வட்டாரங்களில் பணி புரியும்பொழுது, நடை முறையில் தோன்றும் சிரமங்களும் தெரிவதில்லை...

..அனுப்பபாளையம் பித்தளை பாத்திர உற்பத்தி நடைபெறும் இடங்களில் முதலிடம் வகிக்கின்றது. ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ருபாய்களுக்கும் அதிகமான பித்தளை பாத்திரங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. 750 குடும்பங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இத் தொழிலை 35 வணிகர்கள் ரூ. 15 லட்சத்திற்கும் அதிகமான மூலதனமிட்டு நடத்தி வருகின்றனர். இவற்றிற்கு அடுத்தபடியாக இடையில் இருப்பவர்கள் "பட்டறைக்காரர்கள்". இங்ஙனம் 50 பட்டறைக்காரர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு பட்டறையிலும் 10 முதல் 25 தொழிலாளர்கள் வேலை செய்பவர்கள். இதைத் தவிர, குடும்பம் குடும்பமாக ,சிறு சிறு பட்டறைகளைச் சொந்தமாகவே சிலர் வைத்திருக்கிறார்கள்.

மூலப் பொருள்களான பித்தளைத் தகட்டை வாங்கி வணிகர்கள் பட்டறைக்காரர்களிடம் கொடுக்கின்றனர். பட்டறைக்காரர்கள் தங்கள் தங்கள் பட்டறைகளில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு பித்தளைப் பாத்திரங்களை உற்பத்தி செய்து திரும்ப வணிகர்களிடம் கொடுத்துக் கூலி பெற்றுக்கொள்ளுகின்றனர். தங்களிடம் வேலைசெய்பவர்களுக்கு கூலி கொடுத்துவிடுகின்றனர். பட்டறைகாரர்கள் வணிகர்களிடம் பெறும் கூலி "முழுக் கூலி" என்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் கூலி அரைக்கூலிஎன்றும் கூறப்படுகின்றது. இப்பொழுது "முழுகக் கூலி" 'அரைக்கூலி' என்ற சொற்கள் உணர்த்துவது போன்று ஒன்றுக்கும் பாதிக்கும் உள்ள வேற்றுமையைப் போன்ற ஏற்றத் தாழ்வு இல்லை. "முழுக் கூலிகும்" அரைக்கூலிக்கும் ஏற்ற தாழ்வு 50 ந.பை. முதல் 75 ந.பை. தான் இருக்கிறது.

மேற்கூறியவாறு இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

(1) வியாபாரிகள்.

(2) பட்டறைக்காரர்கள்.

(3) தொழிலாளர்கள்.

நேரடியாக உழைக்கும் தொழிலாளர்களுக்குப் பித்தளை தகடுகளை வாங்குவதற்கும் பித்தளைத் தகடுகளை பாத்திரங்களாக உற்பத்தி செய்யக் கருவிகளை வாங்கிக்கொள்வதற்கும் பொருள் வசதி அளிக்கப்பட்டால், வியாபாரிகள் பெறும் இலாபமும் பட்டறைக்காரர்கள் அடையும் இலாபமும் நேரடியாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கே கிடைக்கும். இந்த இரண்டு கட்டத்திலும் ஏற்படும் இலாபத்தை நேரடியாக உழைக்கும் தொழிலாளர்களுக்கே பெற்று தருவதற்குத் தான் கூட்டுறவு தொழிலாளர்ச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன.

ஏற்பட்ட இடையூறுகள்

ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது அவ்வளவு எளிதல்ல. அனுப்பபாளையத்தில் பித்தளைப் பாத்திரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைக்கப் பல இடையூறுகள் இருந்தன. நான் திருப்பூர் வட்டாரத்தில் தொழில் வளர்ச்சி அலுவலராக பணி ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே, கூட்டுறவு விஸ்தரிப்பு அலுவலர் திரு. ஆர். டி. ஆறுமுகம் என்பவர் பித்தளைப் பாத்திரத் தொழிலாளர் சங்கம் அமைக்க முயன்று, தொழில் வாணிகத் துறை அலுவலர்கள் சங்கம் நல்ல முறையில்

இயங்காதென ஐயுற்றதில், அந்த முயற்சியைக் கைவிட்டு விடாட்ர். தொழிலாளர்களும் இத்தகைய சங்கம் நல்ல முறையில் இயங்காதென அஞ்சினர். தனிப்பட்ட வியாபாரிகள் ரூ. 25,000 முதல் ரூ. 1,00,000 வரை மூலதனமிட்டு தொழில் நடத்தும்போது, அரசாங்கம் கொடுக்கும் ரூ. 25,000-ஐ வைத்துக்கொண்டு தொழில் நடத்த இயலாதென அவர்கள் கருதினர். மேலும், தொழிலாளர் ஒவ்வொருவரும் பட்டறைக்காரர்களிடமும் வியாபாரிகளிடமும் ரூ. 100 முதல் ரூ. 250 வரை கடன் பட்டிருந்தனர். இந்தக் கடனைத் திரும்பக் கொடுக்காமல், வேறு இடங்களுக்கு இவர்கள் வேலைக்கு செல்ல முடியாது. இப்படி கடன்பட்டவர்களை அங்கத்தினர்களாக கூட்டுறவு சங்கத்தில் சேர்த்துக்கொண்டு தகடு கொடுப்பதும், முறையுமில்லை; பூசலுக்கும் இடமாகும். அத்துடன் வியாபாரிகள் சங்கத்தை வளரவிடாது பெரும் நஷ்டத்தை உண்டு பண்ணி நசுக்கி விடவும் முடியும். சேலத்தில் பாத்திரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் தோன்றி அழிந்து போனது, பலருடைய மனதை விட்டு அகலாத நேரம் அது.

சங்கம் அமைப்பு திட்டம் அனுப்பிய நாளுக்கும் சங்கம் பதிவு செய்து வேலை தொடங்கும் நாளுக்கும் நீண்ட இடைவேளை இருப்பதை தவிர்க்க முடியாது. இந்த இடைக் காலத்தில் சங்கம் அமைப்பதை விரும்பாத வியாபாரிகள் சங்கத்தில் சேர முன்வரும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காது பழிவாங்கக் கூடுமென்று தொழிலாளர் அஞ்சினர். அதனல், சங்கத்தில் சேர்ந்து கொள்ள அவர்கள் முன்வரவில்லை.

இவ்வளவு இடையூறுகளுக்குமிடையே சங்கம் அமைக்க சாதகமான சூழ்நிலையும் இருந்தது. சங்கம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் பலருடைய உள்ளத்தில் நிலைத்து நின்றது. சங்கம் அமைப்பதில் திரு. ஏ. வி. பழனிசாமி கவுண்டர் என்ற நிலக் கிழார் பெரிதும் அக்கறை காட்டினர். இவருக்கு இப் பகுதியில் நல்ல மதிப்பும் செல்வாக்கும் உண்டு. இவரைத் தலைவராகக் கொண்டு சங்கம் இயங்கினல், சங்கத்திற்கு வியாபாரிகள் இடைஞ்சல் கொடுக்க முன் வரமாட்டார்கள். பட்டறைக் காரர்களுக்கும் (முழுக் கூலிக்காரர்களுக்கும்) தொழிலாளர்களுக்கும் (அரைக் கூலிக்காரர்களுக்கும்) கூலியில் ஏற்றத்தாழ்வு பெருமளவில் இல்லை. அதனல் பட்டறைக் காரர்கள் சங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள். 15 லட்சம் மூலதனமிட்டு தொழில் நடத்தும்பொழுது சங்கம் வியாபாரிகளுக்கு போட்டியாக வரமுடியாதென வியாபாரிகள் கருதினர். அதனல் சங்கம் அமைப்பதை ஒரு பொருட்டாக அவர்கள் கருதி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. "முப்பத்தைந்து கடைகளோடு முப்பத்தாறுவது கடையாக சங்கம் இருந்து விட்டுப்போகட்டும்" என்றே சில வியாபாரிகள் அலட்சியமாகப் பதில் கூறினர்.

சங்கத்தின் துவக்கம்

தொடக்கத்தில் திரு. எஸ். கே. மாரப்பன் என்ற தொழிலாளர், சங்கம் அமைப்பதில் பெரிதும் உற்சாகம் காட்டி உதவினர். என்னேடு கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் திரு. ஆர். டி. ஆறுமுகம் என்பவரும் இடையருது உழைத்ததின் பயனக, சங்கம் 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதி பதிவு செய்யப்பட்டது. 1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி அனுப்பபாளையம் பித்தளைப் பாத்திரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் தொழில் வணிகத்துறை உதவி இயக்குநர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி அவர்களால் முறைப்படி துவக்கி வைக்கப்பட்டது.

ஐம்பத்தேழு அங்கத்தினர்களை தேடிப் பிடித்து சங்கத்தை ஆரம்பிப்பதற்குள் பகீரதப் பிரயத்தனமாகி விட்டது. இப்படி ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தின் வளர்ச்சி வியக்கத்தக்க முறையில் இருந்தது. கீழ்க்கண்ட சில புள்ளி விவரங்கள் சங்க வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன :—

	உறுப்பினர் எண்ணிக்கை	பங்குத் தொகை	சிக்கன நிதி
I		ரூ.	ரூ.
(1) சங்கம் ஆரம்பித்த போது	57	12,060	..
(2) 31—3—60-ம் தேதியன்று.	81	16,900	827
(3) 31—3—61-ம் தேதியன்று.	162	33,910	3,988
(4) 31—3—62-ம் தேதியன்று.	160	45,770	4,216

II—	1959—60	1960—61	1961—62
	ரூ.	ரூ.	ரூ.
உற்பத்தி ..	84,851	3,50,673	4,36,554
விற்பனை ..	85,042	3,83,592	3,94,674
கூலி கொடுத்தது	14,183	63,675	71,393
இலாபம் ..	165	28,000	19,826

வியக்கத்தக்க வளர்ச்சி

இன்று "நான்" "நீ" என்று முந்திக்கொண்டு சங்கத்தில் சேர ஓடி வருகின்றனர். காலம் மாறிவிட்டது. அன்று ஐம்பத்தேழு அங்கத்தினர்களைத் தேடிப் பிடித்து இழுத்து வந்து, பங்குத் தொகைக்காக பணமும் கொடுத்து சேர்த்த நிலை மாறி, இன்று சேர வருபவர்களை "சேர்த்துக்கொள்ள இப்பொழுது; இயலாது. பொறுத்திருங்கள், காலம் வரும்" என்று கூற வேண்டிய நிலை வந்துவிட்டது.

சங்கத்தை விரிவு படுத்துவதற்கு பலகட்ட திட்டம் (Phased Programme) ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜூன் 1963-க்குள் 750 குடும்பங்களையும் கூட்டுறவு சங்கத்தின்கீழ் கொண்டுவர திட்டமிடப் பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணை இத் திட்டத்தை நன்கு விளக்கும் என நம்புகின்றேன்;—

சங்க உறுப்பினர்கள் தொகையை உயர்த்துவது என்ற திட்டப்படி, தொழிலாளர்கள் சங்க உறுப்பினராக கீழ்க் கண்ட தொகையில் உறுப்பினராக இருப்பர்—

1960-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி—150.

1961-ம் வருடம் ஜுன் மாதம் 30-ந் தேதி.—250.

1961-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி—350.

1962-ம் வருடம் ஜுன் மாதம் 30-ம் தேதி—450.

1962-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி—600.

1963-ம் வருடம் ஜுன் மாதம் 30-ந் தேதி—750.

கொடுக்க உத்தேசித்துள்ள கடன்

			பங்குக் தொகைக் காக.	மூலத்தனத் திற்காக.
			ரூ.	ரூ.
1—7—1960	..	..	14,000	1,50,000
1—1—1961	..	..	20,000	1,50,000
1—7—1961	..	..	20,000	1,50,000
1—1—1962	..	..	20,000	2,50,000
1—7—1962	..	..	30,000	5,00,000
1—1—1963	..	..	30,000	3,50,000
மொத்தம் ..			1,34,000	15,50,000

இன்று சங்க வளர்ச்சிக்கு தடையாக இருக்கக் கூடியவை—

(1) போதுமான அளவிற்கு பித்தளைத் தகடு கட்டுப் படுத்தப்பட்ட விலையில் கிடைப்பதில்லை.

(2) வெளியில் உள்ள வியாபாரிகளுக்கு கட்டுப்படுத்தப் பட்ட விலையில் தகடுகள் அதிகப்படியாக கிடைக்கும் பொழுது, சங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு 2½ டன் தகடுகள் மட்டும் கிடைப்பதால், வியாபாரிகளுடன் போட்டி போடு வதற்கு இயலவில்லை.

(3) நேரடியாக வேலை செய்யும் தொழிலாளர்களிடம் கருவிகள் இல்லாததாலும், அவர்கள் கடன்பட்டிருப்பதா லும், யாருக்காக சங்கம் நிறுவப்பட்டதோ, அவர்களுக்கு அதிகமாகப் பயன்பட முடியவில்லை.

இறுதியாகச் சொல்லப்பட்ட இக்குறையை அகற்றுவதற் காக, சங்கத்தை விரிவு படுத்துவதற்காக வரையப்பட்ட திட்டத்தில் தொழிற் கூடம் ஒன்று அமைப்பதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. இதனால், கருவிகள் இல்லாத தொழி லாளர்களுக்கு தொழிற்சாலையில் வேலை கொடுக்க இயலும். மேலும், இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி முறையை மாற்றுவதற்கும், உற்பத்தியின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 22,100 செலவில் பாத்திரத் தொழிலாளர்களுக்கு ஒரு சேவை நிலையம் (Service Centre) அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட இருக்கும் தொழிற்சாலையோடு இதுவும் பின்னர் இணைக்கப்பட்டுவிடும்.

1959-ம் ஆண்டு சங்கத்தை ஆரம்பித்தபொழுது, சங்கத் தின் நிதி ரூ. 40,060 ஆக இருந்தது. இன்று சங்கத் தின் நிதி ரூ. 5,25,352 ஆக பெருகியுள்ளது (இந்த தொகையில் வட்டார வளர்ச்சி; திட்டத்தின் கீழ் கொடுப்பட்டுள்ள ரூ. 22,100-ம் சேர்த்துள்ளது).

சங்க வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெரியோர்கள்

சங்கம் இந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்றால் அதற்கு சங்கத் தலைவர் திரு எ. வி. பழனிசாமி கவுண் டரின் நேர்மையும், ஊக்கமும், திறமையும், சங்கச் செய லாளர் திரு வி. நாராயணசாமியின் கடும் உழைப்பும் திறமையும், சங்க நிர்வாகஸ்தர்களின் ஒத்துழைப்பும் கடமையுணர்ச்சியும் மிகச் சிறப்பான காரணங்களாகும். அது மட்டுமல்ல; வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரி யும் அலுவலர்களின் கண் காணிப்பும் அறிவுரைகளும் இன்றியமையாக் காரணங்களாகும்.

" வெற்றியைப் போல் வெற்றி தேடி தருவதொன்று மில்லை " (Nothing succeeds like success) என்று கூறுவார்கள். அதுபோல சங்கம் நல்ல முறையில் நடை பெறுவதைக்கண்டு பொதுவாக தொழில் வணிகத் துறை இயக்குநரும், குறிப்பாக தொழில் வணிகத் துறை இணை இயக்குநர் திரு டி. மரிய சூசை அவர்களும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். இச்சங்கத்தை முன்னணியில் நிறுத்த பெரு முயற்சி எடுத்துள்ளனர். இணை இயக்கு நரின் ஆலோசனைகளாலும் உதவிகளாலும் சங்கம் பெரிதும் பயனடைந்துள்ளது.

சங்கத்தின் நிதி ரூ. 40,060-லிருந்து ரூ. 5,25,352 ஆக உயர்ந்துள்ள தென்றால், சங்கத்தை விரிவுபடுத்துவதற்குப் பலகட்ட (Phased Programme) திட்டம் ஒன்று உரு வாகியிருக்கிறதென்றால், இதற்கெல்லாம் இணை இயக்குநர் திரு டி. மரியசூசை அவர்களின் பெரு முயற்சியே காரணம் ஆகும்.

" வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல் "

என்ற குறளுக்கு ஏற்ப நல்ல தலைவரைத் தேர்ந் தெடுத்து அதற்கு உரியவராக பயிற்றுவித்தும்

" எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகும் மாந்தர் பலர் "

என்ற நிலை ஏற்படாது, தொடர்ந்து சங்கம் தனிச் சிறப்புடன் புகழ் பெற்று நிலைத்து நிற்க வேண்டும் மென்ற அவாவை அழியாது தூண்டிவிட்டு நேர்மை என்றும் தலைதூக்கி நிற்கச் செய்து சங்கத்தின் வெற்றிக்கு வழி வகுத்துக்கொடுத்த பெருமை திருப்பூர் வட்டா ரத்தைச் சேரும்.

மராட்டிய மாநிலத்தில் கிராமிய மறுமலர்ச்சி

சிருடன் விழா எடுத்த சின்னஞ்சிறு கிராமம்

(மராட்டிய மாநிலத்தில் முதியோர் கல்வி இயக்கம் எந்த வகையில் பரவியது, இந்தச் சீரிய பணியில் சின்னஞ்சிறு கிராமமான 'ராசே'வின் பங்கு எத்தன்மையது, என்பது பற்றி விளக்குகிறது இக் கட்டுரை. 'பஞ்சாயத்து ராஜ்' ("Panchayati Raj") பத்திரிகையில் வெளி வந்த கட்டுரையின் சுருக்கமே இது. 'கிராம நலம்' வாசகர்களுக்கு, இக் கட்டுரையில் காணப்படும் விஷயங்கள் பயன்படும் எனக் கருதி வெளியிட்டுள்ளோம்.

—ஆசிரியர்.)

1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 22-ம் நாள் சின்னஞ் சிறு கிராமமான "ராசே"வின் வரலாற்றிலே பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். "ராசே" சிறு கிராமம். மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ளது. பூனா-நாசிக் பாதையிலிருந்து பத்து மைல் களுக்கப்பால் உள்ள ஒரு குக்கிராமம். ஜனத் தொகை ஆயிரம்தான். மூர்த்திதான் சிறிதே தவிர, அதன் கீர்த்தி பெரிது. படிப்பில்லாத நிலை அந்தக் கிராமத் திலிருந்து அறவே அகற்றப்பட்டு விட்டது. பள்ளிக்கூடம், பஞ்சாயத்து, கூட்டுறவு ஸ்தாபனம், இம் மூன்றும் கிரா மியவாழ்வின் அடிப்படை ஸ்தாபனங்களாகும். இம் மூன்று துறைகளிலும், இந்த சின்னஞ் சிறு கிராமம் மகத்தான முன்னேற்றத்தினைக் கண்டுளளது. தனிப் பட்ட குடும்பத் திட்டங்களின் அடிப்படையின் பேரில், இக் கிராமம், உணவு உற்பத்தித் திட்டம் ஒன்றினை உருவாக்கி, தரமான முறைகளைக் கையாண்டு, உணவு உற்பத் திப் பெருக்கத்தில் பாராட்டத் தகுந்த வகையில் நல்ல முன்னேற்றத்தினைக் கண்டுள்ளது. அத்துடன், எல்லா அடிப்படைத் தேவைகளும் இக் கிராமத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. :— குடி தண்ணீர் வழங்க கிணறு, குழந்தைகள் விளையாடப் பூங்கா, வாலிபர் சங்கம், மகில மண்டலி, பஜனைக்கூடம், அதுமட்டுமல்ல, தெருக்களில் மின்சார விளக்கு வசதிகள்—எல்லாம் இக் கிராமத்தில் உள்ளன. முன்னேற்றப் பாதையில் ஏறு நடைபோடும் இச் சின்னஞ்சிறு கிராமம், தன்னுடைய சாதனைகளை—அழகாகவும் அற்புதமாகவும் அதே சமயத் தில்—அமைதியாகவும்—ஒரு விழாவாகவே, எப்ரல்மாதம் 22-ம் தேதியன்று கொண்டாடியது.

"கிராம கௌரவம்" அந்த விழாவின் அடிப்படையாக அமைந்தது. கிராம மக்கள் ஒவ்வொருவர் முகத்திலும் அன்று மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. குழந்தைகள்—பெரியவர்கள்—சிறுவர் சிறுமிகள்—பருவத்தின் வாசற் படியிலே எட்டி நிற்கும் இளங் காளையர், கன்னிகள், கிராம ஆண் பெண் சமுதாயம் முழுதுமே—விழாவில் கலந்துகொண்டது. வண்ண வண்ண ஆடைகள் அணிந்து, மலர் முகத்துடன், கிராம மாதர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

எங்கும் எழில் கொஞ்சியது

கிராமம் பூராவும் தும்பு, தூசி ஒன்றுகூட இல்லாமல், சுத்தமாகக் காட்சி யளித்தது. தெருக்கள் எல்லாம் சுத்தப்படுத்தப்பட்டு, கண்ணடிபோல் காட்சி யளித்தன. எங்கு பார்த்தாலும் தோரணங்கள், வளைவுகள், அலங் கார முகப்புகள்—ஒவ்வொரு வீட்டின் எதிரிலும் அழ கழகான கோலங்கள்—எங்கும் எழில் கொஞ்சிக்கொண் டிருந்தது.

விழாவுக்கு வந்திருந்த அதிகாரிகள்—தலைவர்கள் ஆகியோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந் திருந்தன சிறுவர்களின் சாரணர் சிறுமியரின் துணைப் படை (Guides) அணிவகுப்புக்கள். வந்திருந்த விருந்தினரை ஊருக்கு அழைத்து வந்த ஊர்வலத்தின் "ஷெனய்" வாத்திய இசையும், வாலிபர்களின் விளையாட் டுப் பயிற்சியும் சிறப்புற அமைந்திருந்தது. ஊர்வலம் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வீதிகளின் வழியே "ஜவகர்" சதுக்கத்தை அடைந்தது. முதியோர் கல்வியினால் எழுத்தறிவு பெற்ற எண்பது ஆண்களும் பெண்களும் அந்த விழா வெளியில் முதலிடம் அளிக் கப்பட்டு முன் வரிசையில் அமர்த்தப்பட்டனர். வர வேற்புரைக்குப் பின்னர், புதிதாக எழுத்தறிவுப் பெற்ற அவர்களுக்குப் பல பரீட்சைகள் நடத்தப்பட்டன. முதலில் ஒரு பொருளைக் கொடுத்து அது குறித்து பத்து வரிகள் எழுதும்படி கேட்கப்பட்டனர். பின்னர் கரும்பலகையில் எழுதப்பட்ட விஷயத்தைப் படிக்கும் பரீட்சை நடந்தது. எழுதவும் படிக்கவும் பரீட்சை நடந்த பின்னர், குறித்த ஒரு பொருள் பற்றி சிறு சொற்பொழிவு நிகழ்த்தக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அந்த எளிய கிராம மக்கள்—முதியவரும் குடும்பப் பெண்களும் நிகழ்த்திய அந்த மேடைப்பேச்சு ரசிக்கததக்க முறையில் அமைந்திருந்தது. அது அவர்களுடைய வாழ்வில் அமைந்த முதல் மேடைப் பேச்சாக பலருக்கும் அமைந்திருந்தால், பலர் முன்னி லையில்—சபை அச்சம் முதலியன தடுக்க, அந்த நிகழ்ச்சி அவர்களுடைய ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாக விளங் கியது. இந்த விழாவில் குறிப்பிடத்தக்க மற்றொரு அம் சம், அவ்வூரில் அமைந்திருந்த மகிள மண்டலி, வாலி பர் சங்கம், சாரணர் படை, சிறுமியர் துணைப்படை முத லான பொதுப்பணியாற்றும் நிறுவனங்கள் பலவும் ஒற் றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் விழாவில் கலந்து கொண்டு தம் பங்கினைச் செய்ததாகும்.

மாவட்டப்பள்ளிகளின் பார்வையாளரின் முடிவுரையு டன் விழா நிகழ்ச்சிகள் நிறைவெய்தின. அறிவொளி

யைக்குறிக்கும் முதல் ஒளிவிளக்கை மாவட்டப்பள்ளிகளின் மேற் பார்வையாளர் ஏற்றிவைக்க, அதிலிருந்து புதிதாக எழுத்தறிவு பெற்ற கிராமமக்கள் தம்விளக்குகளையும் ஏற்றி, தம் வாழ்நாள் முழுதும் அவ்வறிவொளி மங்காது காப்பதாகவும், கிராம ஒற்றுமையைக் காப்பதாகவும், கிராமத்தின் உற்பத்தியைப் பெருக்குவதாகவும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

" அருகு போல் வேர்விட்டு
ஆல் போல் தழைத்து . . . "

முதியோர் கல்வியைப்பரப்புவது என்று ஆரம்பத்தில் சின்னஞ் சிறு உருவாக ஆரம்பித்த இந்த இயக்கம், பல்வேறு அனுபவங்களுக்குப் பிறகு, பலவித சோதனைகளையும் இக்கட்டையும் கடந்து, இன்று பிரமாதமான வெற்றி கண்டு, பெரும் அளவில் பரவியுள்ள பெரும் இயக்கமாகப் பரிணமிக்கிறது. கடந்த காலத்தில், எவ்வளவோ பணம் செலவழித்து, எத்தனையோ கல்வி முகாம்களை ஏற்படுத்தி, முதியோர் கல்வியைப் பரப்ப திட்டங்கள் போடப்பட்டன. ஆனால், அவையத்தனையும் முழுவெற்றியினை அடையவில்லை. ஒரு குறிப்பிட்ட காலவறையறைக்குள், நூற்றுக்கு நூறு பேரையும் கல்வி பெற்றவர்களாக மாற்றியமைத்த ருஷ்யா போன்ற நாடுகளின் சாதனை நம்மை பிரமிக்க வைத்தது உண்மைதான். ஆனால், மகாராஷ்டிரத்தில் சதாராவில் நடைபெற்ற இந்த பரிசோதனை, புதிய நம்பிக்கையையும் புதிய எழுச்சியையும் உண்டாக்கிவிட்டது. கிராமத்தில் படிக்கத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் தாங்களாகவே முன்வந்து கல்வி பரப்புதலை தங்களுடைய முக்கிய கடமையாகக் கொண்டு, சமூகசேவை போல் அதைக் கருதி, பணியாற்றுவது என்பது புது நம்பிக்கையை ஊட்டாமல் வேறு என்ன செய்யும்? ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் சராசரி முப்பது அல்லது நாற்பது பேர்களாவது படித்தவர்கள் கிடைத்தார்கள். ஒவ்வொருவருடைய பொறுப்பில் ஒன்று அல்லது இரண்டு பேர் படிக்கதாவர்கள் ஒப்படைக்கப்பட்டார்கள். மூன்று நான்கு மாதங்களுக்குள் அந்த நபரை எழுதப்படிக்கத் தெரிந்தவராக ஆக்கிவிடவேண்டும். படித்த சிறு பையன், படிக்காத, வயதான தன் தந்தைக்கோ அல்லது தன் தாய்க்கோ படிப்பு செல்லிக்கொடுப்பது என்பது எவ்வளவு விசித்திரமான காட்சி! அறிவொளி பரப்பும் இந்த இயக்கம் பூராவும் கல்வித் துறையினரால் கண்காணிககப்படுகிறது. பள்ளி ஆசிரியர் நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று மணி நேரம் இந்தத் துறையில் கிராம மக்களுக்குகாக, ஒரு காசு கூட ஊதியமாகப் பெறுமல், செலவழிக்கிருர். ஊதியம் பெற்றுக் கொண்டு கல்வி பரப்பும் வேலையை ஆசிரியர்களும் சமூகத் தொண்டர்களும் செய்து விடுகின்றவரையில், இந்த இயக்கம் முழு வெற்றியைப் பெறவில்லை. கிராமச் சமூதாயத்தினிடமே இந்த பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டதுமே, ஆசிரியர்கள் ஊதியம் பெறுதல் என்ற பிடியிலிருந்து விடுபட்ட உடனே இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக மாறத் தொடங்கி புது உணர்ச்சியும் உத்வேகமும் பெருகி, ஒவ்வொரு கிராமத்திலும், தங்களுடைய சொந்த கடமை என்று கருதி காரியங்கள் நடைபெறவே கல்வி பரப்பும் இந்த இயக்கம் மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்டது. மராட்டிய மாநிலத்தில் கல்வி வளர்ச்சி பெருகிய கதையின் சுருக்கம் இதுதான். 1961-ம் ஞூ எப்ரல்மீ 17-ந் தேதி சிவனேரியில் கிராம அளவில் நடைபெற்று வந்த இயக்கம் மாநில அளவில் ஏற்றுச் செய்யப்பட வேண்டிய இயக்கமாக மாறியது. முதல் ஆண்டில் சுமார் 10 லட்சம் படிக்காத மக்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. அரசாங்கத்திற்கு இதனுல் ஒரு காசு கூட செலவு இடையாது. படித்த மக்கள் ஒவ்வொருவருக்கும் தலைக்கு ஒரு ரூபாய் என்ற அளவில்தான் செலவு ஏற்பட்டது. பழைய முறையின்படி, அரசாங்கம் மானிய உதவி முறையின் கீழ் ஒருவருக்கு எழுதப்படிக்கச் சொல்லித்தர தலைக்கு பத்து ரூபாய் என்று செலவாகியது. பத்தாண்டுகளில் 50,000 பேர்களுக்குமேல் இந்த எண்ணிக்கை போகவில்லை!

கிராமத்தின் அச்சாணி—பள்ளிக்கூடம்

முதியோர் கல்வியினைப் பரப்புவதில், குறைந்த செலவில், அதிகப்படியான பயனை பெறுகின்ற முறை இப்போது மக்களுக்குப் புரிந்துவிட்டது. அது மட்டுமல்ல—ராசே கிராமம் கொண்டாடின விழாவில் கல்வியும் சமுதாய நலமும் ஒன்றோடொன்று இணைந்து இழைந்தோடுகிற அற்புதமான ஓர் சூழ்நிலை உருவாகிவிட்டது எனலாம். கிராமத்தில் உள்ள பள்ளிச்சாலை வெறும் படிப்பு சொல்லிக் கொடுக்கின்ற இடம் மட்டுமல்ல, கிராமச் சமுதாயத்தின் எல்லாக் காரியங்களுக்கும் அசச்சாணியான ஓர் இடம்; கிராம ஆசிரியர், கிராம மக்களின் வழிகாட்டியாகப் பரிணிமிக்கக்கூடியவர் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கணி போல் புரிந்து விட்டது. கல்வி பரப்புவது இந்த இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் என்றும், கிராமத்தின் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் பெருக வேண்டும் என்பதே இதன் அடிப்படைத் தத்துமாகும்.

[" பஞ்சாயத்து ராஜ் " ஜூன் இதழில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றின் சுருக்கம்.]

[Reproduced from " Panchayati Raj "].

"கடிதக் கருத்தரங்கு"

1. குடும்பக் கட்டுப்பாடு

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் சென்னையில் நடந்த மாநில பஞ்சாயத்து மகாநாட்டிற்கு சென்றுவர எனக்கு வாய்ப்பு கிடைத்தது பற்றி பெருமை அடைகிறேன்.

முதல் நாள் நடந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் மகா நாட்டிலும், மறு தினம் நடந்த மாதர் நல மகா நாட்டிலும் கலந்து கொண்டதில் இந்திய அரசாங்க அமைச்சர்கள், தமிழ்நாடு அரசாங்க அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இவர்கள் மூலம் அரிய விஷயங்களையும் சிறந்த கருத்துக்களையும் தெரிந்துகொள்ள ஏதுவாயிற்று. முக்கியமாக, மக்களுக்கும், தங்கள் கிராம முன்னேற்றத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளையும், தங்களுக்கு புதிதாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளை உணரவும், மேலும், சமூக நலத் திட்டங்களில் பல துறைகளிலும் பெண்கள் பங்கு கொண்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டியதின் அவசியத்தையும் அறிய முடிந்தது. இதனால், கிராம முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஊக்கமும், பொது நல சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேலும் அதிக ஆர்வமும் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

நம்முடைய மார்த சமுதாயம் குடும்ப வேலைகளும், குழந்தைகள் பராமரிப்புமேதான் தங்கள் கடமை என்ற பழைய மனப்பான்மையை மாற்றிக் கொண்டு, தங்களுக்கும் அரசியலிலும் பங்கு உண்டு, என்பதை உணர்ந்து, அதற்கென அரசாங்கம் அளித்துள்ள உரிமைகளை சரியான முறையில் அறிந்துகொண்டு, தங்களையும், சமூகத்தையும் முன்னேற்றமடையச் செய்ய அவர்களால் இயன்ற அளவு முயற்சி எடுத்துக்கொண்டு ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்க முன்வரவேண்டும் என்பதே என் விருப்பம். மேலும்,குடியாட்சித் திட்டமானது வாய் இனிக்கப் பேசும் வேதாந்தமல்ல, கண் கூடாக நடைமுறையில் செயல் படுத்தப்படும் காரியம் என்பதை இம்மாபெரும் மகாநாடானது எடுத்துக் காட்டியது.

மகா நாட்டில் நிறைவேறிய மூன்று தீர்மானங்களில் ஒன்றாகிய "ஜனத்தொகையைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தல்" என்பதை, **கோத்தகிரி பஞ்சாயத்து யூனியன்** நல்ல முறையில் திறம்பட செயலாற்றிவருகிறதென்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோத்தகிரி யூனியன் வட்டாரமானது பெரும்பாலும் பழங்கால பிற்போக்கு வகுப்பினரடங்கிய கிராமங்களையும், படிப்பறிவு அதிகமில்லாத கூலிவேலையாட்களிருக்கும் எஸ்டேட்டுகளையும் உடையதாகும். குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும், அதனால் தாங்கள் அடையும் பலனை மட்டுமல்லாமல், நாட்டிற்கே பேருதவி செய்யும் வாய்ப்பை படித்தவர்களுக்கு எடுத்துக் கூறியும், சிறிதும் ஐயமின்றி நம்பிக்கையுடன் அவர்கள் முன்னுக்கு வருவதே ஓரளவு சிரமமாயிருக்கிறது. அந்த நேரத்தில், படிப்பில்லாத இம்மக்களிடம் அணுகி, அதிலும் பிரத்தியேகமாக பெண்களிடம், அவர்களுடைய மன நோக்கத்தை மாற்றுவது எவ்வளவு கடினமென்பதை நான் கூறவேண்டிய அவசியமில்லை.

பெண்கள் பிரசவ காலத்தில் தான் ஆப்ரேஷன் செய்து கொள்ளக் கூடுமாதலாலும், அவர்கள் ஆஸ்பத்திரிலேயே ஆப்ரேஷனுக்குப் பிறகு ஒரு வார காலம் இருக்கவேண்டியிருப்பதாலும் பெரும்பாலும் அவர்கள் இதை விரும்பவில்லை. கிராம சுற்றுப்புற பெண்களிடம் நான் பழகி ஆராய்ந்து பார்த்ததில், அவர்கள் மன நிலையானது மேலும் தங்கள் குடும்பத்தில் பெருக்கம் கூடாதென்பது பெரிதளவுமுள்ளது. அப் பெண்கள் மூலமாகவே தங்களுடைய கணவன்மார்களுக்கு அறிவுரைகள் வழங்கச் செய்து அவர்களை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள தடவடிக்கைகள் இப்பஞ்சாயத்து யூனியனில் எடுக்கப் பட்டு இவ்விஷயத்தில் நல்ல பலன் கிடைத்துள்ளது. அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவ அதிகாரிகளுக்கு பிரதி மாதமும் விசேஷ அலவன்ஸ் மற்ற தனிப்பட்ட டாக்டர்களுக்கு கொடுப்பது போன்று செய்தால் தான் அவர்களும் ஓர் உற்சாகமும், ஊக்கமும், ஆர்வமும் இருக்குமென்பது என் கருத்து. இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து ஆவனச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மகா நாட்டிற்குப் பிறகு, இப் பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தில், மாதர் நல முன்னேற்றத்திற்காக, 30 மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு எல்லாம் நல்ல முறையில் இயங்கிவருகின்றன.

அன்புள்ள,

22-5-62.
கோத்தகிரி.

சீதா சூரியநாராயணன்,
கோத்தகிரி,
நீலகிரி மாவட்டம்.

2. "கேடில் விழுச்செல்வம் கல்வி"

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

நமது கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி அவர்கள் 1962-ம் ஆண்டு மே மாதம் 17-ம் நாள் சென்னையில் நடைபெற்ற வட்டாரக் கல்வி வளர்ச்சி அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக வருகை தந்திருந்த சமயம், தம்முடைய வருங்காலச் சீடர்களான நல்லாசிரியர்களுக்கு வழங்கிய அறிவுரை "நீங்கள் பூமிக்கு உப்பாயிருங்கள்" என்பதாகும். அவர்களின் அரிய உரையைக் கேட்டு, சிந்தனையில் தெளிந்த சில கருத்துக்களை எழுதியுள்ளேன்.

அறுசுவையில் முதன்மையானது, மனித வாழ்க்கைக்கே இன்றியமையாதது உப்பு. உணவு இன்றேல் உயிர் வாழ்தல் அரிது, அத்தகைய உணவுக்கு உப்பு உயிர்நாடி போன்றது. இது காரணம் பற்றியே "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்றார்கள். கிராமங்களில் பணியாற்றச் செல்லும் நாம், அங்குள்ள ஆசிரியப் பெருமக்களுக்கும் மக்களின் நலம் கருதி உழைக்கும் சேவையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் இன் முகங்காட்டி, கனி சொல் கூறி நலம் பெருக்குபவராக இருத்தல் வேண்டும். நமது யோசனைகளும், கருத்துக்களும், அவர்களுக்கு உப்பாக இருந்து உதவவேண்டும். இதுவே நாம் உப்பாக இருக்கவேண்டும் என்பதன் பொருளாகும்,

உப்பு பண்டங்களைப் பாதுகாக்கும்

தன்னை அடைந்த பண்டங்களைக் கெடாது பாதுகாக்கும் குணமுடையது உப்பு. ஊறுகாய், வற்றல்கள் முதலியன வற்றிற்கு உப்பிட்டு உலர வைக்கிறதை அறியாதார் யார்? இதைப் போலவே நாமும் நம்முடைய நற்குண நற்செயல்களால் நம்மைச் சேர்ந்த ஆசிரியர்களையும், பொதுமக்களையும் காத்தல் வேண்டும். அவர்களை, அவர்கள் உள்ளத்தை உயர்ந்த பண்பாடுகளால் மேலும் உயர்வடையச் செய்யவேண்டும். வாழ்க்கையின் ஊடே குறுக்கிடும் ஜாதி சமயக் கட்சிப் பூசல்களுக்கு கிராம மக்கள் ஆளாகாமல் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

> "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி"

என்ற தமிழ் மறைக்கிணங்க நம் ஒழுக்கத்தைப் பேணி வளர்த்தல் நம்முடைய முதற்கடமையாகக் கொள்ள வேண்டும். அப்போது தான், நாம் கிராமங்களில் நல்லதோர் சூழ்நிலையை உண்டாக்கினவர்களாவோம். நம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதும் அப்போது தான் முடியும். கிராம அபிவிருத்தியில் ஈடுபட்டுழைக்கும் நாம் பிற கட்சி காரியங்களினூடே புகுந்து விடாது. நம் பணியில், கொள்கையில், உறுதியாக நின்று நாம் செய்யவேண்டிய தொண்டை செய்யவேண்டும்.

பாகுபாடில்லாதது

சர்க்கரை முதலிய சுவைப்பொருள்கள் பணமுடையவர்களின் வீட்டில்தான் காணப்படும். ஆனால் உப்பு, தோட்டி முதல் தொண்டமான் வரை எல்லோர் வீட்டிலும் காணக்கிடைக்கக்கூடிய பொருள். இதைப்போலவே, நம்முடைய மகத்தான நற்பணி கிராம மக்கள் எல்லோருக்கும் பயனளிக்கக்கூடியதாயிருக்க வேண்டும். மாடி வீட்டு மாணிக்கத்திற்கும், குடிசை வீட்டு குப்பனுக்கும் யாவருக்கும் நம் சேவை பயன்தரக்கூடியதாக அமைதல் வேண்டும். "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற கருத்தை நினைவில் கொண்டு, மேற்படி தன்மை வளர, நாம் உப்பைப் போல் யாவருக்கும் உழைக்கவேண்டும். அதற்கு உப்பைப்போல நாம் எளிமையாகவும் இருக்க வேண்டும். முதன்மையாக நம்முடைய சேவை ஹரிஜனங்களிடையே, சிறப்பாக பரிணமிக்க வேண்டும். ஹரிஜன சேவை நமது ஆசிரிய சமூகத்தின் தலையாயக் கடமையாகும். சமூக ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை அகற்ற நம் கடமையைச் செம்மையுறச் செய்வோமெனில், நாம் எடுத்துக்கொண்ட நோக்கம் வெற்றியடையும் என்பது உறுதி. "உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ".

கரையும் தன்மையுடையது

பண்டங்களிலும் உணவுப் பொருட்களிலும் உப்பு கரைந்தால் தான் சுவையுண்டாகும். நம் சுவைக்காக உப்பு தன்னையே இழக்கிறது. இது உப்பிலிருந்து பெற வேண்டிய தியாக உணர்வாகும். தன்னலம் பாராது நம்மை வருத்தி, தாழ்த்தி நாம் நம்மை கிராம மக்களின் நலனுக்காகத் தியாகம் செய்யவேண்டும். "கிராம மக்கள் ஆயிரக் கணக்கிலே செத்தார்கள். இப்போது அவர்கள் வாழ்வதற்காக நாம் சாகலாம்." இது காந்தி மகானின் மணிமொழி. எனவே கிராமங்களில் பணியாற்றச் செல்லும் நாம் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி அருமையும் பாராது, அவமதிப்பும் கொள்ளாது, கருமமே கண்ணாயிருக்க வேண்டுமன்றோ! அப்போதுதான் நாம், காந்தி மகான் கண்ட கிராம ராஜ்யத்தை நிர்மாணிக்க முடியும்.

நமது நாட்டின் முதுகெலும்பு கிராமங்களே. கிராமங்கள் அழிந்தால் இந்தியா அழியும், கிராமத்தை இறைவன் உண்டாக்கினான். நகரத்தை மனிதன் உண்டாக்கினான். கிராம மக்கள் உழைத்து உற்பத்தியைப் பெருக்காவிட்டால் நகரம் நரகமாகும். இது போலவே கடவுள் பக்தர்களும், தேசபக்தர்களும், கிராம அபிவிருத்தியைப் பற்றி வற்புறுத்திக் கூறுகின்றார்கள். ஏன் இப்படி வற்புறுத்திப் பேச வேண்டும்? அவ்வளவு சிரேஷ்டமானதா கிராம அபிவிருத்தி? அதனால் நன்மையுண்டா? கிராமங்கள் உண்மையாகவே முன்னேறிக் கொண்டிருக்கின்றனவா? முன்னேறும் என்பதற்கு ஆதாரம் உண்டா நம்பிக்கை உண்டா என்பன போன்ற கேள்விகள் இங்கே எழலாம். இவ்விதக் கேள்விகளை ஆராய்ந்து. விடை காணுவதே கிராமம் என்பதின் இயல்பை அறிந்து கொள்வதாகும். இவற்றை உள்ளபடியே அறிந்து கொள்ளாமையால்தான், கிராமங்கள் நசித்து வந்தன. 1939-ம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சி புரியத் தொடங்கிய பின், இதனைக் கொண்டு கிராம புனருத்தாரணத்தில் அதிகக் கவனம் செலுத்தினர். கிராம அபிவிருத்தி

வேலையை நாட்டின் பிதா அண்ணல் காந்தியடிகள் தம் லட்சியத்தின் முதற்கடமையாக எடுத்துக் கொண்டார், எளிய வாழ்வை மேற்கொண்டார், இராமங்கள் முன்னேறாவிடில் சுதந்திரம், சுபிட்சம் என்ற வார்த்தைகளுக்கு அர்த்தமே கிடையாது என்று அவர் கூறுகிறார்.

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்பது பொய்யாமொழியாரின் பொன்னுரை. சாலைக் கற்கள் போன்றிருப்பவை கல்விக் கூடங்களே, வெள்ளையன் வெறி பிடித்த ஆட்சியினின்றும் நாடு விடுதலைப் பெற்ற பின்னும் மக்கள் படித்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு இருபத்தாறே. ஒரு நாடு எவ்வளவு தான் மற்ற ஏனைய செல்வங்களில் சிறந்திருந்தாலும், கல்விச் செல்வமின்றேல் கடைத்தேறாது.

ஆகவே, தாய் நாட்டைப் பெருமையுடன் காத்து, நற்குடி மக்களை உருவாக்கும் உயர் பணியில் ஈடுபட்டு உழைக்கும் ஆசிரியப் பெருமக்கள். கிராமப் பகுதியிலுள்ள மக்களின் வருங்கால வாழ்விற்கு வழிகோல வேண்டும்.

இவ்வகையில் ஆசிரியர்களின் சேவை மகத்தானது; உப்பின் சேவை போன்றது.

அன்புள்ள,

ஜெ. ராஜமாணிக்கம்
தலைமை ஆசிரியர்,
பஞ்சாயத்து யூனியன் உயர்துவக்கப் பள்ளி
அரியூர், வேலூர் வட்டம்.

—3—

"பயன் தரும் பயிற்சி"

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

1962-ம் வருடம் எப்ரல் மாதம் 19-ம் தேதி முதல் 1962 மே மாதம் 18-ம் தேதி வரை மைசூரில் நடைபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தரால்லாதவர் பஞ்சாயத்து நிர்வாகம் பற்றி அளிக்கப்பெற்ற பயிற்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றவர்களில் நானும் ஒருவன். இந்தப் பயிற்சிக்கு மைசூருக்கு வந்ததில், பல்வேறு மாநில வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள், பஞ்சாயத்து, விவசாயம், கால்நடை, கூட்டுறவு, முதலிய பலதுறைகளில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்கள், என்னைப்போன்ற உத்தியோகஸ்தராயில்லாத ஒரு சில தலைவர்கள் முதலிய பலருடன் பழகும் பெரும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். இது பலனும், அனுபோகமுள்ள பயிற்சிதான் எனக் கண்டேன்.

பொதுவாக, பல அலுவலர்கள் தாங்கள் பணியாற்றும் முறையில் கண்ட சிக்கல்களையும் தவறுதல்களையும், அனுபவங்களையும் மனம் விட்டுப் பேசும் வாய்ப்புக் கிடைக்கிறது. பின்பு, அவர்கள் எவ்வாறு தங்கள் பணியில் முன்னேற்றப் பாதையில் நன்முறையில் நடந்து செல்லும் வகையில் இப் பயிற்சி உதவும் என்பதை நாம் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டி நிலையிலுள்ளோம்.

எனவே, முக்கியமாக என்னை பொறுத்த வரையில், என் மனத்தில் ஒரு எண்ணம் முன்னோக்கி நின்றது. அதாவது, பல நன்பர்கள், இங்கு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் சமித்தி தலைவர்கள், தாலூகா போர்டு தலைவர்களுக்கும் கமிஷனர்களுக்கும் நிர்வாகத் துறையில் கருத்துவேற்றுமை ஏற்படுவதாகவும், அரசாங்க ஊழியர்கள், பொதுவாக கமிஷனர்கள், தங்கள் அரசாங்க ஆணைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப செயலாற்ற முடியாத நிலை ஏற்படுவதாக ஒரு எண்ணம் நிலவுவதை இங்கு கண்டேன்.

முதன் முதலில் தமிழ் நாட்டில் இவ்வாறு நிலை அநேகமாக இல்லை யெனக் கூறலாம். இப்படி கருத்து வேற்றுமை ஏற்படுவது அவரவருடைய தனி மன நிலையைப் பொறுத்தது. அரசாங்க ஊழியர்களிடையே, உதாரணமாக கலெக்டர், சப்கலெக்டர், தாசில்தார்கள், இவர்கள் ஒருவருக்கொருவர் கருத்துவேற்றுமை கொண்டு செயலாற்றுவதை நாம் கண் கூடாககாணவில்லையா? அதே மாதிரி, தலைவர்களையும் இந்த வர்க்கத்தினில் ஒருவராகக் கருதி, மாறுபட்ட சக ஊழியர்களுடன் பணியாற்றும் முறையைக் கையாண்டால், இந்த நிலை நாளடைவில் மாறுதலடைந்து, நல்ல முறையில் செயல்படும் என்பது என் தாழ்ந்த கருத்து. உண்மையும் கூட.

தலைவர்கள் பல்வேறு வாழ்க்கைத்துறையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். சில சட்டத் திட்டங்களைத் தெரிவதற்கு அவர்களுக்கு அதிக வாய்ப்பில்லாமல் இருக்கலாம். அவர்களை நிர்வாகத்துறையில் படிப்படியாகப் பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டியது அலுவலர்களின் மாபெரும் கடமையென நமது அரசாங்கம் சொல்லுகிறது. நானும் அதையே சொல்லக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக, நமது குடியரசு ஆட்சி முறையையே எடுத்துக்கொள்வோம். நிர்வாகத்தில் அனுபவமே இல்லாத மக்கள் தலைவர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்தனர். முதிர்ந்த அரசாங்க அலுவலர்களுடன் (ஐ. ஸி. எஸ். பட்டம் பெற்றவர்களை) சேர்த்து உழைக்கவும், அவர்களிடமிருந்து மிக உன்னத சேவையை பெறவும் மக்கள் தலைவர்கள் தெரிந்து கொள்ளவில்லையா? அலுவலர்களும் அதே மாதிரி தங்களை அதற்குத் தகுந்த மாதிரி ஈடுபடுத்திக் கொள்ளவில்லையா?

தேசபக்தி, அனுதாபம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இவையெல்லாற்றையும் விட, மனப்பண்பு மூலம் ஒன்றுபட்டு உழைத்து "மிகப் பெரிய ஜனநாயக அரசு இது" "மிக சிறந்த நிர்வாகம்" என்ற பெயரை நம் நாட்டிற்கு தேடி தந்து விட்டார்களல்லாவா?

அதே மனப்பாங்குடனும் கடமையுணர்ச்சியுடனும், நாமும் அண்ணல் கண்ட கிராமக் குடியரசை ஏற்படுத்த, நம்முடைய சமுதாயத்தை உலகிலேயே மிக சிறந்ததொரு சமுதாயமாக்க பாடுபடுவோமாக!

இந்தப் பயிற்சி இந்தக் கருத்தினைத் தான் என்னிடையே தோற்றுவித்தது.

அன்புள்ள,

எஸ். பி. ஏ. ராமசாமி,
தலைவர்,
பஞ்சாயத்து யூனியன் மன்றம், கோவில்பட்டி.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

அன்புள்ள ஆசிரியருக்கு,

கோவை மாவட்டத்திலுள்ள எங்கள் பஞ்சாயத்து யூனியன் (சிங்கநல்லூர்) தனிப்பட்ட சூழ்நிலையில் இயங்கி வருகிறது. இதில் நான்கு நகரப் பஞ்சாயத்துகளும் மூன்று கிராமப் பஞ்சாயத்துக்களும் மாத்திரமே உள்ளன. எல்லாப் பஞ்சாயத்துக்களும் தொழில் வளம் மிக்க கோவை நகருக்கு அருகாமையிலிருப்பதுமன்றி, நூல் ஆலைகள், தொழிற் கூடங்கள், ஜனத்தொகை இவைகளைக் கணக்கிட்டால் சற்றேக்குறைய நகர அமைப்பையே கொண்டுள்ளது. மேலும் இந்த யூனியன் எல்லைக்குள் விவசாய நிலங்கள் குறைவு, சுமார் 3,000 ஏக்கர் நஞ்சை நிலங்களும் 5,300 ஏக்கர் புஞ்சை நிலங்களும் உள்ளன. நிலத்தீர்வையும் குறைவு. பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பில் வாரச் சந்தையோ அல்லது வருமானத்தை தரக்கூடிய மற்ற இனங்களோ இல்லை. தொழில் வளம் மிகுந்த பகுதி என்ற காரணத்தால் எங்கள் வட்டாரம் "ஏ" பிரிவு என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி, இதற்கு முன் பஞ்சாயத்துகள் நிர்வகித்து வந்த செலவினங்களான பள்ளிக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவற்றை பராமரிக்கும் பொறுப்பும் பஞ்சாயத்து யூனியனுக்கேற்பட்டது. மேலே குறித்த காரணங்களால், யூனியனின் செலவு வருவாயைவிட மிக அதிகமாய்விட்டது. யூனியனின் 1962–63 வரவு செலவு கணக்கில் சுமார் ரூ. 98,000 துண்டு விழுந்துவிட்டது. இதை ஈடு செய்ய பலவித ஆராய்ச்சிகள் செய்தோம். 1958-ம் வருடத்திய பஞ்சாயத்துச் சட்டம் 116-வது பிரிவின் படி, நிலவரிக்குச் சமமான ஒரு தொகையை பிரதேச செஸ் சர்சார்ஜ் ஆக விதிக்கத் தீர்மானித்தோம். இவ்வளவு அதிகமான விகிதத்தில் இம்மாநிலத்தில் எந்த யூனியனும் வரி விதித்திருக்காதென நம்புகிறோம். எனினும் சூழ்நிலை எங்களுக்கு அவ்விதம் செய்யத் துணிவு தந்தது. இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், மேலே கண்டபடி, அதிக விகிதத்தில் வரி விதித்தும்கூட, எங்கள் பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமை நாங்கள் எண்ணிய அளவு சீரடைந்துவிடவில்லை. ரூ. 40,640 துண்டு விழுந்ததாகவே காட்சியளித்தது. இந்த நிலைமையை மேலும் பரிசீலனை செய்து பரிகாரம் தேட மாவட்ட கலெக்டர் அவர்களின் யோசனையின் பேரில் மறுபடியும் ஒன்று கூடினோம்.

துண்டு விழும் தொகையைச் சரிகட்ட அது போன்றதொரு தொகையை அரசினரிடமிருந்து மானியமாகவோ அல்லது கடனாகவோ கேட்டுப்பெற்றிருக்கலாம். ஆனால், அவ்விதம் செய்வது பஞ்சாயத்து ஆட்சியின் நோக்கத்திற்கே ஊறு தேடுவது போன்றதாகும். எனவே, "தன் கையே தனக்குதவி" என்னும் அடிப்படைக்கொப்ப உறுப்பினர்களாகியப் பஞ்சாயத்துகளே யூனியனுக்குதவுதவது என உறுதி பூண்டோம். பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமையும் சீரிய முறையில் இருக்கவில்லை என்றாலும், புதிய பஞ்சாயத்து சட்டம் அமுலுக்குவருமுன் பஞ்சாயத்துகள் செய்து வந்த செலவினங்களை புதிய பஞ்சாயத்து சட்டத்தின் 13-வது பிரிவுப்படி ஏற்க நேர்ந்ததால் தான் யூனியன் நிதி நிலைமை இவ்வாறு சீர்குலையக் காரணமாயிற்று என்ற கருத்தினையொட்டி, பழைய சட்டத்தின் கீழ் தாங்களே ஏற்றுவந்த கீழ்க்கண்ட செலவினங்களை மற்றுமோர் வருடத்திற்கு அவைகளே ஏற்று அதற்குண்டான தொகையை யூனியனிடம் கொடுத்துவிடலாமென பஞ்சாயத்துக்கள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது குறிப்பிடத் தக்கதாகும்.

செலவினங்களின் விவரம்.	செலவை ஏற்றுக் கொண்ட பஞ்சாயத்து.	தொகை.
உயர்நிலை ஆரம்பப் பள்ளி, வரதராசபுரம், ஆரம்ப பள்ளி, மசக்காளிபாளையம்.	உப்பிலா பாளையம்	ரூ. 11,111
சிங்காநல்லூர் மருத்துவ நிலையம்.	சிங்காநல்லூர்.	ரூ. 5,000
பீளமேடு மருத்துவ நிலையம்.	பீளமேடு.	ரூ. 10,000

மேலும், பள்ளிக் கூடங்கள் கட்டும் செலவிற்கு ரூ. 11,111 உப்பிலி பாளையம் பஞ்சாயத்தும், ரூ. 10,000 சிங்காநல்லூர் பஞ்சாயத்தும், ரூ. 5,000 பீளமேடு பஞ்சாயத்தும் யூனியனுக்கு அளித்திருக்கிறது. மேற்கண்ட பஞ்சாயத்துக்களின் சகாயத் தொகைகள் யூனியன் வரவு செலவுக்கணக்கில் பற்றுக்குறையை பெருமளவிற்கு சரிக்கட்டிவிட்டது. இன்னும் மீதியுள்ள ஒரு சிறு தொகையையும் சரிக்கட்டும் வாய்ப்பும் எங்களுக்கு இப்போது அரசினரால் புதிதாய் இயற்றப்பட்ட 1961-ம் வருடத்திய தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டத்தின் மூலம் (Madras Local Authorities Finance Act, 1961) கிடைத்திருக்கிறது. அதன்படி, தமாஷா வரியின்பேரில் நூறு சதவீதம் சர்சார்ஜும், சினிமா காட்சி வரியின் பேரில் மூன்று மடங்கு சர்சார்ஜும் விதிக்க 18–4–62-ம் தேதிய 12-ம் எண் தீர்மானத்தில் தீர்மானித்துள்ளோம். மேலும், யூனியனுக்குத் தேவையான நிதி வசதி செய்ய, எங்கள் வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துகளும் நன்கொடை அளிக்க முயன்று வருகிறோம்.

எங்கள் யூனியனைப் போன்ற நிலையில் வேறு சில யூனியன்களும் இருக்கக்கூடும். எங்களுடைய யூனியனின் சங்கடமான நிதி நிலையை அரசாங்கத்தின் உதவியின்றியே சமாளிக்க நாங்கள் ஒன்றுபட்டு வகுத்த வழிவகைகள் மற்ற யூனியன்களுக்கும் பயனுள்ளதாயிருக்கலாம் என்ற நோக்கத்துடன் எங்களுடைய அனுபவங்களை "இராம நலம்" பத்திரிகையின் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள மற்ற பஞ்சாயத்துத் தலைவர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

அன்புள்ள,

1. **தலைவர், உப்பிலிபாளையம் பஞ்சாயத்து.**
2. **தலைவர், சிங்காநல்லூர் பஞ்சாயத்து.**
3. **தலைவர், பீளமேடு பஞ்சாயத்து.**
4. **தலைவர், சௌரிபாளையம் பஞ்சாயத்து.**
5. **தலைவர், நஞ்சுண்டபுரம் பஞ்சாயத்து.**
6. **தலைவர், கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து.**
7. **தலைவர், உடையாம்பாளையம் பஞ்சாயத்து.**

——0——

தமிழ்நாட்டில் மின்சாரம் வளர்ந்த கதை :

வாழ்வின் ஒளி–மின்னெளி

[எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு முன்நிற்பது போல, மின்சார வசதி அளிப்பதிலும் சிறந்து விளங்குகிறது. கிராமப் புறங்களில் மின்சார வசதி வழங்குதலில் தமிழ்நாடு பல்லோரும் பாராட்டும்படியான உயர்ந்த் நிலையினை அடைந்துள்ளது. மின்சார சக்தி கடந்த பத்தாண்டு களில் பெருகியுள்ள வரலாற்றை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காணலாம். தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறையினர் வெளியிட்ட 'பத்தாண்டுகளில்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட விஷயங்கள் இவை.

ஆசிரியர்.]

விந்தையானதோர் ஆற்றலாய் விளங்கும் மின்சாரம் 50 ஆண்டுகளுக்கு முன்னேயே தமிழ் நாட்டில் தோன்றி விட்டது. ஆனுல் 1925 வரையில் சென்னைக்கும் நீல கிரியில் உள்ள தேயிலை தோட்டங்களுக்கும்மட்டுமே மின்சார வசதி கிடைத்தது. 1927-ல் தான் மின்சாரத் துறையை அரசாங்கம் அமைத்தது. அதன் பிறகு மின்சார உற்பத் தியில் சிறுகச் சிறுக முன்னேற்றம் ஏற்படலாயிற்று. தற்பொழுது இந்த முன்னேற்றத்தைக் கண்டு இந்தியா முழுவதும் பாராட்டுகிறது. என்ன அந்த முன்னேற்றம் ?

இன்று மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும், உற்பத் தியான மின்சாரத்தை வினியோகிப்பதிலும், தமிழ்நாடனது பம்பாய், கிழக்கு வங்காளம் ஆகிய இரு மாநிலங்களுக்கும் அடுத்தபடியாக உள்ளது.

கிராமத்தில் மின்சாரம்.

தமிழ் நாட்டில் மொத்தம் 19,000 கிராமங்கள் இருக் கின்றன. நாட்டின் மக்கள் தொகையில் 75 சதவீதம் பேர் இக்கிராமங்களில் வாழ்கின்றனர். எனவே, இந்தக் கிராம மக்களுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுத் தால்தான், பெரும்பான்மையான மக்கள் அதன் பயனை அடைந்திருக்கிறுர்கள் என்று சொல்ல முடியும்.

பம்பாயிலும் வங்காளத்திலும் உற்பத்தியாகும் மின்சாரத்தின் பெரும்பகுதியைத் தொழிற்சாலைகளே பயன் படுத்தி விடுகின்றன. கிராம மக்களுக்கு அது அவ்வள வாகக் கிட்டுவதில்லை. இந்த விஷயத்தில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக்காட்டிலும் சிறந்து விளங்குகிறது. தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் தொழிற் சாலைகளுக்குப் பயன்படுவதுடன், காடு மேடுகளையெல்லாம் கடந்து மாநிலத்தின் மூலை முடுக்குகளில் உள்ள கிராமங் களைத் தேடிச் செல்கிறது. அங்குள்ள மக்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வளம்கொழிக்கச் செய்கிறது. உழைத்து ஓய்ந்து போகும் குடியானவர்களின் வேலைச் சுமையைக் குறைக் கின்றது.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னுல் (1950–51–ல்) 1,613 கிராமங்களும் நகரங்களும் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன; 11,400 பம்பு செட்டுகளே இயங்கிக் கொண்டிருந்தன. இன்று இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிய பிறகு—(1961-ல்) சுமார் 11,000 கிராமங்களும் நகரங்களும் மின்சார வசதி பெற்றுள்ளன. 1,16,000 பம்பு செட்டுகள் வேளாண்மை செழிக்கப் பயன் படுகின்றன.

தொழில் வளர்க்க மின்சாரம்

நமது நாட்டின் தொழில் கொள்கைக்கு இணங்க மாநிலத்தில் புத்தம் புதிய பெரும் தொழில்கள் பலவும் எண்ணற்ற சிறு தொழில்களும் தோன்றியுள்ளன. அவை களுக்கு ஏராளமான அளவில் மின்சாரம் தேவைப்படுகிறது. மேலும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் தனி நபர் சராசரி அதிகரித்து விட்டது. 1947–ல் தனி நபர் சராசரி 11 யூனிட்டாக இருந்தது. ஆனுல் இன்று 60 யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. சுமார் 8 லட்சம் நபர்களின் பெயரில் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு உழவுக்கும் தொழிலுக்கும் மின்சார வசதிகள் அளிக்க வேண்டுமானுல் மின்சார உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும்ல்லவா ?

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயலாற்றத் தொடங்கியவுடனே, மின்சார உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முதலாண்டில் (1950–51ல்) 6,310 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனுல், முதல் திட்டக் கால இறுதியில் (1955–56ல்) 10,530 லட்சம் யூனிட்டுகளாக மின்சார உற்பத்தி அதிக கரித்து விட்டது. இரண்டாவது திட்டக் கால இறுதியில் (1961-ல்) உற்பத்தியின் அளவு 23,000 லட்சம் யூனிட்டுகள் இவ்வாறு பத்தே ஆண்டில் 16,700 லட்சம் யூனிட்டுகள் அளவுள்ள மின்சாரம் அதிகமா ; உற்பத்தியாகி இருக் கிறது.

மின்சார உற்பத்தி

இந்தப் உற்பத்திப் பெருக்கம் எப்படி ஏற்பட்டது ? ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனையால்தான் என்று சொல்ல வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் பாப நாசம் நீர் மின்சாரத் திட்டத்தின் இரண்டாம் நிலை, பைகாரா மூன்றும் நிலை, மோயாறு, பெரியாறு, குந்தா ஆகிய நீர் மின்சாரத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. இவைகளில் தற்போது குந்தாவில் 1,80,000 கிலோவாட்டும், பைகாராவில் 70,200 கிலோவாட்டும், மோயாறில் 36,000 கிலோவாட்டும், மேட்டூரில் 40,000 கிலோவாட்டும், பாபநாசத்தில் 28,000 கிலோவாட்டும், பெரியாற்றில் 1,05,000 கிலோ வாட்டும் மின்சாரம் உற்பத்தியாகிறது. அதாவது இவை களில் மொத்தம் 4,59,200 கிலோவாட்டு மின்சாரம் உற்பத்தியாகிறது.

அறிவிப்பு

தமிழ்நாடு மாதர் நல இலாகா டைரக்டர் அறிவிப்பதாவது :—மத்திய சமூக நல போர்டின் மானிய உதவித் திட்டத்தின் கீழ், உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை, தமிழ்நாடு சமூக நல போர்டு 'சமூக நலத் தனியார் நிலையங்களிலிருந்து' (Voluntary welfare Instutions)வரவேற்கிறது.

மாதர்கள், குழந்தைகள் நலத்திற்காகப் பணிபுரியும் நிலையங்கள், உடல், மனம் பாதிக்கப்பட்ட பெண்கள் குழந்தைகள் சேவை நிலையங்கள் ஆகியவை, சிறப்பாகத் தாம் செய்துவரும் சேவைகளை ஒன்று திரட்டிப் பலப் படுத் துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், விரிவாக்குவதற்கும், இம் மானியம் கோரி, விண்ணப்பம் செய்யலாம்.

நன்கு ஸ்தாபிக்கப்பட்டதாய், அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமான திட்டங்களுக்குப் போதுமான பொருள் வருவாயைத் திரட்டும் திறமையுள்ள நிலையங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமே, மானியம் வழங்கு வது பற்றி ஆலோசிக்கப்படும். இந்த மானியம், நிலையங்களின் நிலைமையைப் பொறுத்து, 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ந் தேதி முதல், 1964ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ந் தேதி வரையுள்ள காலத்திற்கோ, 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ந் தேதி முதல், 1966ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ந் தேதி வரையுள்ள காலத்திற்கோ, வழங்கப் படும் இவ விண்ணப்பங்கள் 1962ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ந் தேதிக்குள்

" தலைவி, தமிழ்நாடு சமூக நல போர்டு,

7, ஆராவமுது கார்டன் தெரு,

எழும்பூர், சென்னை.8. "

என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

கிராம வானொலி மன்றம்

Radio Rural Forum

—x—

நமது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் வானொலிப் பெட்டிகள் இயங்கிவர ஏற்பாடாகி வருவது அனைவரும் அறிந்ததே இதற்காக, பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம் ஒன்றை தமிழ்நாடு அரசாங்கம், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, தொடங்கி வைத்தது. அதையொட்டி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் "கிராம வானொலி மன்றம்" ஒன்றை அமைக்க, இப்போது உத்தரவாகியுள்ளது. கிராம நலத் திட்டங்கள் சம்பந்தமான விசேஷ நிகழ்ச்சிகளை, திருச்சி வானொலி நிலையத்தார் ஒலி பரப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை தோறும் திருச்சிராப்பள்ளி, சென்னை நிலையங்களிலிருந்து கேட்கலாம். கிராம மக்கள், நிகழ்ச்சிகளைக் கேட்கவும், அவைகளைப்பற்றிக் கூடிப் பேசிப் பயன் பெறவும், அனுபவங் களைப் பகிர்ந்துகொள்ளவம், தக்க கேள்விகள் மூலம் விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் இந்த மன்றங்கள், உதவி புரிய முடியும்.

"கிராம வானொலி மன்ற" நிகழ்ச்சிகளை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை தோறும், மாலை 6·30 மணியிலிருந்து 7·15 மணி வரையில் கேட்கலாம். 1962ம் ஆண்டு ஜூலை மாதம் 24ந் தேதி, முதல் நாள் நிகழ்ச்சி, முதலமைச்சர் திரு காமராஜ் அவர்களின் சொற்பொழிவுடன் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து (ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை யும்) திரு எஸ். கே டே, திரு கே. ராஜாராம், திரு ஆர். ஏ. கோபாலசாமி, திரு வேங்கடாசலபதி முதலியோரின் கருத்துக் கோவை''ம், உரை நிகழ்ச்சிகளும் ஒலி பரப்பாகும்.

இவைகளுக்கு மாபெரும் தொகைகள் செலவிடப் பட்டிருக்கின்றன. பைகாரா திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 6.74 கோடி. பாபநாசம் திட்டத்தின்மொத்தச் செலவு ரூ. 3·06 கோடி. மோயாறு திட்டம் ரூ.4.64 கோடி செலவில்முடிவடைந்துள்ளது. பெரியாறு திட்டத்தை நிறை வேற்ற ரூ. 10.09 கோடி செலவுஎன்று கணக்கிடப் பட்டிருக் கிறது. இவையல்லாமல் சென்னை அனல் மின்சார நிலையமும், மதுரை அனல் மின்சார நிலையமும் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இவற்றின் மொத்த உற்பத்தியில் திறன் சுமார் 1.13 லட்சம் கிலோவாட் ஆகும். நெய்வேலியில் ரஷ்ய நாட்டு உதவியுடன் ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்கப் படுகிறது.

குந்தா மின்சாரத் திட்டம்

தமிழ் நாடு அரசாங்கம் மேற்கொண்ட மின்சாரத் திட்டங்களிலெல்லாம் மிகப் பெரியது குந்தா நீர் மின்சாரத் திட்டமாகும். உலக நாடுகளின் மாபெரும் நீர் மின்சாரத் திட்டங்களோடு ஒப்பிடும் அளவிற்கு பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்தது இத் திட்டம். இத்திட்டப்படி நான்கு பெரும் கல்லணைகள் கட்டப்படும். நான்கு மின்சார நிலையங்களும், ஒரு துணை மின்சார நிலையமும் அமைக்கப்படும். இரண்டா வது திட்டக் காலத்திற்குள் இரண்டு மின்சார நிலையங் கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 1960–ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து ஒரு மின்சார உற்பத்தி இயந்திரம் வேலை செய்யத் தொடங்கி விட்டது. இந்த இயந்திரம் இரண்டு ஜெனரேட்டர்களைக் கொண் டது. ஒவ்வொன்றும் 20,000 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் உடையதாகும்.

இரண்டாவது மின்சார நிலையம் 1961–ம் ஆண்டு ஜனவரியிலிருந்து வேலை தொடங்கியுள்ளது. இதன் உற்பத்தித் திறன் 1.4 லட்சம் கிலோவாட் ஆகும்.

எஞ்சியுள்ள மின்சார நிலையங்களும் ஒரு துணை நிலையமும் மூன்றுவது திட்டக் காலத்தில் அமைக்கப் பட்டவுடன் மேலும் 1.9 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். கொழும்புத் திட்டத்தின் கீழ் கானடா நாட்டு அரசாங்கம் இத்திட்டத்திற்கு ரூ. 12.5 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களையும் கருவிகளையும் கொடுத்து உதவுகிறது. குந்தா திட்டம் நம் தமிழ் நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதம்!

செய்திச் சுடர்

அரசாங்கச் சார்பற்ற கிராமப் பெண் ஊழியர்களுக்கு பயிற்சிப் பயணங்கள்

அரசாங்கச் சார்பற்ற கிராமப் பெண் ஊழியர்களுக்கு பயிற்சிப் பயணங்கள் ஏற்பாடு செய்வது பற்றி திட்டம் ஒன்றினை மத்திய அரசாங்க சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை தயாரித்து அதை மாநில அரசுகளுக்கெல்லாம் அனுப்பி வைத்துள்ளது. கிராமப் புறங்களில் உள்ள பெண் ஊழியர்களிடையே தன்னம்பிக்கையையும், அறிவொளியையும் பரப்ப வேண்டுமென்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். அவர்களிடையே உள்ள தாழ்வு மனப்பான்மையை அகற்றவும், சாதி மற்ற வேறுபாடுகளைக் களைந்தெறியவும் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் பெரிதும் உதவும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தேசிய ஆலோசனைக் குழு

பல்வேறு மாநிலங்களிலும் முன்னோடியான வேலைத் திட்டங்கள் பலவற்றை நடத்திக் கொண்டுவரும் அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் கூட்டுறவுடன் இயங்க ஒரு தேசிய ஆலோசனைக் குழுவினை அமைக்க பாரத அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மத்திய அரசாங்க சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்து ஆட்சி, கூட்டுறவுத்துறை அமைச்சர் இக்குழுவின் தலைவராக இருப்பார். அத்துடன் மாநில அரசாங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்பது பேர் இக்கமிட்டியில் அங்கம் வகிப்பார்கள். அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் பிரதிநிதிகளாக ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண், ஸ்ரீ சங்கர்ராவ் தேவ், ஸ்ரீ அன்னா சாகிப் சகஸ்ரபுத்தே, ஸ்ரீ கே. அருணாசலம், ஸ்ரீ ஆர். கே. படேல், ஸ்ரீ பிரபாகர்ஜி ஆகியோர் இக்கமிட்டியில் அங்கம் வகிப்பார்கள்.

முன்னோடி வேலைத் திட்டங்கள் (Pilot Projects) மாநிலங்களில் எவ்வாறு செயல் படுகின்றன; ஏற்படுகின்ற பிரச்னைகளுக்கு எப்படி தீர்வு காண்பது என்பது பற்றியெல்லாம் இக்குழு அவ்வப்போது பரிசீலனை செய்யும்.

தேசிய கூட்டுறவு விவசாய திட்ட ஆலோசனைக் குழு

சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தேசியக் கூட்டுறவு விவசாய ஆலோசனைக் குழு, பயிரிடுவதற்கு லாயக்காக உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான எல்லா நிலங்களிலும் அரசாங்கப் பண்ணைகள் எவ்வளவு தூரம் முடியுமோ அந்தளவுக்கு ஆரம்பிக்கவும், மிச்சமிருக்கிற நிலங்களை கூட்டு முறையில் விவசாயம் செய்வதற்காக கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்துள்ளது.

இளைஞர்கள் வேலைத்திட்டம் சம்பந்தமான மாநில இயக்குநர்களின் மகாநாடு

சமீபத்தில் டெல்லியில் கூடிய இளைஞர்கள் வேலைத் திட்டம் சம்பந்தமான மாநில இயக்குநர்கள் மகாநாடு (Conference of State Directors of Youth Programmes) பல சிபாரிசுகளைச் செய்துள்ளது.

எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்காமல், தரத்தினை மனதிலிறுத்தி, வாலிபர் சங்கங்கள் தோற்றுவிக்கப்படவேண்டுமென்று இந்த மகாநாடு வலியுறுத்தியது. வாலிபர்களிடையே நல்லதொரு புத்துணர்ச்சியினையும் நல்ல கலாச்சார சமூக பழக்க வழக்கங்களில் அவர்களை ஈடுபடுத்துகின்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மகாநாடு சிபாரிசு செய்துள்ளது. கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் திட்டமிட்ட முறையில் இளைஞர்கள் விளையாட்டுப் பந்தயங்களும் விழாக்களும் நடத்தப்பெற வேண்டுமென்றும், அவற்றில் மாநில அளவில் முதலிலிருக்கின்ற நபருக்கு குடியரசு தின அணி வகுப்பின் பொழுது தகுந்த முறையில் பரிசு அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட வேண்டுமென்றும், இதற்கான ஏற்பாடுகளை எல்லா மாநில அரசுகளும் செய்ய வேண்டுமென்றும் மகாநாடு சிபாரிசு செய்துள்ளது.

["பஞ்சாயத்து ராஜ்" என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.]

[Reproduced from ' Panchayati Raj ']

வரப்பெற்றோம் ;

தென்காசி பஞ்சாயத்து யூனியன் திட்ட சாதனை— சிறப்பு மலர்

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி பஞ்சாயத்து யூனியன் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 14-ம் தேதி முதல் பணியாற்றி வருகின்றது. அதனுடைய ஓராண்டுக் காலப் பணியினையும் விளக்குகின்றவகையில், முதலாண்டு விழாவில் தமிழ் நாடு சட்ட சபை சபா நாயகர் திரு செல்லப் பாண்டியன் அவர்கள் முன்னிலையில், தமிழ் நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனர், திரு. கோ. வேங்கடாசலபதி அவர்களால் இந்த சிறப்புமலர் வெளியிடப்பட்டது.

இந்தப் பஞ்சாயத்து யூனியனில், பஞ்சாயத்து ஆட்சியில் செய்யக்கூடிய பலவேலைகளையும் இந்த ஓராண்டுக் காலத்தில் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வருவதை இந்த மலர் விளக்குகிறது. உதாரணமாக, சுகாதார வசதிகள், நோய்தடுப்பு முறைகள், கூட்டுறவு பலநோக்கு சங்கங்கள் அர்பன பாங்கு, நெசவாளர் கூட்டுறவு நில அடமான பாங்கு, சிறு கைத் தொழில் கூட்டுறவு என கூட்டுறவு இயக்கம், கிராமக் கைத் தொழில் வளர்ச்சி, குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்தில், குழந்தைகள் கண் காட்சி, மாதர் நலப்பயிற்சிமுகாம் முதலியன நடத்துதல் மூலம் சுமார் 300-க்கு மேற்பட்ட குடும்பங்கள் அறுவை முறைச் சிகிச்சை செய்துகொள்ளச் செய்துள்ளமை முதலியன இந்த யூனியன் சாதனைகளில் சிலவாகும். இவையன்றி குடி தண்ணீர் விநியோகம், ரோடு பராமரிப்பு, பாலம் போடுதல், விவசாய உற்பத்தி வேலைகள், பள்ளிக்கூடங்கள், இளைஞர் விவசாய மன்றம், பயிற்சி முகாம்கள், சமுகக் கல்வி நிலையம், சிறுவர் பூங்கா, மனமகிழ் மன்றம், வானொலிப் பெட்டி அமைத்தல், வாசக சாலைகள் முதலியன அமைத்து நடத்துவதுடன் கால்நடைக் காட்சிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும், விழாக்களையும் கூட இந்தப் பஞ்சாயத்து யூனியன் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளது. அதனுடைய தொண்டு எல்லா யூனியன்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

பூண்டி, பஞ்சாயத்து யூனியன்–முதலாவது ஆண்டு விழா—ஆண்டறிக்கை.

செங்கற்பட்டு மாவட்டம் பூண்டி பஞ்சாயத்து யூனியன் தனது முதலாண்டு விழாவினை 1962-ம் ஆண்டு எப்ரல் மீ 30-உ அன்று கொண்டாடியுள்ளது. அந்த பஞ்சாயத்து யூனியனில், கடந்த ஓராண்டு காலத்தில் செய்துள்ள வேலைகளையும், இனி செய்ய இருக்கும் வேலைகளையும் குறித்து விளக்கமாக யூனியன் தலைவர் இந்த விழாவில் படித்து வழங்கிய ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்த யூனியனில் பல துறைகளிலும் செய்யப்பட்டுள்ள வேலைகளையும் அவர் விளக்கியுள்ளார். சிறப்பாக, விவசாயத்திலும், கூட்டுறவுத் துறையிலும், கல்வி வளர்ச்சியிலும், மாதர் நல வேலைகளிலும் இந்த யூனியன் தனிக் கவனம் செலுத்திவருவது பாராட்டுக்குரியதாகும்.

பஞ்சாயத்து யூனியன்களின் இத்தகைய ஆண்டு மலர்கள் மற்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுப்பிவைப்பதினால், ஆக்க வேலையில் ஈடுபட்டுள்ள பஞ்சாயத்து நிறுவனங்கள் புதிய முன்னேற்ற வேலைமுறைகளைப்பற்றி அறியவும், அதன்படி அவை செயலாற்றவும் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றோம்.

ஐவகை ஆற்றல்—நெருப்பு

[பேராசிரியர் ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணமலைப் பல்கலைக் கழகம்]

ஆதி மனிதன் நெருப்பைக் கண்டு அஞ்சினன். ஆனல் ஒளியை விரும்பினன். ஒளியின் முன்னுருவம் நெருப்பு என்பதை உணர்ந்தான். முதன் முதலில் இரண்டு கற்களைத் தேய்த்து அவன் நெருப்பை உண்டாக்கியதாகக் கூறப்படுகிறது. நெருப்பு சுட்ட போதிலும், உணவுப் பொருள்களை வேகவைக்கவும், காட்டு மிருகங்களைத் துரத்தவும் பயன் படுவதை உணர்ந்தான். நாளாவட்டத்தில் நெருப்பின் தன்மையை நன்கு உணர்ந்து அது வாழ்க்கைக்கு எத்தகைய பேருதவியை அளித்து வருகிறது என்பதை அறியலானன். தற்காலம் வேண்டுகின்ற சூட்டுக்கு நெருப்பை பெறுவதற்கு பல சாதனங்கள் நம்மிடையே இருந்து வருகின்றன. பெரிய இரும்பு ஆலைகளில் இரும்பு சாமான்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய அடுப்புகள் முதற்கொண்டு, நினைத்த மாத்திரத்தில் வீட்டில் வெகு சீக்கிரத்தில் காப்பி தயார் செய்வதற்கு வேண்டிய மின்சார அடுப்பு வரை, எண்ணிறந்த அடுப்புகளை நாம் பயன்படுத்தி வருகிறேம். நெருப்பு எரிகிறது என்பதற்கு விஞ்ஞானிகள் கூறும் விளக்கத்தை கவனியுங்கள்.

இவ் வுலகில் நாம் கோடிக்கணக்கான தினுசுப் பொருள்கள் திட, திரவ, வாயு நிலைகளில் இருப்பதை பார்க்கிறேம் அல்லவா ? இவற்றை எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள், விஞ்ஞானிகள். உலகில் தொண்ணூற்றிரண்டு வகை பொருள்கள்தாம் உண்டு என்பதே இவர்கள் கண்ட முடிவு. கல்லையும், மண்ணையும், சுண்ணும்பையும் வைத்துக் கொண்டு அரண்மனையிலிருந்து குடிசை வரை நாம் எப்படி கட்டிடங்களைக் கட்டுகிறேமோ, அதைப்போல இயற்கை அன்னை இத் தொண்ணூற்றிரண்டு பொருள்களை வைத்துக் கொண்டு நாம் காணும் எண்ணிலடங்கா பொருள்களை அமைத்திருக்கிருள். இத் தொண்ணூற்றிரண்டு வகை பொருள்களையும் தாதுப் பொருள்கள் (Elements) என்று விஞ்ஞான பரிபாஷையில் கூறுவார்கள். தங்கம், வெள்ளி, கார்பன், பிராணவாயு முதலியன தாதுப் பொருள்களே ஆகும். பூமியை சூழ்ந்துள்ள காற்று மண்டலத்தில் இருபது சதவிகிதம் பிராணவாயு இருக்கிறது. இது மிகவும் விறுவிறுப்பான தாதுப்பொருள். மற்ற தாதுப் பொருள்களுடன் கூடுவதற்கு எங்கே என்று காத்திருக்கின்றது. இப்புணர்ச்சியை "எரிதல்" என்று விஞ்ஞானிகள் கூறுவார்கள். இப்புணர்ச்சியினல் வெளியாகிறது நெருப்பு. புணர்ச்சியின் வேகத்தை பொறுத்து நெருப்பின் வலிமை அமைகிறது. சில தாதுப் பொருள்கள் பிராணவாயுவுடன் கூடுவதற்கு நீண்ட நேரம் ஆகிறது. உதாரணமாக, இரும்பு பிராணவாயுவுடன் சேர்வதினல்தான் துருப் பிடிக்கிறது. இது தாமதமாகவே நடைபெறும் நிகழ்ச்சி. இதற்கு மாருக பெட்ரோல் எண்ணெய் சடுதியில் நெருப்பு பிடித்து எரிவதை பார்க்கிறேம் அல்லவா ! மரம், கரி, எண்ணெய் இவற்றில் எல்லாம் கார்பன் (Carbon) என்ற தாதுப் பொருள் இருக்கிறது. உலகில் கார்பன் சேர்ந்த கூட்டுப் பொருள்கள்தான் அதிகம். இது பிராணவாயுவுடன் சேருவதினல் வெளிப்படும் நெருப்பையே நாம் பெரும்பாலும் நம் அன்றுட வேலைகளுக்குப் பயன்படுத்தி வருகிறேம். எரிதல் நிகழ்ச்சியைத் துவக்குவதற்கு மரம், நிலக்கரி இவற்றின் வெப்ப நிலையை சற்று உயர்த்த வேண்டியிருக்கிறது. மேலும் இவற்றின் எரிதல் நிகழ்ச்சி சற்று நிதானமாக நடைபெறும். பெட்ரோல் எண்ணெயில் எரிதல் நிகழ்ச்சி சடுதியில் நடைபெறுவதோடு மிகுந்த ஆர்ப்பாட்டத்துடனும் நடைபெறுகிறது. எரிதலின் போது வெளிப்படும் வாயுப் பொருள் திடீரென்று அகற்சியடைந்து பெரிய சத்தத்தை உண்டாக்குகின்றது. மோட்டார் வண்டி ஐம்பது மைல் வேகத்துடன் போகும்போது என்ஜினில் விளுடிக்கு நூறு முறை பெட்ரோல் எண்ணெய் கலவை வெடித்து வருவதாகக் கூறப்படுகிறது. அவ்வப்போது வெளிப்படும் வாயுப் பொருளின் அகற்சியை சீராக்கி வண்டியை சீராக ஓட்டுவதற்கு மோட்டார் வண்டியில் உள்ள என்ஜினில் வகை செய்யப்பட்டிருக்கிறது. (படம் 1, 1–A) மோட்டார் என்



படம் 1



படம் 1-A

ஜினில் நடைபெறும் நிகழ்ச்சியை இந்த நான்கு தனிப் படங்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். முதல் நிலையில் பீச்சான் கீழே இறங்குகிறது. அப்போது "வி" என்ற வால்வின் மூலம் பெட்ரோல் எண்ணெய் ஆவி, காற்று இவ்விரண்டும் உள்ளே நுழைகிறது. குழல் முழுவதும் கலவை நிரம்பியவுடன் வால்வு தானே மூடிக் கொள்ளும். பெட்ரோல் ஆவியும், காற்றும் இரண்டாவது நிலையில் அமுக்கப் படுகின்றன. மூன்றாவது நிலையில் "எஸ்" என்ற இடத்தில் உள்ள ஒரு மின் பொறி அதை பற்ற வைக்கிறது. இதனால் அது எரிந்துதிடீரென்று அகற்சி உண்டாகி நான்காவது நிலையில் பீங்கானை கீழே உதைத்துத் தள்ளுகிறது. பின்னர் "வி" என்ற வால்வின் மூலம் வெளிப்பட்ட வாயுப் பொருள்கள் போய்விடுகிறது. இவ் வாறாக எரிதல் நிகழ்ச்சியைக் கொண்டு மோட்டார் வண்டி ஓடுகிறது. நம் உடம்பிலும் எரிதல் நிகழ்ச்சி ஓயாமல் நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. நாம் உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணிக்கப்பட்ட பின்னர் இரத்தத் துடன் கலக்கிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள பிராண வாயுவும் இரத்தத்தில் சேருகிறது. இச்சேர்க்கையினால் எரிதல் நிகழ்ச்சி உடம்பின் ஒவ்வொரு பாகத்திலும் நடைபெற்று வருகிறது. எரிதலினால் வெளிப்படும் நெருப்பு நமக்கு ஆற்றலை அளித்து உடலின் வெப்ப நிலையையும் பாதுகாத்து வருகிறது. எனவே நெருப்பின் துணையாலேயே நாம் ஒவ்வொரு விநாடியும் ஜீவித்து வருகிறோம் என்றால் அது மிகையாது.

சூடு என்பது நீரைப் போல ஒரு பொருள் என்றும் அது ஓடுவது போல இதுவும் ஓடுவதாக விஞ்ஞானிகள் முதலில் நினைத்தார்கள். இப் பொருளுக்கு கலோரிகம் (Caloric) என்று பெயர் சொன்னார்கள். இது வெகு நுட்பமானதென்றும், நிறையற்றதென்றும் நெகிழும் தன்மை வாய்ந்த தென்றும் கருதப்பட்டு வந்தது. உயர்ந்த சூட்டிலிருந்து தாழ்ந்த சூட்டிற்கு இப் பொருளை செல்லுகிறது என்று நினைத்தார்கள். அதைத் தான் நாம் சூட்டோட்டம் என்கிறோம் என்றும் பல பொருள்களை ஒரே சூட்டிற்கு உயர்த்தும் போது அவை ஒவ்வொன்றும் பல்வேறு அளவுக்கு கலோரிகத்தை உட் கொள்வதால் அவ்வவற்றின் வெப்பம் ஏற்கும் திறன் மாறுபடுவதாக கருதினார்கள். சூடு நீரைப் போல ஒரு பொருள் அல்ல என்பதை ரம்போர்டு (Rumford) என்ற விஞ்ஞானி காட்டினார். இவர் ராணுவத்தில் வேலை பார்த்து வந்தபோது பெரிய பீரங்கிகளை பழுது பார்க்க நேரிட்டது. அச்சமயம் பீரங்கிக் குழல் ஒன்றை கூரான மற்றொரு இரும்பு துண்டைக் கொண்டு துளைத்தபோது உராய்வினால் குழல் மிகுந்து சூட்டை அடைந்ததைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார். பீரங்கியில் துளைக்கப் பட்ட பக்கத்தை சுற்றிலும் பெட்டி ஒன்றை அமைத்து, அதில் நீரை ஊற்றி, இரண்டு மணி நேரத்தில் அந்த நீர் கொதித்து ஆவியாவதை மற்றவர்களுக்கு காட்டினார். குழலிலிருந்து கலோரிகத் திரவத்தை வெளிப்படுத்துவதினால் இத்தகைய சூட்டுயர்வு ஏற்பட்டிருக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டி இச் சூட்டுக்கு இயக்கமே காரணம் என்பதை தெளிவுபடுத்தினார். எனவே, சூடு ஒரு திரவப் பொருளாக இருக்க முடியாது என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டனர். இயக்கத்தின் மர்மத்தை ஆராய்ந்தபோது உண்மை தெரிய வந்தது. பொருள்கள் எல்லாம் அணுக்களால் ஆனவை என்பது நெடு நாள் முன்னரே அறியப்பட்ட உண்மை. பலவித பொருள்களின் அணுக்கள் மற்ற குணங்களில் வேறுபட்ட போதிலும் ஒன்றில் ஒத்திருக்கின்றன. நிரந்தரமான இயக்கம்தான் அவற்றின் பொதுவான பண்பு. அணுக்களை கண்ணால் பார்க்க முடியாமல் இருக்கும்போது அவை இயங்கிக் கொண்டிருப்பதை எப்படி நம்ப முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். கடலில் மிதந்து வரும் கப்பலை வெகு தூரத்திலிருந்து பார்க்கும் ஒருவருக்கு கப்பலின் அசைவு தெரிகிறதா ? வாயுப் பொருள்களது அணுக்களின் இயக்கத்தை சுலபமாக உணரலாம். ஒரு ஜவ்வாது வத்தியை ஏற்றி வைத்த மாத்திரத்தில் அதன் மணம் நாலா பக்கங்களிலும் பரவுவதை உணருகிறோம் அல்லவா? இதற்குக் காரணம் வத்தியிலிருந்து கிளம்பும் ஆவி அணுக்களின் இயக்கம்தான். இவை வெகு விரைவில் எல்லா பக்கங்களுக்கும் இயங்கிச் சென்று காற்று அணுக்களுடன் கலந்து விடுகின்றன. ப்ரௌன் (Brown) என்ற விஞ்ஞானி அணுக்கள் இயங்கிக் கொண்டிருப்பதை சோதனையினால் நிரூபித்து விட்டார். மோரில் கரைந்தும் கரையாமலும் மிதந்து கொண்டிருக்கும் சிறிய துகள்களைப் போல, ஒரு பிசினை தண்ணீரில் கரைத்து அதை ஒரு நுண் பெருக்காடியை (Microscope) கொண்டு சோதித்தார். துகள்கள் எல்லாம் பாத்திரத்தின் அடியில் படியாமல் அவை ஒவ்வொன்றும் தம் இருப்பிடங்களில் இருந்து கொண்டே ஓய்ச்சல்ஒழிவு இல்லாமல் அங்குமிங்கும் அலைந்து

கொண்டிருப்பதை கவனித்தார். சிறிய பிசின் துகள்கள் விரைவிலும், பெரிய பிசின் துகள்கள் சற்று நிதானத்துடனும் அசைவதை கண்டார். இவர் கண்ட போக்கை படத்தில் பார்க்கவும். (படம் 2); நீரின் அணுக்கள் சதா இயங்கிக் கொண்டிருந்தால்தான் இத் துகள்களுக்கு அசைவு ஏற்படக்கூடும் என்பதை சந்தேகமில்லாமல் எடுத்துக் காட்டிவிட்டார்.



படம் 2

அணுக்களின் இயக்கம்தான் சூடாக நமக்கு புலப்படுகிறது. பழுக்கக் காய்ந்த இரும்பில் இருக்கும் அணுக்கள் எல்லாம் வெகு விரைவாக துடித்துக் கொண்டிருக்கின்றன. தவறி இரும்பைத் தொட்டுவிட்டால் அதன் அணுக்களின் இயக்கம் நம் கைத்தோலின் அணுக்களுக்குப் பரவி விடுகிறது. சூட்டினைத் தாங்கமாட்டாமல் சிறிது நேரம் அவதிப்படுகிறோம். பனிக்கட்டியின் அணுக்களுக்கு இயக்கம் குறைவு. அதைத் தொட்டவுடன் நம் கைத் தோலின் அணுக்களின் இயக்கம் பனிக்கட்டியின் அணுக்களுக்கு பரவுகிறது. இதனால் கைத்தோலின் அணுக்களின் இயக்கம் குறைந்துவிடுகிறது. நமக்கு சிலீரென்று உணர்ச்சி ஏற்படுகிறது. எனவே ஒரு பொருளின் அணுக்கள் இயங்கும் வேகத்தைப் பொறுத்து அதன் சூடு உயர்வாகவோ அல்லது குறைவாகவோ அமைகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஒரு பொருளுக்கு நாம் சூடேற்றும்போது அதன் அணுக்கள் எல்லாம் சூட்டின் விளைவாக வேகமாக இயங்கத் தொடங்குகின்றன. இச்சூடு அணுக்களிடையே உள்ள நட்பைக் குலைக்கிறது. அணுக்களிடையே உள்ள கவர்ச்சி சக்திகளுக்கும், அவற்றின் இயக்கத்திற்கும் எப்பொழுதும் போராட்டம் தான். திடநிலையிலுள்ள பொருள்களின் அணுக்களிடையே உள்ள கவர்ச்சி சக்திகள் மேலோங்கி நிற்கின்றன. அந் நிலையில் அணுக்களுக்கு சுதந்திரம் மிகக் குறைவு. தம் இருப்பிடங்களில் இருந்துகொண்டே துடித்துக் கொண்டிருக்கின்றன. பொருளுக்குச் சூடு அதிகரிக்கும்போது அணுக்களின் இயக்கமும் வரவர அதிகரித்துக்கொண்டே சென்று ஒரு நிலையில் அவை தம்மிருப்பிடங்களை விட்டு நகர்ந்து செல்லவும் ஆரம்பிக்கின்றன. இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே தான் அங்குமிங்கும் ஓட அணுக்களுக்கு ஆற்றல் ஏற்படுகிறது. அந் நிலையில் அவை ஒன்றோடு ஒன்று அடிக்கடி முட்டிக் கொண்டும், மோதிக் கொண்டும் அலைகின்றன. இப்போது பொருள் உருகி, திடநிலையைவிட்டு திரவ நிலைக்கு வந்துவிடுகிறது. பின்னும் பொருளுக்கு சூடேற்றினால் அணுக்கள் மேலும் வேகமாக இயங்கத் தொடங்குகின்றன. கவர்ச்சி சக்திகளை மீறி திரவ நிலையை விட்டொழித்து ஆவி நிலையை அடைகின்றன. அணுக்களுக்கு இப்பொழுது பூரண சுதந்திரம் வந்துவிடுகிறது. மற்ற அணுக்களின் உபத்திரவம் இல்லாமல் அவை எங்கு வேண்டுமானாலும் செல்ல முடிகிறது. இந் நிலையில் பொருள் கொதித்து ஆவியாகி விட்டதாக கூறுகிறோம். சூட்டின் விளைவாக பொருள்கள் நிலை மாறுவதோடு பொருளின் பருமனும் அதிகரிக்கிறது. இவ்வதிகரிப்பு பொருள் திரவ நிலையிலிருந்து ஆவி நிலையாகும்போது வெகு அதிகமாக இருக்கிறது. உதாரணமாக, நீர் ஆவியாக மாறும்போது அதன் பருமன் சுமார் ஆயிரத்து எழுநூறு மடங்கு அதிகரிப்பதை விஞ்ஞானிகள் அறிந்தார்கள். திறந்த பாத்திரத்தில் நீரை கொதிக்க வைத்தால் இப் பருமன் அதிகம் ஆவது நமக்கு புலப்படாது. இவ்வாறில்லாமல் நன்றாக மூடிய பாத்திரத்தில் நீரை கொதிக்க வைத்து பாத்திரத்தை சிறிது திறந்து விட்டால் நீராவி ஓவென்ற இரைச்சலுடன் வெளிவருவதை கவனிக்கலாம். கொதிகலங்களில் நீராவியை அடைத்துவைத்து அதை சிறிது சிறிதாக வெளிவரும்படி செய்து பீச்சான்களை இயக்கி நீராவி என்ஜின்கள் வேலை செய்கின்றன. படத்திலிருந்து நீராவி என்ஜின் குழலில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உணரலாம். (படம் 3.)



படம் 3

உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் சூரியனது வெப்பத்தை ஆதாரமாகக் கொண்டே வாழ்ந்து வருகின்றன. சூரியன் ஆவி நிலையில் உள்ள ஒரு மகத்தான நெருப்புப் பந்து. இது பூமியிலிருந்து ஒன்பது கோடி மைலுக்கு

அப்பாலிருந்த போதிலும், அதனுடைய வெப்பத்தை நாம் தாங்க முடியவில்லை யென்றால் அதன் சூடு எத்தகையதாக இருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். சூரியனது வெப்பம் செய்யும் வேலைகளை சிறிது சிந்தித்துப் பாருங்கள். கடல், ஏரி முதலிய நீர் நிலைகளிலிருந்து நீர் சூரிய வெப்பத்தினால் ஆவியாகி காற்றில் கலந்த வண்ணம் இருக்கிறது. சில காரணங்களினால் இந் நீராவி நீர்த்துளிகளாகி மேகங்களாக மாறுகின்றன. சூரிய வெப்பத்தினால் காற்று மண்டலம் சூடேறுகிறது. இதனால் காற்று அகற்சியடைந்து மேலெழும்பி காற்றோட்டம் ஏற்படுகிறது. காற்றோட்டங்களும், மேகங்களும் ஒன்றுசேர்ந்து மேகங்கள் குளிர்ந்து மழை பெய்கிறது. நீர் ஆறுகளாக ஓடி மீண்டும் கடலில் கலக்கிறது. இவ்வாறு இடையறாமல் பருவநிலைகள் மாறி வருவதற்கு மூலகாரணம் சூரிய வெப்பமே என்பதை உணரலாம். மற்றும் ஒரு உதாரணத்தை பாருங்கள். தாவரங்கள் வளர்ச்சியைப் பார்க்கும்போது சூரியனது மகத்தான சக்தி நன்கு விளங்கும். சூரியனது வெப்பத்தையும், ஒளியையும் பயன்படுத்தும் இயற்கை தொழிற்சாலைகள் என்று தாவரங்களைக் கூறினால் அது முற்றிலும் உண்மையாகும். தாவரங்களின் இலைகளில் க்ளோரோபில் (Chlorophyl) என்று ஒரு பொருள் இருக்கிறது. "பார்க்கும் மரங்களிலெல்லாம் நின் பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா" என்று பாரதியார் பாடுகிறார் அல்லவா? அந்த பச்சை நிறத்துக்குக் காரணம் இந்த பொருள்கள்தான். சூரிய சக்தியைக் கொண்டு இப் பொருள் அநேக நூதனமான இரசாயன மாறுதல்களை செய்கின்றது. தாவரங்களின் வளர்ச்சிக்கும், நமது ஆகாரத்துக்கும் இன்யமையாததாக இருந்துவரும் கார்போஹைட்ரேட் (Carbohydrates) என்ற மாவுப் பொருள்களை தயாரிக்கின்றனர். க்ளோரோபில் இதற்கு துணை புரிவது யாது? சூரியனது வெப்பமும் ஒளியும், தாவரங்கள் செய்யும் மற்றொரு மகத்தான வேலையை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சூரியனது சக்தியில் பெரும் பகுதியை நமக்கு சேமித்து வைத்திருக்கின்றன. இச் சேமிப்பு அது சிறிய விதையிலிருந்து பெரிய மரம் ஆகும்வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மரத்தை வெட்டி அடுப்பு மூட்ட வேண்டியது தான் அது சேமித்து வைத்த சக்தியை நாம் எரிதல் மூலம் பெறுகிறோம். இச் சேமிப்பு வேலையில் மரத்தை விட சாமர்த்தியமானவை. நிலக்கரியும், எண்ணெய்யும், உலகில் பல இடங்களில் இருந்த பெரிய காடுகள் அழிந்து மரங்கள் விழ காலா போக்கில் அவை மண்ணால் மூடப்பட்டன. பூமியின் மேற்பரப்பின் மேடு பள்ளங்கள் மாறும்போது இவை எல்லாம் பூமிக்குள் ஆழப் புதைந்து கோடிக் கணக்கான வருடங்கள் அழுந்திக் கிடந்ததின் பலனாக நிலக்கரியாக மாறுகின்றன. இத்தகைய நிலக்கரிகளை தோண்டி எடுத்து வெப்பத்தை மீண்டும் பெறுகிறோம். நிலக்கரியில் பலவகை உண்டு. அவற்றில் ஒன்றுதான் லிக்னைட் (Lignite) என்று சொல்லப் படும் பழுப்பு நிலக்கரி. இது நம் நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் தோண்டி எடுக்கப்படுகிறது. நிலக்கரியைப் போலவே பூமியில் புதைந்து கிடக்கும் மாமிசாதிகள், வேறு சில தாவரங்கள் முதலியன எண்ணெயாக மாறுகின்றன. இதுதான் பெட்ரோல் எண்ணெய். இவ்வாறாக சூரிய வெப்பம் உலகில் செய்துவரும் வேலைகள் கணக்கில் அடங்காமல் இருந்து வருகின்றன.

ஒன்பது கோடி மைலுக்கு அப்பாலிருந்து நமக்கு இத்தகைய வள்ளலாக பேருதவி அளித்து வரும் சூரியன் தீராத இளமையுடன் இருந்து வருவதன் மர்மம் என்ன வென்று விஞ்ஞானிகள் சிந்திக்கலானார்கள். சூரியன் முழுவதும் நிலக்கரியாக இருந்திருப்பின் அது எரியத் தொடங்கிய சில ஆயிர ஆண்டுகளுக்குள்ளாகவே அது சாம்பராகி மறைந்திருக்கவேண்டும் என்று தெரிய வந்தது. ஆனால் சூரியன் பல கோடி ஆண்டுகளாக ஒரு வித மாறுதலின்றி எரிந்து கொண்டிருப்பதை அறிகிறோம். எனவே இது காரணமாக இராது என்று ஆயிற்று. ஹெம் ஹோல்ஷ் (Helm Hoetz) என்ற விஞ்ஞானி மற்றொரு ஊகத்தை கூறினார். சூரியனது எடை மகத்தானது. இதன் விளைவாக அது சுருங்க வேண்டும். இச் சுருக்கத்தினால் அதன் நடுப் பிரதேசத்தில் அழுத்தமும், வெப்பமும் உயரும். வெப்பத்தினால் உண்டாகும் அகற்சிக்கும், அழுத்தத்தினால் உண்டாகும் சுருக்கத்திற்கும் இடையறாது எதிர்ப்பு இருந்து வரும். இவற்றிடையே சமநிலை நீடித்திருக்கமுடியாது. ஏனெனில், சூரியன் ஓயாமல் சக்தியை இழந்து வருகிறது அல்லவா? ஆகையினால் அது சுருங்கிக் கொண்டே வர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பாகம் அது சுருங்கி வந்தால் அது வெளியிட்டு வரும் சக்தியை ஈடுகாட்ட முடியும் என்று கணக்கிட்டுப் பார்த்து அவ்வாறு இருப்பின் சூரியனின் வயது ஐந்து கோடி ஆண்டுகளே ஆகும் என்று கூறினார். சூரியனது வயது பல கோடி ஆண்டுகளாக இருக்கும் போது, இவரது கணக்கு சரியில்லை என்று இக்காரணமும் கைவிடப்பட்டது. கடைசியில் உண்மை காரணம் தெரிய வந்தது. பொருள்களெல்லாம் அணுக்களால் ஆனவை என்று முன்பு பார்த்தோம் அல்லவா? ஒவ்வொரு அணுவிலும் நேர் மின்சாரத்தை ஏற்றுள்ள அணுக்கரு (Nuclues) என்ற பகுதி இருப்பதும் அதை சூழ்ந்து பல்வேறு வட்டங்களிலே எதிர் மின்சாரத்தை ஏற்றுள்ள எலெக்ட்ரான்கள் (Electrons) ஓடிவருவதும் தெரியவந்தது. சூரியனில் நூற்றுக்கு முப்பதைந்து பங்கு ஹைட்ரஜன் (Hydrogen) வாயு இருக்கிறது. சூரியனிலுள்ள அளவு கடந்த வெப்பத்தினால் அணுக்கள் எல்லாம் சிதைந்து அணுக் கருக்கள் வேறாகவும், எலெக்ட்ரான்கள் வேறாகவும் இருக்கின்றன. ஹைட்ரஜன் அணுக்கருக்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும்போது நான்கு ஹைட்ரஜன் அணுக்கருக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ஹீலிய (Helium) அணுக்கருவாக மாறுகின்றது. இம் மாறுதலின்போது சிறிது பொருள் சிதைந்து சக்தியாக மாறுகிறது என்று தெரியவந்தது. 'சூரியனது அபரிமித வெப்பத்துக்கும், தீராத இளமைக்கும் உண்மை காரணம் இதுவே ஆகும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த மர்மத்தை உணர்ந்த பின்னர், இக் கருத்தைப் பயன்படுத்தி, உலக அமைதியை குலைக்கும் அணுகுண்டுக்கு (Atom Bomb), அண்ணனாக ஹைட்ரஜன் குண்டு (Hydrogen Bomb) என்ற மற்றொரு யமனையும் விஞ்ஞானிகள் உண்டாக்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் விஞ்ஞானிகளா அல்லது வல்லரசுகளா என்று தெரியவில்லை. உலகில் ஆதிக்க வெறியும் சுயநலமும் தாண்டவமாடும் வரை, விஞ்ஞான வளர்ச்சியினால் மக்கள் முற்றிலும் நல்ல பலன்களையே பெறமுடியாது என்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

—·—

"கிராமப் பெண்களுக்கு, சிறு இயந்திரங்களால் இயங்கும் தொழில்கள் கற்றுத்தரப்படவேண்டும்"

கிராமப் பெண்களின் ஊதியம் பெருக, முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் யோசனை

"கிராமங்களில் வாழும் மாதர்களின் வருவாய் பெருகுவதற்கு அரசாங்கம் நிறைவேற்றிவரும் திட்டங்கள் வெற்றிபெற சேவை உணர்ச்சி உள்ளவர்கள் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியம்" என்று முதல் அமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** வேண்டுகோள் விடுத்தார்.

1962ஆம் மே மாதம் 25-ம் தேதியில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர், புதுச்சேரி ஆகிய தென் பிராந்திய ராஜ்யங்களிலுள்ள தனியார் சமூக நல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளின் மகாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் முதல் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கிராமப் பெண்களின் வருவாயைப் பெருக்க, அவர்களுக்கு கல்வியும் கைத்தொழில் பயிற்சியும் அவசியம். பெரும்பான்மையான கிராமங்களுக்கு தற்போது மின்சார வசதி வந்துவிட்டது. கிராமங்களில் விவசாய காலங்களில் தவிர, மற்ற காலங்களில் வேலை கிடையாது. அங்குள்ள தாய்மார்கள் ஓய்வு காலத்தில் சம்பாதித்து, வருவாயை உயர்த்திக்கொள்ள வழி செய்ய வேண்டும். அதற்கு, அவர்களுக்கு கல்வி அறிவு ஏற்பட வேண்டும். கிராமங்களில் கல்வி பயில நாம் வசதி செய்து தருகிறோம். இளம் பெண்கள் வருவாய் உயர வழி செய்து தருகிறோம். நெசவு, நூல் நூற்பது போன்ற பல தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தலாம். **கிராமங்களுக்கு மின்சார வசதி வந்து விட்டபடியால், சிறு இயந்திரங்கள்மூலம் கிராமப்பெண்கள் சில தொழில்களை நடத்த வழிசெய்யவேண்டும், தமிழ்நாட்டுக் கிராமங்களில் கிடைக்கும் மின்சார சக்தியை சிறு இயந்திரங்களை இயக்கப் பயன்படுத்தலாம்**" என்று முதல் அமைச்சர் யோசனை கூறினார்.

தொடர்ந்து அவர் பேச்சில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்: "சமுதாய நலத்துக்காக பலவேறு திட்டங்களை அமைத்து அவற்றை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண்டுவருகிறோம். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், சமுதாயச் சீர்கேடுகளைப் போக்கவும் வழி செய்யவேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக இத்துறைகளில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறோம். அரசாங்கம் மட்டும் தனியாக இக்காரியங்களைச் செய்வது எளிதல்ல. நல்ல சேவை உணர்ச்சி உள்ளவர்கள் முன் வரவேண்டும். அரசாங்கம் அவர்களுடைய சேவைக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்."

"நம் ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் சமூக நல ஸ்தாபனங்களும், அரசாங்க நிர்வாகமும் ஒன்றாக இணைந்து சேவை செய்து வருகின்றன. கடந்த பத்து ஆண்டுகால முன்னேற்றத்தை விட, ஓராண்டுக்குள் இந்தப் புதிய முறையினால் நல்ல வெற்றி கண்டுள்ளோம். நம் நாடு கிராமங்கள் நிறைந்தது. எனவே, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி செய்ய வேண்டியது அவசியம். விவசாய காலத்தைத் தவிர, பாக்கி காலங்களில் கிராமத் தாய்மார்களுக்கு வேலையே கிடையாது. அவர்களின் வருவாயைப் பெருக்க அவர்களுக்குக் கல்வி அவசியம். கல்வி கற்றுக்கொள்ள பழைய காலத்தில் அவர்களுக்கு வசதி இல்லை. இப்போது நிலைமை மாறி எல்லா கிராமங்களிலும் கல்வி வசதி ஏற்பட்டுள்ளது. ஆனால் பெண்களில் முதியோர்கள் பள்ளிகளுக்குச் சென்று படிப்பதற்கில்லை. அவர்களையும் கல்வி கற்கச் செய்ய வேண்டும். மத்திய சமூக நல போர்டு இதற்கான பயிற்சித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அது வெற்றி அடைய வேண்டும். பெண்களுக்கு நூல் நூற்றல், நெசவு போன்ற கைத்தொழில்களையும் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம்".

இந்த தென்பிராந்திய தனியார் சமூக நல ஸ்தாபன பிரதிநிதிகள் மகாநாட்டை, அகில இந்திய கைநுட்ப வேலை போர்டு தலைவி **திருமதி கமலாதேவி சட்டோபாத்யாயா** துவக்கிவைத்துப் பேசினார். தனியார் சமூகநல நிறுவனங்களும் அரசாங்கமும் இணைந்து வேலைசெய்ய வேண்டியதன் அவசியத்தையும், நம் சமூகப் பொருளாதார நிலை உயரவேண்டுமானால், கைத்தொழில் உற்பத்தி பெருகவேண்டும் என்றும், அவர் தமது துவக்க உரையில் குறிப்பிட்டார்.

மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய சுகாதார அமைச்சர் **திருமதி ஜோதி வெங்கடாசலம்**, ஸ்தாபன ரீதியான சமூக நலத் திட்டங்கள் குறித்தும் தனியார் ஸ்தாபனங்களின் பிரச்சினைகள் குறித்தும் விளக்கிப் பேசினார். மத்திய சமூக நல போர்டு தலைவி **திருமதி துர்காபாய் தேஷ்முக்** மகாநாட்டின் நோக்கங்களை விளக்கினார். மத்திய சமூக நல போர்டு சார்பாக **திருமதி ராமராவும்**, மாநில சமூக நல போர்டு சார்பில் அதன் தலைவி **திருமதி எஸ். அம்புஜம்மாளும்** நன்றி கூறினார்கள்.



1

2

கிராமக் கைத்தொழில்கள் ஓங்கி வளரவேண்டும். கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு விவசாயக் காலம் தவிர, மற்ற நேரங்களில் ஓய்வு அதிகம். குறிப்பாக, கிராம மாதர்கள் கிராமக் கைத்தொழில் களில் ஈடுபட்டுப் பாடுபடுவதின் மூலம், தங்களுடைய வருவாயை அவர்கள் பெருக்கிக் கொள்ளவும், கிராமப் பொருளாதாரத்தை மேம்பாடான முறையில் வளர்க்கவும், மாதர்கள் இத்துறையில் ஈடுபட்டுப் பணி புரிய, பஞ்சாயத்து சம்பந்தப் பட்டவர்கள் ஆவன புரியவேண்டும்.

3

" நாட்டின் அச்சாணியான
கிராம மக்கள் நல்வாழ்வு வாழ "







ஒவ்வொரு கிராமமும், சுயபலமும், தன்னிறைவும் பெற்றுத் திகழவேண்டும். கிராமக் கைத் தொழில் வளர்ச்சி, கிராமப் பொருளாதாரத்திற்கு அச்சாணி போன்றது. கிராமக் கைத் தொழில்கள் சம்பந்தப்பட்ட எல்லா அபிவிருத்தி வேலைத் திட்டங்களும், பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தங்களுடைய பொறுப்பினை உணர்ந்து, பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்கள் இத்துறையில், மிகுந்த அக்கறையுடன் பாடுபட வேண்டும்.



" உலகத் தொழிலனைத்தும்
உவந்து செய்வோம்.. ".

நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, விவசாயம் பெருக வேண்டும். அத்துடன் தொழில் வளமும் பெருக வேண்டும். தமிழ்நாட்டு கிராமக் கைத்தொழில்கள் தமிழகத்தின் கை வண்ண வேலைப்பாடுகளுக்கும், கிராமியக் கலை வளர்ச்சிக்கும், அழகுணர்ச்சிக்கும் சான்றாகத் திகழ்கின்றன. உழைப்புக்கும், உறுதிக்கும், அழகுணர்ச்சிக்கும் இருப்பிடமான தமிழ்நாட்டின் கைத்தொழில்கள் பண்டைச் சிறப்பு வாய்ந்தவை என்பது மட்டுமல்ல; பல்லோராலும் போற்றி புகழப்படுபவையாகும்.



கிராம நலம் பகுதி-௨

பஞ்சாயத்து அரசிதழ்

GRAMA NALAM PART—II

PANCHAYAT GAZETTE

விரிவு படுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்—மீன் வளர்ப்பு—செலவும் பணியாளர்களும்

[Expanded Nutrition Programme—Pisciculture—Expenditure and Staff—Sanctioned]

(G.O. Ms. No. 993, R. D. and L.A., Dated 21 April, 1962.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் வருடம் பிப்ரவரி மாதம் 10 தேதியிட்ட அரசாங்க ஆணை 328-ல், விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத்திட்ட வேலை முறையை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. பல்வேறு இனங்களின் கீழ் ஆகும் செலவுகளை அனுமதித்தும், இந்த வேலைக்கு அமர்த்தப்பட வேண்டிய பணியாளர் பற்றியும் ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. மீன் வளர்ப்பு—அந்தத் திட்டத்தின் பல்வேறு இனங்களில் ஒன்றாகும். மீன் வளர்ப்பின் கீழ், இருக்கின்ற நீர் நிலைகளெல்லாம் தேவையான அளவு நீர் நிரப்பப்படும்.

பஞ்சாயத்துக்களுக்கு சினை மீன்களை மீனளத்துறை மூன்றுண்டுகளுக்கு இலவசமாக வழங்கும். மீன் வளர்ப்புக் குளங்களைப் புதுப்பிக்க, தேவைப்பட்டால், பஞ்சாயத்துக்களுக்கு மானியங்கள் வழங்கப்படும். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி ஸ்தாபனம் (UNICEF) 7 தொகுதி (sets) மண், நீர் பகுத்துணர் கருவிகள், 42 இடப் பரிசோதனைப் பெட்டிகள், 7 பரிசோதனைத் துணைக் கருவிகள், 84 உயிர் வளிக்குழாய்கள், அடைப்புக்கள் (Oxygen Cylinders and volves) செயற்கைப் பட்டு நூல் (5,000 பவுண்டு), அழுக்கெடுப்புக் கருவிகள், நாடாப்பின்னல் வளர்புக்கருவிகள் குளிர் காப்பு பெட்டிக்கருவிகள் முதலியன வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி ஸ்தாபனம் (UNICEF) வழங்குகின்ற செயற்கைப் பட்டு நூல், பஞ்சாயத்துக்களின் மாதர் நலக் குழுக்களின் துணையுடன் அவற்றின் சொந்தச் செலவில் வலைகள் பின்னிக்கொள்ள என்று, பஞ்சாயத்துக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி ஸ்தாபனம் வழங்கும் இதர கருவிகள், பஞ்சாயத்துக்களுக்கு மீன் வளர்ப்பு விஷயத்தில் உதவி செய்யும் வகையில் திட்டப் பணியாளர்களால் பயன்படுத்தப்படும்.

2. குளங்களின் பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும் பஞ்சாயத்துக்கள் பொறுப்பேற்கும், இந்தக்குளங்களைப் பாதுகாக்க, தேவையானால், பஞ்சாயத்துக்கள் தம்முடைய செலவில் காவல்காரர்களை அமர்த்திக் கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுப்பவர்களுக்கு மீன் வளர்ப்பில் ஒரு குறுகியகாலப் பயிற்சி அளிக்கப்படும் இப்பயிற்சியாளருக்கு ஐக்கிய நாடுகள் குழந்தைகள். நிதி ஸ்தாபனம் படிப்பு உதவித்தொகை அளிக்கும்.

3. இதற்குப் பதிலாக ஒவ்வொரு 1,000 ஜனத் தொகை பகுதியிலும் கருத்தரித்த, குழந்தைப் பேறுள்ள 50 தாய்மார்களுக்கும், பள்ளிப்பருவ முன் நிலைக்குழந்தைகள் (Pre School Children) 100 பேருக்கும் ஓராண்டுக்கு 1,000 பவுண்டு மீன் வழங்கவேண்டும்.

4. இந்த ஆணையின் இணைப்பில் கூறியுள்ள படி ரூ. 70,000 (எழுபதாயிரம் ரூபாய் மட்டும்) தொடர்ந்து ஏற்படாச் செலவுகளுக்கும், ரூ. 72,000 (எழுபத்திரண்டாயிரம் ரூபாய் மட்டும்) தொடர்ந்து வரும் செலவுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5. அமர்த்தப்படும் தேதியிலிருந்து ஓராண்டுக்கு, கீழ்க் கண்ட பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது :

(1) ஆய்வுத்துணைவர்கள் (Research Assistants) ரூ. 175—10—225—15—375 என்ற சம்பள வீதத்தில் —2 (இருவர்). —(உயிரியலுக்கு ஒருவர், நீரியல், ரசாயனவியல் ஆகியவற்றிற்கு ஒருவர்.)

(2) மீனள உதவி மேற்பார்வையாளர்.

ரூ. 125—5—175 என்ற சம்பள வீதத்தில்—7 (எழுவர்).

(ஒரு நிலையத்துக்கு ஒருவர் வீதம்).

இந்தப் பணியாளர்கள், விதிகளின் கீழ் கிடைக்கத் தக்க வழக்கமான படிகளுக்குத் தகுதியுடையவர்களாவார்கள்.

6. இச் செலவுகள் ஊட்ட உணவுத் திட்டம்—குழந்தைகள் நிதி ஸ்தாபனத்தின் துணையுடன் விரிவுப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் என்ற புதிய துணைத் தலைப்புத் தொகுதியில் பற்றுவைககப்படும். இந்தத் துணைத் தலைப்பு, "47-எ, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணியும் தல அபிவிருத்தி வேலைகளும்—எ. சாதாரணமானவை(IV) பொது." 2. மீனளம். அதிகாரிகளின் சம்பளம்—நிர்வாக அமைப்பின் சம்பள—படிகள். பஞ்சப்படி. பயணப்படி. இதர நஷ்ட ஈட்டுப் படி. இதர செலவுகள்—மீன் குளங்களைப் புதுப்பித்தல் மீன் பிடித்தல்—சில்லறை செலவுகள் என்ற தலை பின் கீழும் துணைத் தலைப்புக்களின் கீழும் தொடங்கப்படும்.

இணைப்பு

	தொடர்ந்து ஏற்படாச் செலவுகள். ரூ.	தொடர்ந்து ஏற்படும் செலவுகள். ரூ.
(1) மீன் குளங்களைப் புதுப்பிக்க, ஒரு வட்டாரத்துக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில் அளிக்கும் மானியங்கள்.	70,000	இல்லை.
(2) சினை மீன்களைச் சேகரிக்கவும், மாற்றம் செய்யவும் ஒரு வட்டாரத்துக்கு ஓராண்டுக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில்.	..	70,000
(3) இதர செலவுகள் ..	..	2,000
ஆக மொத்தம் ..	70,000	72.000

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 21-4-'62 தேதியிட்ட அரசாங்க ஆணை : 993)

—o—

பஞ்சாயத்து யூனியன் வரைப்படத் தயாரிப்பு

(Preparation of a map for each Union—Instructions Issued)

(Memorandum No. 42223, Cheif Engineer, H. and R.W., Dated 24th May 1961)

டிவிஷனல் எஞ்சினியர்களுக்கு (நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள்) வட்டாரப் பகுதிகளைக் குறித்துள்ள சப் டிவிஷன் வரைப்படங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில், அரசாங்கப் பாதைகளையும், பிறபாதைகளையும் (வகைப் படுத்தப்பட்டபடி) வெவ்வேறு வண்ணங்களால் குறித்துக் காட்டி, அவற்றைத் தலைமை எஞ்சினியர் அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்ப விளக்கங்களும் அனுப்பப் பட்டுள்ளன. இந்தப் படங்கள் சில டிவிஷனல் எஞ்சினியர்களிடமிருந்து இன்னும் வரவேண்டியுள்ளன. அவை உடனே அனுப்பப்படவேண்டும்.

1961-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து இந்தத் துறை பஞ்சாயத்து நிர்வாகத்துடன் ஒத்தியங்க, அமைந்துள்ள அதிகார வரம்புக்குட்பட்டு, திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. தலைமை எஞ்சினியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள சப் டிவிஷன் வரைப்படங்கள் அல்லது தாலுகா வரைப் படத்திலிருந்து பிரதி எடுத்து யூனியன் வரைப்படம் ஒன்று, 1 அங். = 1 மைல் என்ற அளவு வீதத்தில் கீழ்க்குறித்தப்படி தயாரித்து சட்டம் போட்டு யூனியன் அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு பிரதி கண்காணிப்பின்போது (Inspection) பயன்படுத்த யூனியன் எஞ்சினியரிடம் இருக்கவேண்டும். மற்றொரு பிரதி தலைமை எஞ்சினியர் அலுவலகத்திற்கு, ஆதாரத்திற்கென்று (Reference) அனுப்பி வைக்கவேண்டும்.

இந்த வரைப்படம், பொது மக்களுக்கும், கண்காணிப்பு அதிகாரிக்கும் பெரிதும் பயன்படுவதுடன், அந்த யூனியனில் இந்தத் துறையினுல் மேற்கொள்ளப்படும் கிராம வேலைகளை எடுத்துக்காட்டுவதாகவும் அமைய வேண்டும். இந்தப் படம் எல்லா விவரங்களுடனும் ஒவ்வொரு யூனியன் அலுவலகத்திலும் வைக்கப்பட்டிருக்கிறதா என்று டிவிஷனல் எஞ்சினியர்கள் தம்முடைய யூனியன் சுற்றுப் பயணத்தின் போது பார்த்துக்கொள்ள வேண்டும்.

வட்டாரப் படத்தில் (யூனியன் பகுதிப் படத்தில்) கீழ்க் கண்ட விவரங்கள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் :—

(1) யூனியனில் போடப்பட்டுள்ள எல்லா அரசாங்க பாதைகளும் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில டுெநஞ்சாலைகள், பெரிய மாவட்டப் பாதைகள்) கருப்பு நிறதில் குறிக்கப்பட வேண்டும்.

(2) (a) தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருடம் பிப்ரவரி மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 438-ல் வகைப்படுத்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் பாதைகள் பச்சை நிறத்தில் குறிக்கப்பட வேண்டும். (—).

(b) பஸ்கள் ஓடுகின்ற பஞ்சாயத்து யூனியன் பாதைகள் பச்சை நிறத்தில் துண்டுக் (இடை நிறுத்தக்) கோடுகளால் குறிக்கப்பட வேண்டும். (— — — —).

(3) (a) தல நிர்வாகத் துறையின் 1961-ம் வருடம் பிப்ரவரி மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 438-ல் வகைப் படுத்தப்பட்ட பஞ்சாயத்துப் பாதைகள் வெளிர் (இள) நீல நிறத்தில் குறிக்கப்பட வேண்டும்.

(b) பஸ்கள் ஓடுகின்ற பஞ்சாயத்துப் பாதைகள் வெளிர் நீல நிறத்தில் துண்டுக் (இடை நிறுத்தக்) கோடுகளால் குறிக்கப்பட வேண்டும் (— — — —)

4. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகள் (பாதை அமைப்பு, ஜல்லிபோடுதல், புதுப்பித்தல், பாலங்கள் கட்டுதல் முதலியன) மஞ்சள் நிறத்தில் குறிக்கப்பட வேண்டும் அதாவது பாதைகளும் பாலங்களும்.] [

5. (a) கிராம நீர் வழங்கு (தொகுப்பு) திட்டம் பிரதேச அபிவிருத்தித் திட்டம் முதலான திட்டங்களின் கீழ் வெட்டப்படும் கிணற்று வேலைகள் தவிர ஏனைய நீர் வழங்கு வேலைகள் (மேல் மட்ட நீர்த்தொட்டி முதலியன) படத்தில் (w.s.) என்று காட்டப்படவேண்டும்.

(b) தேசிய நீர் வழங்கு, துப்புரவுக் கிராமிய திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் நீர் வழங்கு வேலைகள் மேல்மட்ட நீர்த்தொட்டி முதலியன) (N.W.S) என்று காட்டப்படவேண்டும்.

(c) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள கிராம நீர்வழங்கு திட்ட அல்லது தேசிய நீர் வழங்கு துப்புரவுக்குக் கிராமியத்திட்ட நீர் வழங்கு வேலைகள் (W.S.) அல்லது (N.W.S) என்று காட்டப்பட வேண்டும்.

6. யூனியனிலுள்ள சிறிய பாசன நீர் நிலைகளும், பெரிய பாசன நீர் நிலைகளும் முறையே (T) என்றும் (M.T.) என்றும் காட்டப் பட வேண்டும்.

7. பஞ்சாயத்து யூனியன் கட்டடங்களும், பஞ்சாயத்து யூனியன் சந்தைகளும் (Markets) முறையே (U.B) என்றும் (U.M.) என்றும் காட்டப்படவேண்டும்.

8. கண்காணிப்பாளர் மாளிகைகள் (Inspection) Bungalows), சுற்றுலா மாளிகைகள் (Tourist) Bungalows) அல்லது பயண மாளிகைகள் (T.r.) முதலியன முறையே, (I.B.) என்றும் (T.B.) என்றும் குறிக்கப்படவேண்டும்.

9. ரயில் நிலையங்களுடன் ரயில் பாதைகள், யூனியனில் உள்ள நகரப் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் முதலியனவும் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட வேண்டும் :—

ரயில் நிலையத்துடன் ரயில் பாதை.

நகரப் பஞ்சாயத்து. (T.P.)

கிராமப் பஞ்சாயத்து. (V.P)

(நெடுஞ்—சாலைகள், கிராமவேலைகள் துறையின் தலைமை எஞ்சினியரின் 24-5-61 தேதியிட்ட அறிக்கை எண் 42223)

---o---

கிராமப் புறங்களில் மனித சக்தியைப் பயன் படுத்தச் செயல் திட்டம்—பஞ்சாயத்து மண் வளப் பாதுகாப்புத் திட்டமும் நில வளவுக் கரைகளை அமைக்கும் வேலையும்—பஞ்சாயத்து யூனியன்களும் பஞ்சாயத்துக்களும் ஒருங்கிணைந்து திட்டத்தை நிறை வேற்ற வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப் படுதல்

(Works programme for utilisation of rural manpower—Panchayat Soil Conservation Scheme and Contour Bunding—Association of Panchayats and Panchayat Union—Implementation of the Scheme—Selection of Blocks—ordered.)

(G. O. Ms. No., 785, R. D. & L. A., dated 31—3—62)

கிராம நல—தல நிர்வாகத் துறையில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 689-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து மண் வளப் பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் கீழ்க்கண்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட அரசாங்கம் ஆணையிடுகிறது.

(a) கோயம்புத்தூர் மாவட்டம்.

(i) கோபிசெட்டிபாளம் வட்டாரம்.

(ii) குண்டடம் வட்டாரம்.

(iii) மதுக்கரை வட்டாரம்.

(b) சேலம் மாவட்டம்.

(i) கிருஷ்ணகிரி தாலுகாவில் காவேரிப்பட்டணம் வட்டாரம்.

(ii) தர்மபுரி தாலுகாவில் நல்லம்பள்ளி வட்டாரம்.

(iii) நாமக்கல் தாலுகாவில் எலச்சிபாளையம் வட்டாரம்.

2. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 759-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பரிசோதனை நில வளவுக்கரை (Contour Bunding) அமைப்புத் திட்டத்தைச் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வட்டாரங்களில் செயல்படுத்தவும் அரசாங்கம் ஆணையிடுகிறது.

(i) கிருஷ்ணகிரி தாலுகாவில் வெப்பனபள்ளி வட்டாரம்.

(ii) நாமக்கல் தாலுகாவில் எருமைப்பட்டி வட்டாரம்.

3. இவ்வாணையுடன் A, B, C, D என்ற நமூனுக்களில் ஆய்வுப் பட்டியல்கள் இணைக்கப்பட்டுள்ளன நமூனு A, B ஆகிய ஆய்வுப் பட்டியல்களைக் கலெக்டர்கள் உடனடியாகப் பூர்த்தி செய்து 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதிக்குள் மூன்று பிரதிகளை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் அவர்கள் C, D நமூனுக்களின் ஆய்வுப் பட்டியல்களையும் நிரப்பி மூன்று பிரதிகள் எடுத்து ஒவ்வொரு மூன்று மாத முடிவிலும் அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மூன்று மாதம் முடிந்து அடுத்த மாதம் 10-ம் தேதி அளவில் மூன்று மாத அறிக்கை அனுப்பப்படவேண்டும்.

இணைப்பு

A. கிராமப் பகுதிகளில் வேலைத் திட்டங்களுக்கு முனனோடித் திட்டங்களை (Pilot Projects) வகுக்க ஆய்வுப் பட்டியல்:

1. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைப் பற்றிய விவரங்கள்.

இட அமைப்பு ; மொத்தப் பரப்பு ; பயிரிடப்பட்ட பரப்பு; பாசன வசதி செய்யப்பட்ட பரப்பு. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நிலை.

2. பகுதியின் மக்கள் தொகையும் தொழில் தன்மைகளும். வேலையில்லாமை, வேலை குறைவுடைமைப் பற்றிய விவரங்கள்.

3. பகுதியில் எடுத்துச் செய்யப்படும் சிறப்பான அபிவிருத்தி வேலைகள். சிறப்பாக விவசாயம், நீர்ப்பாசனம், மண் வளப்பாதுகாப்பு, நிலத் திருத்தம் (அ) மீட்சி கழிவு நீர்க் கால்வாய், காடு வளர்ப்பு, பாதைகள், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் முதலியன பற்றிய வேலைகள்.

4. நடை முறை ஆண்டில் வட்டாரத்தில் மேலே 3-வது பகுதியில் கூறப்பட்ட துறைகளில் எடுக்கப்பட்ட, முதன்மையான திட்டங்களும் ( ) அடுத்த ஆண்டுக்கான வேலைத் திட்டமும் ( )*.

5. கீழே கண்ட விவரங்களுடன், நடை முறை ஆண்டிலும் ( ) அடுத்த ஆண்டிலும் ( ) எடுத்து நடத்த உத்தேசித்திருக்கும் அதிகப்படியான வேலைத் திட்டங்கள்.

(i) உத்தேச மதிப்பு.

(ii) உத்தேச அரசாங்க செலவு.

(iii) சமுதாய நன்கொடையின் உத்தேச மதிப்பு.

(iv) நிறைவேற்றத்திற்கான தற்காலிக அட்டவணை.

6. தனிப்பட்டோருக்குக் கடன் வழங்கும் முறையில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டச் செலவுகளும், உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விதிகளும்.

7. வேலை நிறைவேற்ற நிர்வாக நிறைவேற்றத் துணை அமைப்பு ஏற்பாடுகள்.

8. நடை முறை ஆண்டிலும் ( ) அடுத்த ஆண்டிலும் ( ) உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை நாட்களில் வேலை வாய்ப்பு.

9. உத்தேச திட்டத்தைப் பற்றிய பொதுவான நடைமுறைக் குறிப்பும் அந்தப் பகுதியில் திட்டத்தால் விளையக் கூடிய பலாபலனும்.

*வட்டாரத்தின் மொத்தத்திற்கும் ஒவ்வொரு திட்டத்திற்குமான எண்ணிக்கை. எடுத்துக்காட்டாக, மண் வளப் பாதுகாப்பு, சிறிய நீர்ப்பாசனம், முதலியன. திட்டத்துக்குட்பட்ட தனியான வேலைகள் குறிக்கப்பட்டத் தேவையில்லை.

கிராமிய மனித சக்தியைப் பயன் படுத்த வேலைத் திட்டம்

B. திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான ஆய்வுப் பட்டியல்

மாநிலம்...............

மாவட்டம்...............

வட்டாரம்...............

1. திட்டத்தைப் பற்றியும், அதன் வேலை வகைகளையும், பயன்களையும் குறிக்கும் இட அமைப்புப் பற்றும் சிறு விளக்கம்.

2. தொடங்கவும் முடிக்கவுமான நிகழ்ச்சி முறை:

3. உத்தேச மதிப்பின் மொத்தம்.—

கூலி:

பொருள்கள்:

பணியாளர்கள்:

கருவிகளும், யந்திரங்களும்:

நிலம்:

4. சமுதாய நன்கொடை:—இயல்பும் உத்தேச மதிப்பும்.

5. அரசாங்கத்தின் உத்தேச செலவு.

6. பிரதேசக் கூலி வீதங்கள்.

(பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியே பயிற்சி பெற்ற வேலை, பயிற்சி பெறாத வேலை, வேலைக் காலங்கள், வேலையில்லாத காலங்கள், ஆகியவைகளுக்கு).

7. மண் வேலைக்கும் (100 கன அடி), கட்டு வேலைக்கும் (100 கன அடி) கூலி வீதங்கள்.

8. தனிப்பட்டவர்களுக்குக் கடனாக வழங்கும் வகையில் ஆகும் செலவுகள், அதற்கான கட்டுப்பாட்டு விதிகள்.

9. உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை நாகட்ளில் வேலை வாய்ப்பு.

10. வேலை நிறைவேற்றத் துணை அமைப்பு.

(பஞ்சாயத்து சமிதி/வட்டார அமைப்பு ; துறைச் சார்புடையது : தொழில் கூட்டுறவு ; தானே முன் வந்து பணியாற்றும் நிறுவனம் ; கிராமப் பஞ்சாயத்து.)

11. பொதுக் குறிப்புரைகள்.

C. காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளுக்கான ஆய்வுப் பட்டியல்

மாநிலம் : ....

மாவட்டம் : ....

வட்டாரம் : ....

அறிக்கைக்காலம் : ....

ஜனவரி—மார்ச்.

ஏப்ரல்—ஜூன்.

ஜூலை—செப்டம்பர்.

அக்டோபர்—டிசம்பர்.

1. திட்டத்தின் பெயர்*:

2. மொத்த உத்தேச மதிப்பும் உத்தேச அரசாங்கச் செலவுகளும் :

3. திட்டத்தின் முன்னேற்றம் — நிறைவேற்றப்பட்ட வேலையின் நிலை:

(a) மண்வேலை (சத வீத கன அடி)— நிறைவேற்றப் பட்ட வேலையின் சத வீதம்.

(b) கட்டு வேலை (சத வீத கன அடி)—முன்னேற்றத் திலுள்ள வேலையின் சத வீதம்.

(c) பலன் பெறும் பரப்பு—(ஏக்கர்களில்).

4. காலாண்டில், அரசாங்கத்தால் செய்யப்பட்ட செலவு அறிக்கையின் கீழ்.	கலாண்டு முடிவு வரை (தொகுப்பு).	அடுத்த இரண்டு காலாண்டு களில் எதிர் பார்க்கப்படு வது.

5. பெறப்பட்ட சமுதாய நன்கொடை (தன்மையும் மதிப்பும்).

6. தனிப்பட்டவர்களுக்கு கடன் வழங்கும் வகையில் செலவு.

7. (a) செலுத்தப்பட்ட கூலி வீதங்கள் (ஆண் களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே பயிற்சி பெற்ற வேலை, பயிற்சி பெறாத வேலைகளுக்கு).

(b) செலுத்தப்பட்ட மொத்தக் கூலி.

8. மண் வேலைக்கும் (100 கன அடி) கட்டு வேலைக்கு (100 கன அடி) செலுத்தப்பட்ட கூலி வீதங்கள்.

9. வேலை வாய்ப்பு.—(a) வேலை நாட்களில் வேலை வாய்ப்பு. (b) காலாண்டில், மாதந்தோறும் அன்றாட வேலையாட்களின் சராசரி எண்ணிக்கை.

10. வேலை நிறைவேற்றப்படுகிற துணை அமைப்பும் குறிப்புரைகள் ஏதாவது இருப்பின் அவையும்.

11. திட்டங்கள் செயல்படுதல் பற்றிய பொதுவான நடை முறைக் குறிப்பு—உடைப்புச் சக்தியின் அளவு, தனிப் பட்டவருக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை, சிக்கல், ஆலோசனைகள் முதலியன உட்பட.

*திட்டங்களின் உதாரணங்களாவன : மண் வளப் பாதுகாப்பு, சிறிய நிர்ப்பாசனம் ; காடு வளர்ப்பு முதலி யன. ஒரு திட்டம் பல்வேறு இடங்களில் நடக்கும் பல் வேறு வேலைகளை உள்ளடக்கியிருக்கலாம்.

D. காலாண்டுத் தொகுப்பு

மாநிலம் : ....

மாவட்டம் : ....

வட்டாரம் : ....

அறிக்கைக் காலம் : ....

(ரூபாய்கள் ஆயிரக் கணக்கில்.)

		செய்யப்பட்ட செலவுகள்.			வேலை நாட்களில் வேலை வாய்ப்பு.		
வரிசை எண்.	திட்டம்.	காலாண்டுக் காலத்தில்.	காலாண்டு முடிவில் (தொகுப்பு)	அடுத்த இரண்டு காலாண்டு களில் எதிர்பார்க்கப் படுவது.	தனிப்பட்டவர்களுக்குக் கடன் கள்	காலாண்டு காலத்தில்.	காலாண்டு முடிவில் (தொகுப்பு)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 31-8-1962 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 785.)

கிராமத் தொழில்கள்: சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமத் தொழில்களின் அபிவிருத்தி—கிராமியக்கலை—கைத்தொழில் - தொழிலின் கீழ் மாநிலக் கதர் - கிராமத் தொழில் போர்டு நிறைவேற்றும் திட்டங்களுக்கு முன் பண அனுமதி.

[Village Industries-Development of Village Industries under Community Development Programme—Implementation of Schemes under "Rural Arts, Crafts and Industries" by the State Khadi and Village Industries Board—Advance Sanctioned.]

(G. O. Ms. No. 737, R. D. & L. A., dated, 26-3-62.)

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 5-7-61-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1864—ல், 1961-62 ஆண்டுக் காலத்தில் " கிராமியக் கலைக் கைத்தொழில்—தொழில் " என்ற தலைப்பின் கீழ் மாநிலக் கதர்—கிராமத் தொழில் போர்டுதிட்டங்களை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப் பட்டுள்ள உதவி மானியங்கள் கணக்கில் சரிக்கட்டிக் கொள்வதற்கு உட்பட்டு வட்டியில்லா வழிமுறை முன் பணம் (Interest free, ways and means advance) ரூ.10.78 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, போட்டிடமிருந்து காலாண்ச் செலவறிக்கை கிராம நல—தல நிர்வாகத் துறையின் 5-7-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 1864—பாரா 4—ல் கூறியுள்ளபடி அரசாங்கத்துக்கு வந்து சேராததால், ஏற்கனவே அனுத்திக்கப் பட்டுள்ள முன் பணம், போர்டுக்குரிய உதவி மான்யத் துறை கணக்கில் சரிக்கட்டப்படவில்லை.

2. மாநிலக் கதர்-கிராமத் தொழில் போர்டு செயலாளர், 1961-62 வரவு செலவு திட்டத்தில் " கிராமியக் கலை—கைத்தொழில்—தொழில்கள் " என்ற தலைப்பின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 22 லட்சத்தையும் இந்த ஆண்டுக்குள்ளேயே பயன் படுத்துவதாக உறுதியளித்து, இரண்டாவது முன் பணத் தொகையைக் கேட்டுள்ளார். மாநிலக் கதர்—கிராமத் தொழில் போர்டு விளக்கியுள்ள சூழ்நிலையில், அரசாங்கம், போர்டுக்கு " கிராமியக் கலை—கைத்தொழில்—தொழில்கள் " கீழ் நிறைவேற்றப்படும். திட்டங்களுக்கு அளிக்கப்படும் உதவி மானியங்ககள் ணக்கில் சரிக்கட்டி கொள்ளத் தக்க, வட்டியில்லா வழி முறை முன் பணமாக ரூ.10.00 லட்சம் வழங்குவதாக முடிவு செய்துள்ளது.

3. செலவுகள், முதலில், " மாநில அரசாங்கம் அளிக்கும் கடன்களும், முன் பணங்களும்— (f) பல்வகை"— என்ற தலைப்பின் கீழ், " கிராமத் தொழில் நிதிக்கு முன் பணம் " என்ற புதிய துணைத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும். பின்னர் "கிராமியக் கலை—கைத்தொழில்—தொழில்களின்" கீழ் மாநிலக் கதர்—கிராமத் தொழில் போர்டு நிறைவேற்றும் திட்டங்களுக்கு அளிக்கப்படும் உதவி மானியங்கள் கணக்கில் சரிக்கட்டபடும்.

4. கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1-4-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 964—ல் ஆணையிட்டுள்ள படி, மாநிலக் கதர்—கிராமத் தொழில் போர்டு, ஒரு தொகுத்த செலவறிக்கையைச்சமர்ப்பிக்க வேண்டும்.

5. போர்டின் கணக்கில், கிராமத் தொழில் நிதியின் கீழ், இருக்கின்ற கணக்குகளில் வரவு வைப்பதன் மூலம், தேவையான கணக்குச் சரிக்கட்டுதல்களைச் செய்யுமாறு சென்னைத் தலைமைக் கணக்கு அதிகாரி (Accountant General, Madras.) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 26—3—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 737.)

கிராமத் தொழில்களின் அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படுதல்

[Village Industries—Programme for Development of Village Industries—Entrustment to Panchayat Unions—Orders passed]

(G. O. Ms. No. 1250, R. D. and L. A., Dated 30—5—62)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் அநேகமாக மாநிலம் முழுதும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சட்டத்தின் 66—வது பிரிவின் கீழ், மாநில அரசாங்கம், விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கிராமத் தொழில்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க வேண்டும். எல்லாப் பஞ்சாயத்து யூனியன் களிடமும் அத்தகைய ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

2. கிராம நல—நல நிர்வாகத் துறையின் 1-4-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 1964—ல்,"சமுதாய அபிவிருத்தியின் தேசீய வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ் தொழில்கள் வேலைத் திட்டத்தை வகுத்து, நிறைவேற்றும் பொறுப்பை, மாநில, கதர் கிராமத் தொழில்கள் போர்டினிடம் ஒப்படைத்து ஆணை பிறப்பித்துள்ளது. அத்துடன் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியாக உள்ள கதர், கிராமத் தொழில்களின் பல்வேறு திட்டங்

களையும், கதர், கிராமத் தொழில்கள் கமிஷனின் உதவியுடன் நிறைவேற்றுகின்ற பொறுப்பும் இந்தப் போர்டுக்கு உண்டு. ஆகவே, அரசாங்கம், கதர், கிராமத் தொழில்கள் போர்டுடன், கிராமத் தொழில்கள் வேலைத் திட்டத்தை நிறைவேற்ற பஞ்சாயத்து யூனியன்களிடம் எப்படி ஒப்படைக்கலாம் என்று கலந்தாலோசித்துக் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது.

3. வட்டாரத்துக்கு ஒரு கிராமத் தொழில்கள் திட்டத்தை வகுக்கின்றபொழுது, ஒரு குறிப்பிட்ட தொழில் வளர்ச் வட்டாரத்துக்கு வட்டாரம் பெரிதும் வேறுபடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனெனில், கிடைக்கின்ற மூலப் பொருள்கள், குறிப்பிட்ட தொழிலில் பயிற்சி பெற்ற மக்கள், அத்தகைய தொழிலால் உற்பத்தியாகும் பொருள்களின் தேவை முதலியன வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடுவனவாகும். ஆகவே, எல்லா வட்டாரங்களிலும் பின்பற்றத் தக்க ஒரு தன்மையான ஒரு கிராம தொழில்கள் திட்டத்தைப் போடுவது முடியாததாகும். ஆனால், அதே நேரத்தில், பல வட்டாரங்களிலும் செய்யக்கூடிய சில கிராமத் தொழில்களும் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது கதர் ஆகும். கதர் அபிவிருத்தித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படுத்தக்கூடிய நடைமுறைகளை அரசாங்கம், கிராமந–தல நிர்வாகத் துறையின் 26-11-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 3387–ல் வெளியிட்டுள்ளது. ஆகவே, இந்த ஆணை மற்ற கிராமத் தொழில்களைப் பற்றியது மட்டுமேயாகும்.

4. இந்த ஆணையின் இணைப்பு 1–ல், பல வட்டாரங்களில் நிறைவேற்றத் தக்க எழு கிராமத் தொழில் திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளை ஒரு வட்டாரத்தில் நிறைவேற்ற ரூ. 75,000–க்கு மேல் (சுமார்) மொத்த மானியம் தேவைப்படுகிறது. எனினும் எல்லாத் திட்டங்களும், எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்ற முடியாது. ஆகவே, அரசாங்கம், கிராமத் தொழில்கள் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் ரூபாய் 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மானியத் தொகை ஒதுக்கி ஆணை பிறப்பிக்கிறது. மொத்தத் தொகையும், இந்த ஆணையின் இணைப்பு II–ல் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ள முறைப்படி செலவு செய்யப்பட்ட மானியமாக வழங்கப்படும்.

5. இந்தக் கிராமத் தொழில்களின் சில பகுதிகளை அமைக்க, அதாவது கருமாரப் பட்டரை, தச்சப் பட்டரை, செங்கல் செய்தல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களை அமைத்துக்கொள்ள பஞ்சாயத்து யூனியனுக்கும் புழங்கும் முதலீட்டுக் கடன்கள் (Working Capital Loans) வழங்கப்படும். அதற்கான விதி முறைகளை கதர், கிராமத் தொழில்கள் போர்டு நிர்ணயிக்கும்.

6. பஞ்சாயத்து யூனியன், தொழில் வளர்ச்சி அதிகாரியின் மூலம் (Extension Officer—Industries) அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உத்தேச அமைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் பின்னர் அந்த உத்தேசங்களை தொழில் நுட்ப ஆய்வு, மாவட்ட கிராமத் தொழில் அதிகாரி நடத்துவார். அவருடைய அங்கிகாரத்தின் மேல், பஞ்சாயத்து யூனியன் திட்டத்துக்கு நிர்வாக அங்கிகாரம் செய்யும். மானிய இனங்களின் மேல் ஆகும் செலவுகள் முதலில் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டு பின்னர் திட்ட நிறைவேற்றத்தின் பின்னர் மானியம் பெறுகின்ற அடிப்படையில், மாவட்டக் கிராமத் தொழில் அதிகாரியிடம் கேட்டுப் பெறப்படும். பஞ்சாயத்து யூனியன் தேவைப்படும் பொழுதெல்லாம் மாவட்ட கிராமத் தொழில் அதிகாரியிடமிருந்து புழங்கும் முதலீட்டுக் கடன்களை (Working Capital Loans) மனுச் செய்து பெறும். பஞ்சாயத்து யூனியன் மன்றம் மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டினிடமிருந்து பெறுகின்ற கடன்களுக்கும், மானியங்களுக்கும் தனியாகக் கணக்கு வைத்திருக்க வேண்டும். அரசாங்கம், மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டுடன் கலந்தாலோசித்து விவரமான கணக்கு வைப்பு விளக்கங்களை வெளியிடும்.

7. "கிராமியக்கலை–கைத் தொழில்" திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் பல வட்டாரங்களில் எற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் மாநில கதர்–கிராமத் தொழில்கள் போர்டின் சார்பில் வட்டார வளர்ச்சி அதிகாரிகளால் (பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால், இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து யூனியன்கள், கதர்–கிராமத் தொழிகள் போர்டை குறிப்பிட்டுக் கேட்டுக்கெண்ண்டால் இந்தத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட பஞ்ாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படும். இந்தத் திட்டத்திறகென இருக்கும் கருவி, யந்திரம் முதலியனவும், சம்பந்தப்பட்ட யூனியனுக்கு இலவசமாக ஒப்படைக்சப்படும். இத் திட்டம் தொடர்ந்து இருப்பதனாலாகும் செலவு மேலே 4-வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி வசதியுள் அடங்குவதுடன் முதல் செலவாகவும் கருதப்படும்.

8. இத்திட்டத்திற்கென அமர்த்தப்படும் பணியாளர்கள் பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களாகக் கருதப்படுவதுடன் யூனியனுக்கு வழங்கத் தக்க தொடர்ந்து வரும் மானியங்களிலிருந்து ஊதியம் அளிக்கப்படுவர். அவை யூனியனுடைய சொந்த வருவாய்களுக்கு மிகுதியாக இருக்கும்.

9. பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதிலும், மூலப் பொருகள், யந்திரம் வாங்குவதிலும் பஞ்சாயத் யூனியன் மாநிலக் கதர்–கிராமத் தொழில்கள் போர்டு அதிகாரிகளின் யோசனையையும் துணையையும் பெறலாம். கிராமத் தொழில் திட்டத்திற்கு எச்சரிக்கையான மேற்பார்வையும், துணையும் தேவைப்படுவதாகும். அத்தகைய மேற்பார்வையும், துணையும் மாநிலக் கதர்–கிராமத் தொழில்கள் போர்டு அதிகாரிகளால் அளிக்கப்படும். உற்பத்திக்கான கால அட்டவணை, செய்த பொருள்களின் விலை நிர்ணயம் முதலான விஷயங்களில் யூனியன்களுக்கு இந்த அதிகாரிகள் உதவி செய்வார்கள்.

10. இணைப்பு I–ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுடன், இந்தத் திட்டத்தின் கீழ் வேறு ஏதாவது வேலை எடுத்து செய்ய எந்தப் பஞ்சாயத்து யூனியனும் ஆலோசனை கூறலாம். அத்தகைய விஷயங்களில், பஞ்சாயத்து யூனியன் தன்னுடைய ஆலோசனையை மாவட்ட கிராமத் தொழில் அதிகாரியின் மூலம் மாநில கதர்–கிராமத் தொழில்கள் போர்டுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. இந்த ஆணையின் இணைப்பு II–ல் திட்டங்களைப் பற்றி விவரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இத்திட்டப் பணியாளர்களைப் பற்றிய விளக்கங்கள் மாநிலக் கதர்–கிராமத் தொழில்கள் பொர்டு வெளியிடும்.

இணைப்பு I.

தொழிலின் பெயர்.	மானியங்கள். தொடர்ந்து வராத செலவுகளுக்கு	தொடர்ந்து வரும் செலவுகளுக்கு	புழங்கும் முதலீட்டுக் கடன்.	மொத்தம்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. கருமாரத் தொழில்	17,360	7,300	6,000	30,660	..
2. தச்சுத் தொழில்	6,500	7,300	6,000	19,800	..
3. தேனீ—வளர்ப்பு	6,500	1,380	..	7,800	..
4. செங்கல் செய்தல்	..	..	15,000	15,000	..
5. மண்பாண்டத் தொழில்	8,000	2,000	..	10,000	..
6. தோல் பதனிடுதல்	13,000	2,000	**	15,000	** தேவையான இடத்தில் வகை செய்யப்படும்.
7. அரை விலையில் வழங்கப்படும் புதிய கருவிகள்.	2,000	..	—	2,000	..
மொத்தம் ..	53,360	19,980	27,000	1,00,340	
	73,340				

(i) திட்ட அங்கீகாரம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுதுக்கும் உயர்ந்த அளவு ரூ. 50,000 வரையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

(ii) புழங்கும் முதலீட்டுக் கடன், தேவையான இடங்களில் மேலே குறித்த வரையறைக்குட்பட்டு வகை செய்யப்படும்.

இணைப்பு II

1. கருமாரப் பட்டறை.—இந்தத் திட்டத்தின்கீழ், இருக்கின்ற கருமாரத் தொழிலாளர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் புதிய கருவிகளையும், எளிய தானியங்கி யந்திரங்களையும் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்படும். இந்தத் திட்ட அமைப்பு, பல கருமாரத் தொழிலாளர்களும், மின்சார வசதியும் உள்ள ஊராகப் பார்த்து அமைக்கப்படும். ஒவ்வொரு தொகுதி பயிற்சியாளர்களுக்கும் ஓராண்டுப் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு தொகுதிப் பயிற்சியாளர்களுக்குமேல் பயிற்சி அளிக்கப்படமாட்டாது. பயிற்சிக் காலம் முடிந்ததும், இந்தத் திட்ட அமைப்பு, கிராமத் தொழிளலார்களுக்கு அந்த யந்திரங்களை உபயோகத்துக்குக் கொடுக்கும் பணி நிலையமாகச் செயல்படும். முடியுமான இடங்களில் எல்லாம் தொழிலாளர்களைக் கொண்டு தொழில் கூட்டுறவு அமைக்கப்பட்டு இந்தத் தொழில் அமைப்பு அதன் நிர்வாகத்தின் கீழ் விடப்படும். அவ்வாறு முடியவில்லை என்றால் இந்த நிலையம் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கீழ் நேரடியாக இயங்கும். யந்திரங்களைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் வசூலிக்கப்படும்.

கிடைக்கத்தக்க உதவி வருமாறு.—

1. மானியம் —

	ரூபாய்.
(a) தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்கு :—	
(i) யந்திரங்கள்	9,250
(ii) கருவிகள்	6,610
(iii) மேஜை, நாற்காலி முதலிய பிற இனங்கள்.	1,500
	17,360

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு— ரூபாய்.

(i) பணியாளர்கள் (பயிற்சி அளிப்பவர் ஒருவர்; பயிற்சி பெற்ற உதவியாளர் ஒருவர்)	2,580
(ii) 10 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை (மாதம் 25 ரூபாய் என்ற வீதத்தில் ஓராண்டுக்கு).	3,000
(iii) வாடகை (ஓராண்டுக்கு, மாதம் 60 ரூபாய் என்ற வீதத்தில்).	720
(iv) காவலாள் ஊதியம், இதர சில்லரைச், செலவுகள்.	1,000
	7.300

II. புழங்கும் முதலீட்டுக் கடன் :— (Working Capital Loan) ..	6,000
ஆக மொத்தம் ..	30,660

2. தச்சுப் பட்டறை—கருமாரப் பட்டரை தொழில் அமைப்புக்கு மேலே கூறப்பட்டுள்ள பொதுவான சலுகைகளெல்லாம் இத் தொழிலுக்கும் பொருந்துவனவாகும்.

கிடைக்கத் தக்க உதவி வருமாறு :—

I. மானியம்.—

(a) தொடர்ந்து ஏற்படாத செலவ களுக்கு— ரூபாய்.

(i) யந்திரங்கள்	3,850
(ii) கருவிகள்	1,450
(iii) மேஜை, நாற்காலி முதலான பிற இனங்கள்.	1,200

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு—

(i) பணியாளர் (பயிற்சி அளிப்பவர் ஒருவர்; பயிற்சி பெற்ற உதவியாளர் ஒருவர்).	2,580
(ii) 10 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சித் தொகை (மாதம் 25 ரூபாய் என்ற வீதத்தில் ஓராண்டுக்கு).	3,000
(iii) வாடகை (மாதம் 60 ரூபாய் என்ற வீதத்தில் ஓராண்டுக்கு).	720
(iv) காவலாளரின் ஊதியமும் சில்லரைச் செலவுகளும்.	1,000
	7,300

	ரூபாய்.
II. புழங்கும் மூலதனக் கடன் :	6,000
ஆக மொத்தம் ..	19,800

3. தேனீ வளர்த்தல்.—தேனீ வளர்த்தல் பெரும்பாலும் எல்லா வட்டாரங்களிலும் தொடங்கலாம். இந்தத் திட்டத்தின் கீழ், 200 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் அரை விலைக்கு வினியோகிக்கப்படும். இந்தத் தேனீப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் விவசாயிகள் தேனீ வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுவார்கள்.

கிடைக்கத் தக்க உதவி வருமாறு :—

I. மானியம்—

(a) தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்கு—

(i) ஒன்று 22 ரூபாய் வீதம், அனுப்புகின்ற செலவுகள் உட்பட 200 தேனீ வளர்ப்புப் பெட்டிகள்.	4,400
(ஒவ்வொரு பெட்டிக்கும் 7.50 ரூபாய் வீதம் கதர் போர்டிடம் மானியம் கேட்டுப் பெறலாம்).	..
(ii) 8 தேன் எடுப்புக் கருவிகள்—ஒன்று 50 ரூபாய் வீதம்.	400
(iii) 200 தேனீ காலனிகள்—அனுப்புகின்ற செலவு உட்பட ஒரு காலனி 8 ரூபாய் வீதம்.	1,600
(iv) தேன் மெழுக்கு, புகை போக்கி முதலான கருவிகள்.	100
	6,500

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு—

(i) தேனீ வளர்ப்புத் துறைப் பணியாளருக்கு (Field man) ஊதியம்—மாதம் ரூபாய் 80—2—100 என்ற வீதத்தில்.	960
(ii) பஞ்சப்படி (மாதம் 10 ரூபாய்).	120
(iii) பயணப்படி—மாதம் 20 ரூபாய் என்ற வீதத்தில்.	240
(iv) இதர செலவுகள் (ஓராண்டுக்கு)	60
	1,380

ரூ.

II. கடன் .. ..இல்லை.

மொத்தச் செலவு 7,880

4. செங்கல் செய்தல்.—மிகப் பல வட்டாரங்களில், அபிவிருத்தி வேலையை விரைவுபடுத்துவதும், கட்டட வேலைகளின் விளைவாகவும், செங்கல் அறுக்கும் தொழில் அமைப்புக்களைத் தொடங்கவேண்டிய சூழ்நிலை நிலவி வருகிறது. பெருமளவில் பொருத்தமான களிமண் கிடைக்கும் இடங்களில் எல்லாம் அறைச் சூளைக் கற்களை (Chamber-Bricks) உற்பத்திசெய்யலாம். அந்த அளவுக்குக் களிமண் கிடைக்காத பகுதிகளில் சாதாரண செங்கற்களை உற்பத்தி செய்யலாம். இந்தத் திட்டத்தின் கீழ் புழங்கும் முதலீட்டுக் கடனுக்கு (Working Capital Loan) மட்டுமே வகை செய்யப்பட்டுள்ளது. சூளைகளை பஞ்சாயத்துக்களே நேரடியாக அமைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு அமைப்பும் ரூ. 3,000 புழங்கும் மூலதனக் கடன் வழங்கப்படும். ஒரு பஞ்சாயத்து யூனியனில் உயர்ந்த அளவு ஐந்து அமைப்புக்கள் வரையில் அனுமதிக்கப்படலாம்.

ரூ.

கிடைக்கத்தக்க உதவி வருமாறு :—

I. மானியம் .. ..இல்லை.

II. கடன் ..ஒரு செங்கல் சூளை அமைப்புக்கு ரூ. 3,000 வீதம்— 5 அமைப்புக்களுக்கு புழங்கும் முதலீடு. 15,000

5. மண்பாண்டத் தொழில்.—அநேகமாக ஒவ்வொரு வட்டாரத்திலும், பல மண் பாண்டத் தொழிலாளர் இருந்து வருகின்றனர். எங்கு மண் பாண்டத் தொழிலாளர் கூட்டமாக இருந்து வருகின்றனரோ அங்கு வசதி மிக்க சூளையுடன் கூடிய ஒரு தொழில் கொட்டகை போடப்படலாம். இத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்ட மண்பாண்டச் சக்கரங்களும், அச்சுக்களும் வழங்குவதையும் உள்ளடக்கி யிருக்கிறது.

கிடைக்கத்தக்க உதவி வருமாறு :—

I. மானியம்—

(a) தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்கு— ரூ.

(i) திருத்தி அமைக்கப்பட்ட மண் பாண்டச் சக்கரங்கள், மர, இரும்பு அச்சுக்கள் முதலிய கருவிகளும் துணைக் கருவிகளும் அரை விலைக்கு வழங்குதல்.

(ii) பொது தொழிற் கொட்டகையும் திருத்தி அமைக்கப்பட்ட சூளையும். } 8,000

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு—

(i) மண்பாண்டத் தொழில் பயிற்சி அளிப்போர் ஒருவரின் ஊதியம். 1,800

(ii) இதர செலவுகள் 200

II. கடன் .. .. இல்லை.

ஆக மொத்தம் .. 10,000

6. தோல் பதனிடுதல்.—தோல் பதனிடுவோர் தாம் வசிக்குமிடங்களுக்கு அருகிலேயே, குழிகளிலும், பானைகளிலும் தோலை ஊறவைத்துப் பதனிடும் முறையே இப்பொழுது இருந்து வருகிறது. இந்த பதனிடு முறை, காலணிகளோ, பிற பொருள்களோ செய்வதற்கு அவ்வளவு நன்றாக இருப்பதில்லை. இத் திட்டத்தின் கீழ், தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பலர் (அதாவது சுமார் முப்பது பேர்) இருக்குமிடங்களில் ஒரு தோல் பதனிடும் கொட்டகை போடப்படலாம். சமுதாயக் கொட்டகைகளிலும் தோல் பதனிடும் மரப் பட்டைகள், இதர ரசாயனப் பொருள்கள் முதலியன சேமித்து வைக்கப்படலாம். புதிய தொழில் நுட்பங்களைக் கற்பிக்க ஒரு பயிற்சி பெற்ற மேற் பார்வையாளர் அமர்த்தப்படுவார். இந்தப் புதிய பதனிடு முறைகளை உள்ளூர் தொழிலாளர் பயின்ற பின்னர் சமுதாயக் கொட்டகைகள் பஞ்சாயத்து யூனியன் நடத்தும் பணி நிலையமாக மாற்றப்படும்.

கிடைக்கத்தக்க உதவி வருமாறு :—

I. மானியம்— ரூ.

(a) தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்கு—

(i) இடமும் கட்டடமும் 10,000

(ii) கருவிகளும் துணைக் கருவிகளும் 2,500

(iii) மேஜை நாற்காலிகள் .. 500

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு

(i) தோல் பதனிடு மேற்பார்வையாளர் ஒருவரின் ஊதியம். 1,800

(ii) இதர செலவுகள் 200

15,000

II. கடன்.—தேவையானால் கடன் வசதி செய்யப்படும்.

7. திருத்தி அமைக்கப்பட்ட கருவிகள் அரை விலைக்கு வினியோகித்தல்.—கிராமத் தொழிலாளரின் தொழிற் பயிற்சி முன்னேற்றம் எதுவும், திருத்தப்பட்ட கருவிகளையும், துணைக் கருவிகளையும் பயன்படுத்துவதுடன் இணைந்ததாகும். திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரை விலைக்கு அங்கீகரிக்கப்பட்ட கருவிகள் வழங்கப்படும். கருவிகளின் பட்டியல் சம்பந்தமாகவும், அவற்றைப் பெறும் தகுதியுடைய தனிப்பட்ட தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகவும், மாநிலக் கதர், கிராமத் தொழில்கள் போர்டு, தனியே, விவரமான விளக்கங்கள் வெளியிடும். இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை வருமாறு :—

I. மானியம் — ரூ.

(a) தொடர்ந்து ஏற்படாத செலவுகளுக்கு (ஐந்தாண்டுகளுக்கு) .. 2,000

(b) தொடர்ந்து ஏற்படும் செலவுகளுக்கு. .. இல்லை.

II. கடன் .. .. .. இல்லை.

(கிராமநல–தல நிர்வாகத்துறையின் 30-5-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1250.)

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வேண்டுகோள்

1

அன்புடையீர்,

உங்கள் ஊரில் பஞ்சாயத்து இருக்கிறது. அதற்குத் தலைவராக நீங்கள் இருக்கிறீர்கள். ஊருக்கு நல்லது செய்ய உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியது.

ஊருக்கு நல்லதைப் பல வகைகளில் செய்யலாம். அவற்றுள் மிகச் சிறந்த ஒன்றைப் பற்றி உங்களுக்கு எழுதுகிறேன். ஆவன செய்வீர்கள் என முழுதும் நம்புகிறேன்.

தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் என்ற புது முயற்சி, கடந்த ஐந்தாண்டுகளாக நடைபெற்று வருகிறது. ஆசிரியர்கள் இதில் பெரிதும் ஊக்கம் காட்டி வருகிறார்கள். இது மிகச் சிறந்த திட்டம். நமது பிரதமர் உள்பட பலரும் இதைப் பாராட்டியிருக்கிறார்கள். பிற இராச்சியங்களுக்கு வழி காட்டியாக நமது இராச்சியம் இத்துறையில் இருக்கிறது.

இத் திட்டத்தை நிறைவேற்ற, ஒவ்வொரு ஊரிலும் ஒரு மதிய உணவுக் கமிட்டியும், அதற்குச் செயற் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காகச் சர்க்கார் தரும் மானியத்தை, மதிய உணவுக் கமிட்டித் தலைவர் பெறுகிறார்.

இத் திட்டத்தின்படி, ஒரு சிறுவனுக்கு ஒரு வேளைக்குச் சாப்பாடு போட 10 ந. பை. செலவு ஆகிறது. இதில் 4 ந. பை. ஊராரிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப்படுகிறது. மீதி 6 ந. பை.-வைச் சர்க்கார் மானியமாகத் தருகிறார்கள். இந்தக் கணக்குப்படி, ஓர் ஆண்டு முழுமைக்கும் ஒரு பிள்ளைக்குச் சாப்பாடு போட ரூ. 20 ஆகிறது. இதில் ரூ.8-ஐ நன்கொடையாகப் பொது மக்களிடம் வசூலிக்கிறார்கள். மீதி ரூ. 12-ஐ சர்க்கார் மானியமாகப் பெறப்படுகிறது. இத் திட்டத்திற்கு அமெரிக்காவிலுள்ள "கேர்" ஸ்தாபனம் பால் பவுடர், கோதுமை, அரிசி, எண்ணெய் ஆகிய பொருள்களை வழங்குகிறது.

பொதுமக்களிடமிருந்து பெற வேண்டிய 4 ந.பை. பங்கு, தனி நபர்கள் பொருளாதார நிலையையும், தரும சிந்தனையையும் பொறுத்திருக்கிறது. என்றென்றும் ஒரே சீராக இது அமையும் என்பதற்கில்லை.

இச் சிறந்த திட்டம் பலமான அடிப்படையில் என்றென்றும் குறைபாடின்றி இயங்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. தனி நபர் தரும சிந்தனையை எக்காலத்திற்கும் நாடிக் கொண்டிருப்பதை விட, ஒரு பொது ஸ்தாபனத்திலிருந்து இத் திட்டத்திற்கு வேண்டும் பொருள் பெறுதல் நிரந்தரமான ஒரு நல்ல ஏற்பாடாகும்.

எனவே, ஜனநாயக அடிப்படையில் அமைந்துள்ள பஞ்சாயத்தின் தலைவராகிய நீங்களே, உங்கள் ஊரிலுள்ள எல்லா மதிய உணவுக் கமிட்டிகளுக்கும், அவற்றின் செயற் குழுக்களுக்கும் தலைவராக இருக்க வேண்டும் என்று, அரசாங்கம் உத்தரவு* பிறப்பித்துள்ளது.

நீங்கள் இனி செய்யவேண்டியது என்ன ?

1. பஞ்சாயத்துநிதியிலிருந்து, ஒரு குறிப்பிட்ட தொகையை மதிய உணவு திட்டத்திற்கு கொடுக்க முன்வர வேண்டும்.

2. அதற்காகப் பஞ்சாயத்து போர்டு தீர்மானத்தை 1–7–62-க்குள் பெற்று, பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. தேவைப்பட்டால், கூடுதலான வருமானம் பெற வழிவகை தேட வேண்டும்.

"கொடிது கொடிது, வறுமை கொடிது,"
அதனினும் கொடிது, இளமையில் வறுமை."

பசிப்பிணியால் குழந்தைகள் வாடுவதும், அதன் காரணமாக, பள்ளிக்கூடம் வராமலிருப்பதும் தகுமா ? அதுவும், நீங்கள் தலைவராக இருக்கும் ஊரில் அப்படி நடக்கலாமா ? இன்றைய குழந்தை, நாளைய மனிதன். வருங்காலத்தில் நாட்டை ஆளப்போகிறவர்கள் அறிவொளி பெற்றுத் திகழ வேண்டாமா ? இதற்குப் பெரிதும் உதவும் மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு வந்திருக்கிறது. இத் திட்டத்தைத் திறம்பட குறைவின்றி நடத்தி, ஊருக்கும் நாட்டிற்கும் நல்ல பெயர் கொண்டு வர வேண்டும் என்று, உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். "பொறுப்பைக் கொடுங்கள் ; செய்து காட்டுகிறோம் ; செவ்வனே செய்யும் ஆற்றல் எங்களுக்கு உண்டு" என்று நிருபிப்பீர்கள் என்றுல் நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி

கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

*(1) கல்வித்துறையின், 18–1–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 126 மார்ச் மாத கிராமநல இதழ், பகுதி II-ல் வெளியிட்டுள்ளோம்.

(2) கல்வித்துறையின், 24–4–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 905 ஜூன் மாத கிராமநல இதழ் பகுதி II-ல் வெளியிட்டுள்ளோம்.

2

அன்புடையீர்,

உங்கள் ஊர் பஞ்சாயத்துக்கு நீங்கள் தலைவர். அதாவது உங்கள் ஊருக்கு நீங்கள் தலைவர். ஒரு குடும்பத் தலைவனுக்கு தன் குடும்பத்தைப்பற்றி எல்லா விவரங்களும் நன்கு தெரியும். அதே போல உங்கள் ஊரைப்பற்றி விவரங்களும் உங்களுக்கு நன்கு தெரிய வேண்டும்.

முதலாவதாகத் தெரியவேண்டியது உங்கள் ஊரில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது. இதைப்பற்றி கணக்கெடுக்க ஏற்கனவே உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1962 ஏப்ரல் மாத "கிராம நலம்" இதழில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. சுகாதார இலாகாவைச் சேர்ந்தவர்களும் இந்த கணக்கெடுப்பைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருப்பார்கள்.

சம்பளம் பெறும் சர்க்கார் சிப்பந்திகளாலேயே மக்கள் கணக்கைப் பிசகு இல்லாமல் எடுத்துவிட முடியாது. ஊரார் ஒத்துழைப்பு பெரிதும் இத்துறையில் தேவை, நீங்களும் உங்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களும் இந்த மக்கள் கணக்கு எடுக்கும் வேலையில் அக்கறை காட்ட வேண்டும்.

சிறப்பாக உங்கள் பஞ்சாயத்திலுள்ள பெண் அங்கத்தினர்கள் இத்துறையில் பணியாற்ற நிறைய சந்தர்ப்பம் இருக்கிறது. ஜனன மரணக் கணக்கில் குழந்தைகளின் மரணம் பதியப்படாமலேயே பல இடங்களில் விடப்படுகிறது. இதைப்பற்றி முழு விவரமும் தர பெண்களால் தான் முடியும். பஞ்சாயத்து போர்டில் உள்ள பெண் அங்கத்தினர் இதற்கு உதவ வேண்டும். இது மட்டுமல்ல. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தாய் சேய் நலம், குடும்பச் செழுமை, இவற்றிற்கு வித்தாக விளங்கும் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றியும் கிராமப் பெண் மக்களுக்கு விளங்கிச் சொல்வது நலம்.

ஆவன செய்வீர்கள் என நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி

கிராம அபிவிருத்திக் கமிஷனர்,
கிராம நல—தல நிர்வாகத் துறை.

ஏழை மாணவர்க்கு மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு பஞ்சாயத்துக்களின் நன்கொடை—விளக்கங்கள்

(Elementary Education—Scheme for the supply of midday meals to poor pupils-Contribution from Panchyats—Instructions issued)

(G.O.Ms. No. 1231 R.D. & L.A., dated 28-5-62.)

கல்வித் துறையின் 24–6–1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 905-ல் ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரும் பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள எல்லா மதிய உணவு நிலையங்களின் பொதுக் குழு, நிர்வாகக் குழுக்களின் தலைவர்களாக விளங்குவார்கள் என்று அரசாங்கம் தெளிவு படுத்தியுள்ளது. மதிய உணவுத் திட்டத்துக்காக ஒரு தொகையை நன் கொடையாக வழங்க வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும் என்பதை அரசாங்கம் மறு முறையும் எடுத்துக் கூறுகிறது. பஞ்சாயத்தின் அரி ஜன உறுப்பினர் பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள மதிய உணவு நிலையங்களின் பொதுக் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஆணையில் (ஆணை எண் 905) ஆணையிடப்பட்டபடி ஒழுங்காகச் செயல்பட, கீழ்க்கண்ட நடைமுறையில் பின்பற்ற அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. கூடிய விரைவில், பஞ்சாயத்து யூனியனின் சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டி, அந்தக் கூட்டத்தில், கல்வித் துறையின், 18–1–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 126-ம் 24–4–62-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 905-ம் மன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறப்பட வேண்டும். அவர்கள் அந்த ஆணைகளின் முக்கிய அம்சங்களைத் தத்தம் பஞ்சாயத்துக்களில் விளக்கிக் கூறும்படியும் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். அந்தந்தப் பஞ்சாயத்து எல்லையிலுள்ள பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்திற்கு நன் கொடை அளிக்க ஒப்புக் கொண்டு தீர்மானம் நிறைவேற வேண்டும். இத்தகைய தீர்மானங்களெல்லாம் 22–6–62 தேதி அளவில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள், கல்வி வளர்ச்சி அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோர் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சென்று பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு இந்த அரசாங்க ஆணைகளின் முக்கியத்துவத்தை விளக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் இந்தத் தீர்மானங்களைப் பெற்றதும், சம்பந்தப்பட்ட பகுதி (Range) பள்ளிக் கூடங்களின் உதவி மேற்பார்வையாளர்களுக்கு (Deputy Inspector of Schools) மாவட்டக் கல்வி அதிகாரிக்கும் நன் கொடை அளிக்க ஒப்புக் கொண்ட பஞ்சாயத்துக்களின் பெயர்களையும், இதற்கென எவ்வளவு தொகை அளிக்க ஒப்புக் கொண்டுள்ளன என்பதையும் அறிவிக்க வேண்டும்.

3. பஞ்சாயத்துத் தலைவர்கள், மதிய உணவுக் குழுத் தலைவர்கள் என்ற முறையில், அருகில் உள்ள தபால் சேமிப்பு பாங்குகளில் (Postal Savings Banks) 1–7–62 முதல் ஒரு கணக்கைத் தொடங்கியுள்ள அதிகாரமளிக்கப்படுகின்றனர். இப்பொழுது இருந்து வரும் மதிய உணவுக் குழுவின் கணக்கில் இருக்கும் தொகை இந்தப் புதிய கணக்கு மாற்றப்பட வேண்டும். பஞ்சாயத்துக்கள், தம்முடைய மூன்றுமாத நன் கொடைக்கு ஈடான தொகையைத் தம் நிதியிலிருந்து பெற்று, அதை தபால்–சேமிப்புப் பாங்குக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

4. கல்வித் துறையின் 27–9–60-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2075-ல் முன்னறிவித்துள்ளபடி, ஒவ்வொரு யூனியனிலும் ஜூன் மாதத்தில் பள்ளி ஆலோசனைக் குழுவின் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, புதியதாக அமைக்கப்பட்ட குழுக்களின் தலைவர்களுக்கு, இருக்கின்ற நிதிகளை மாற்றுகின்ற வேலை ஒழுங்காக நடைபெறுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. இந்த நிதிகளும், கணக்குகளும் மாற்றுகின்ற வேலை முடிந்ததற்கான அறிக்கை ஒன்றினை, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் 15–7–62 தேதி அளவில் கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு அனுப்பி வைக்க வேண்டும். நிதிகளும், கணக்குகளும் மாற்றும் வேலை முடிந்ததற்கான இத்தகைய அறிக்கை பிறிதொன்றை, மாவட்டக் கல்வி அதிகாரி, கல்வித் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் பேரில் கல்வித் துறை இயக்குநர், இந்த நிதி கணக்குகள் மாற்றத்தைப் பற்றிய பகுதி வாரியாக (Range wise) விவரமான அறிக்கைகளை 1–8–62 தேதி அளவில் கல்வி, பொது சுகாதாரத் துறைக்குப் அனுப்பி வைப்பார்.

6. கல்வித் துறை இயக்குநர், மதிய உணவு நிலையங்களை நடத்தும் விஷயத்தில் கணக்கு வைப்பு முறை பற்றி இது வரையில் வெளியிடப்பட்டுள்ள விளக்கங்களைத் தொகுத்து, அரசாங்கத்தின் கல்வி–பொது சுகாதாரத் துறைக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

இது விஷயத்தைப் பொருத்தமான வழியில் விளம்பரப்படுத்தி, இத் திட்ட நிறை வேற்றக் கணக்கு வைப்பு பற்றிப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு வேலைத் திட்டத்தைப் பல் வேறு வட்டாரக் கல்வி வளர்ச்சி அதிகாரிகள் எடுத்து நடத்த இந்த விளக்க தொகுப்பு அனுப்பி வைத்தல் உதவியாக இருக்கும்.

(கிராம நல–தல நிர்வாகத் துறையின் 28–5–62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் : 1231)

—0—

பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்காக கான்ட்ராக்டர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய பிணைப் பணம், காப்புத் தொகை முதலியன பற்றிய விளக்கங்கள்.

[Contracts—Panchayat Union Works—Earnest Money Deposit and Security Deposit to be —collected from Contractors—Further Instructions Issued.]

(G. O. Ms. No. 1054, R. D. & L. A. dated 1-5-62.)

சுகாதாரத் துறையின் 24-6-57 தேதியிட்ட அரசாங்க ஆணை 1879-ல், கான்ட்ராக்டர்களிடமிருந்து, கிராமிய நீர் வழங்கு கிணற்று வேலைகள் சம்பந்தப்பட்டமட்டில், ஒவ்வொரு வேலையின் மதிப்பிலும் 5 சதவீதத் தொகையை காப்புத் தொகையாக முதலிலேயே வசூலிக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, கோயம்புத்தூர் கலெக்டர், பஞ்சாயத்துக்களிடம்அபிவிருத்தி வேலைகளை ஒப்படைக்கும் பொழுது, 5 சதவீதக் காப்புத் தொகையை முதலில் வசூலிக்க வேண்டும் என்னும் விஷயத்தை வற்புறுத்தாமல் இருக்க, நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள் துறை தலைமை எஞ்சினியருக்குச் சிபாரிசு செய்துள்ளார். மேலும் மத்தியில் வழங்கும் பட்டியல்களில் 5 சதவீதத் தொகையைப் பாதுகாப்பு முறையில் குறைத்து வழங்கலாம் என்று கூறியுள்ளார். நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள் துறையின் தலைமை எஞ்சினியர் சில சில மாவட்டக் கலெக்டர்களின் அபிப்பிராயங்களை அறிந்த பின்னர், பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் எடுத்து செய்யும் வேலைகள் விஷயத்தில், அதாவது பொதுவாக "கிராம வேலைகள்" விஷயத்தில், ஒரு தன்மையான நடை முறை ஒன்றைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும் என்றும், இந்த வேலைகள் சாதாரணமாகக் கீழ்க் கண்ட அமைப்புக்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன என்றும் யோசனை கூறியுள்ளார் :

(i) பஞ்சாயத்துக்கள்

(ii) பஞ்சாயத்துக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, வேலையை எடுத்துச் செய்பவர்கள்.

(iii) ஒப்ப அறிவிப்பு (Tender) மூலம்—கான்ட்ராக்டர்கள்.

அவர் பிணைப்பணம் (Earnest money) அல்லது காப்புத் தொகை (Security deposit) வசூலிப்பதற்கென்று கீழ்க்கண்ட நடை முறையைப் பின்பற்றலாம் என்று சிபாரிசு செய்துள்ளார் :

(i) வேலைகளை மொத்தமாகப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கும் போது காப்புத் தொகை (Security deposit) வசூலிப்பதை வலியுறுத்தத் தேவையில்லை. ஆனால், ஒவ்வொரு பகுதிப் பட்டியல் (Part Bill) தொகையிலும் 2½ சதவீதத்தை தொகையை நிறுத்திக் வைக்கலாம்.

(ii) பஞ்சாயத்துக்களால் நியமிக்கப்படுபவர்களிடம் வேலைகளை ஒப்படைக்கும் போது, ஒவ்வொரு பகுதிப் பட்டியல் தொகையிலும் 2½ சதவீதத் தொகையை நிறுத்தி வைப்பதுடன், வேலையின் உத்தேச மதிப்பீட்டில் 2½ சத வீதத் தொகையை காப்புத் தொகையாக வசூலிக்கலாம்.

(iii) ஒப்ப அறிப்புக்களைத் (Tenders) தருவித்து ஒப்பந்தங்களின் பேரில் (On Contracts) வேலைகளை ஒப்படைக்கும்போது, பஞ்சாயத்துடன் பஞ்சாயத்து யூனியன் வேலைகள் விஷயத்தில் வழக்கமாகப் பின்பற்றப்படும் நடைமுறையைப் பின்பற்றலாம்.

2. அரசாங்கம் இது பற்றி தல நிதித் தணிக்கை துறை தலைமை ஆய்வாளரை (Examiner, Local Fund Accounts) கலந்தாலோசித்துக் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது :

(i) பஞ்சாயத்துக்களிடம் வேலைகளை மொத்தமாக ஒப்படைக்கும் விஷயத்தில், காப்புத் தொகையை வலியுறுத்தத் தேவையில்லை. ஆனால், ஒவ்வொரு பகுதிப் பட்டியல் தொகையிலும் 2½ சதவீத மதிப்புத் தொகையை நிறுத்தி வைக்க வேண்டும்.

(ii) பஞ்சாயத்துக்களால் நியமிக்கப்படுபவர் களிடமோ அல்லது பதிவு செய்யப்பட்ட வேலை ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களிடமோ (Registered Labour Co-operative Socities) வேலைகளை ஒப்படைக்கும் விஷயத்தில், ஒவ்வொரு பகுதிப் பட்டியல் தொகையிலும் 2½ சதவீத மதிப்பை நிறுத்தி வைப்பதுடன், வேலையின் உத்தேச மதிப்பில் 2½ சதவீதத் தொகையைக் காப்புத் தொகையாக வசூலிக்க வேண்டும்.

(iii) இதர விஷயங்களில் பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து வேலைகளில் வழக்கமாகப் பின்பற்றப்படும் நடை முறை பின்பற்றப்படவேண்டும். பகுதிப் பட்டியல்களில் நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகள் வேலையை எடுத்துச் செய்த அமைப்புக் கணக்குகளுக்கு, வேலையைத் திருப்திகரமாக முடித்துவிட்ட பின்னர் இறுதித் தொகையைப் பெரும்பொழுது அத்துடன் கொடுக்கப்படும் அல்லது தகுதியுடைய அதிகாரி சரியென்று கருதுகிற போது பின்னரும் கொடுக்கப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1-5-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் : 1054)

விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டப் பெண் பணியாளர்க்குப் பயிற்சி

[Nutrition-Expanded Nutrition Programme—Training of Women Workers-Orderd]

(G, O. Ms. No. 1080., R. D. &L. A., Dated 4-5-62)

கிராம நல-நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாம் 10-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 328-ல், விரிவுபடுத்தப்பட்ட ஊட்டஉணவுத் திட்டத்தை அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்துக்குட்பட்ட வட்டாரங்களில் கிராமமக்களுக்குக் குறுகிய காலப் பயிற்சியளிப்பது திட்டத்தின்முக்கியமான அம்சங்களுள் ஒன்ருகும். திட்டத்துக்குஉட்பட்ட வட்டாரங்களில், ஒரு கிராமத்திற்கு இருவர் வீதம் பெண் பணியாளர்க்கு ஊட்ட உணவு, உணவு ஊட்டல் பற்றிய இருவார கால பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாதர் நலத்துறை இயக்குநர், திட்டத்துக்குட்பட்ட வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தாமே முன்வந்து பணியாற்றும் பெண் பணியாளர்க்குப் பயிற்சி அளிப்பது குறித்து தமது ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ளார். அந்த ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து, கீழ்க் கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது.

2. பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான கால அட்டவணை, பயிற்சி அளிக்கப்படவேண்டிய பெண் பணியாளர்களின் எண்ணிக்கை முதலியன இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ளன. பயிற்சி அளிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு 1,000 ஜனத்தொகைக்கும் இருவர் என்ற அடிப்படையில் கணக்கிடப் பட்டுள்ளது. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 328-ல், அங்கீகரிக்கப்பட்டுள்ள செயல் திட்டத்தில், ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இரண்டு பெண் பணியாளர்க்குப்பயிற்சிதரத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே பயிற்சி,அளிக்கப்படவேண்டிய பெண் பணியாளர்களின் எண்ணிக்கை, தேவையானல் ஒவ்வொரு கிராமத்துக்கும்' இருவர் என்ற வீதத்தில் அதிகப்படுத்தப்படலாம்.

3. ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு தொகுதிகளாகப் பயிற்சியளிக்கப்படும். இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள வட்டாரங்களில் பயிற்சி வகுப்புக்கள் எஸ்.வி. நகரம், தே. கல்லுப்பட்டி, பவானிசாகர் ஆகிய இடங்களில் இல்லக் கலைப் பகுதிகளின் (Home Science Wings) தலைமை ஆசிரியர்களால் நடத்தப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு தொகுதி பெண் பணியாளர்க்கும் பயிற்சிக் காலம் 14 நாட்களாகும். பயிற்சியாளர், பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு ரூ. 1-50 ந.பை வீதம் பயிற்சி உதவிப் பணம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டப் பயிற்சியாளர்க்கு பயிற்சி உதவிப் பணம் கொடுக்க அரசாங்கம் தனியே ஆணைகளை பிறப்பிக்க இருக்கிறது. இந்த உதவிப் பணத்திற்கு ஆகும் செலவு ஆரம்பத்தில் மாநில நிதியிலிருந்து செய்யப்பட்டு, பின்னர் இந்திய அரசாங்கத்தின் மூலம் ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதியிலிருந்து (UNICEF) சரிக்கட்டப்படும். சம்பந்தப்பட்ட கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையத் தலைவர்கள் (Principals) இந்தத் தொகையைப் பெற்று, பயிற்சியாளர்க்கு வழங்க வேண்டும். இந்தச் செலவுகள், "37. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணியும் தல அபிவிருத்தி வேலைகளும்—I சாதாரணமானவை—D. பொது—ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி உதவியுடன் விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்—5. பல்வகை —இதர செலவுகள்—பயிற்சியாளர்க்கு பயிற்சி உதவிப் பணம்" என்ற தலைப்பில் பற்றுவைக்கத் தக்கனவாகும். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியிலிருந்து (UNICEF) இந்த தொயைக் கேட்டுப் பெறுவதற்கென்று, பயிற்சி நிலையத் தலைவர்கள், பயிற்சியின் முடிவில், பயிற்சியாளர்களின் பெயர்களும், அவர்களுக்குத் தனித்தனியே அளித்த உதவிப் பணத்தையும் குறிக்கின்ற அறிக்கைகளைத் தயாரித்து அரசாங்கத்துக்குச் சமர்ப்பிககவேண்டும்.

4. சென்னை பயணப்படி விதிகளின்கீழ், இல்லக் கலைப் பகுதிகளின் (Home Science Wings) தலைமைப் பயிற்சி அளிப்போர், இல்லக் கலை பகுதிகள் அமைந்துள்ள வட்டாரங்கள் தவிர பிறவட்டாரங்களில் பயிற்சி வகுப்புகளை நடத்த, பயணப்படியும், தினசரிப்படியும் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவார்கள். இந்தப் பயணப்படி, தினசரிப்படிச் செலவுகள், அதிகாரிகளின் சம்பளம்—படிச் செலவுகள் பற்றுவைக்கப்படும் கணக்குத் தலைப்பிலேயே பற்றுவைக்கப்படவேண்டும்.

5. பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு வேண்டிய, ஏற்பாடுகளைச் செய்யவும், பயிற்சியாளர்க்குத் தேவையான வசதிகளைச் செய்யவும், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையத் தலைவர்களுக்கு வேண்டிய விளக்கங்களை வெளியிடுமாறு துணை அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி), கேட்டுக்கொள்ளப்படுகிருர்.

இணைப்பு

வரிசை எண்.	வட்டாரத்தின் பெயரும், பொறுப்பில் உள்ள தலைமை பயிற்சி அளிப்பவரும். (Chief Instructor),	பயிற்சியளிக்கப் படவேண்டியவர்களின் எண்ணிக்கை.	தொகுதிகளின் எண்ணிக்கை.	கால அட்டவணை.
1.	பவானிசாகர், இல்லக்கலைப் பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர்—			
	(1) பவானிசாகா	66	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 15-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை.
	(2) கிருஷ்ணகிரி	68	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 15-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை.
2.	தே. கல்லுப்பட்டி, இல்லக்கலைப் பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர்—			
	(1) தே. கல்லுப்பட்டி	62	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 15-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை.
	(2) கோயில்பட்டி	92	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 15-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை.
3.	எஸ்.வி. நகரம், இல்லக்கலைப் பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர்—			
	(1) ஆரணி	62	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் மே மாதம் 15-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை.
	(2) பட்டுக்கோட்டை	100	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் ஜூலை மாதம் 15-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை.
	(3) திருவிடமருதூர்	114	2	முதல் தொகுதி.—1962-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை.
				இரண்டாவது தொகுதி.—1962-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 4—5—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1080)

விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டப் பெண் பணியாளர் பயிற்சி

(Expanded Nutrition Programme—Training of Women Workers-Regarding)

(Memorandum No. 66367.· R.D. & L.A., dated28-5-'62)

கிராம நலம் தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆு மேமீ 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1080-ல் (முன் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆணையில்), அவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, விரிவு படுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டப் பெண் பணியாளர்க்குப் பயிற்சி வகுப்புகள் நடத்த, இல்லக்கலைப் பகுதிகளின் தலைமை பயிற்சியளிப்போர், (Chief Instructors, Home Science Wings) அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

2. பெண் பணியாளர்க்குப் பயிற்சி வகுப்புக்களை தலைமை பயிற்சி அளிப்போர் தனியே நடத்துவது முடியாது என்றும், அவர் தன் இல்லக்கலைப் பகுதியிலிருந்து உதவி பயிற்சி அளிப்போர் (Assistant Instructor) ஒருவரை உடன் அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படலாம். என்றும் மாதர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். அவர் மேலும், தலைமை பயிற்சி அளிப்போரும், உதவி பயிற்சி அளிப்போரும் இல்லக்கலைப் பகுதியில் இல்லாத இந்தப் பயிற்சிக் காலத்தில், வழக்கமாக நடத்தப்படும் கிராம சேவிகைகளின் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவது முடியாதாகையால், 1962-ம் ஆு ஜுலை மாதம் 1-ம் தேதி முதல், ஆகஸ்டு 1-ம் தேதி வரை கிராம சேவிகைப் பயிற்சி வகுப்புக்கள் தள்ளி வைக்கப்படலாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை வட்டாரத்திலும், திருவிடமருதூர் வட்டாரத்திலும் பெண் பணியாளர்க்கு ஊட்ட உணவுத் திட்டப்பயிற்சி அளிக்க ஒரு தலைமை பயிற்சி அளிப்போருக்குப் பதில் இரண்டு தலைமை பயிற்சி அளிப்போரை நியமிக்கலாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசாங்கம், மாதர் நலத்துறை இயக்குநரின் இந்த ஆலோசனைகளை ஒப்புக்கொண்டு கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

(i) இல்லக்கலைப் பகுதிகளின் தலைமை பயிற்சி அளிப்போர், விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டப் பெண் பணியாளர் பயிற்சி வகுப்புக்கள் நடத்த, தம் இல்லக்கலைப் பகுதிகளிலிருந்து ஒரு துணை பயிற்சி அளிப்போரைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். உதவி பயிற்சி அளிப்போரும் தம் இல்லக்கலைப் பகுதி அமைந்துள்ள வட்டாரம் தவிர ஏனைய வட்டாரங்களில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தச் செல்லும் பொழுது, சென்னை பயணப்படி விதிகளின்கீழ், பயணப்படியும், தினசரிப்படியும் பெறத் தகுதியுடையவர்களாவார்கள். இப் படிச் செலவுகள், அதிகாரிகளின் பயணப்படி, தினசரிப் படிகள் பற்றுவைக்கப்படும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(ii) மேற்குறிப்பிட்ட ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, எஸ். வி. நகரம் இல்லக்கலை பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர், திருவிடமருதூர் வட்டாரத்தின் பெண் பணியாளர்க்கு, 1962-ம் ஆு ஆகஸ்டு மாதத்தில் இரண்டு தொகுதிகளுக்கும் பயிற்சி அளிப்பார். எஸ். வி. நகரம் இல்லக்கலைப் பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர், ஆரணி, பட்டுக் கோட்டை வட்டாரங்களில் பயிற்சி வகுப்புக்களை முடித்த பின்னர், 1962 ஆகஸ்ட்டு மாதம் 1-ந் தேதி முதல் 14-ந் தேதி வரையுள்ள காலத்தில், திருவிடமருதூர் வட்டாரப் பெண் பணியாளர் களின் ஒரு தொகுதிக்கு மட்டும் பயிற்சி வகுப்பு நடத்தும்படி அரசாங்கம் இப்பொழுது ஆணை பிறப்பிக்கிறது. திருவிடமருதூர் வட்டாரப் பெண் பணியாளர் களின் மற்றொரு தொகுதிக்கு, தே. கல்லுப்பட்டி இல்லக்கலைப் பகுதியின் தலைமை பயிற்சி அளிப்போர், தே. கல்லுப்பட்டியிலும், கோயில்பட்டியிலும் பயிற்சி வகுப்புக்களை முடித்த பின்னர், 1962 ஆகஸ்ட்டு மாதம் 1-ந் தேதி முதல் 14-ந்- தேதி வரை பயிற்சி வகுப்புக்களை நடத்த வேண்டும்.

(iii) கிராம சேவிகைகளின் பயிற்சி வகுப்புக்கள் 1962 ஜுலை 1-ந் தேதி முதல் ஆகஸ்ட்டு மாதம் 15-ந் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 28—5—1962 தேதியிட்ட அறிக்கை எண் 66367.)

விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டத்தின் கீழ் தோட்டப்பாசனத்திற்குக் கிணறுகள் வெட்டுதல் பற்றிய விளக்கங்கள்

(Expanded Nutrition Programme-Digging of wells for irrigation of gardens—Instructions-issued)

(G.O. Ms No, 1158, R.D. & L.A., dated 17th May, 1962.)

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 328-ல் "விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டத்"தை அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்கள் கால்நடைத் தீவனம், பருப்பு வகைகள், பழங்கள் முதலியன பயிரிடக் கிராமத் தோட்டங்கள் அபிவிருத்தி செய்வது அந்தத் திட்டத்தில் ஒரு அம்சமாகும். பஞ்சாயத்துக்கள் இதற்கென சுமார் ஐந்து ஏக்கர் நிலத்தை ஒதுக்கி அங்கே தோட்டம் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். மாநில அரசாங்கம், தேவையான

முதலானவற்றை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தேவை ஏற்பட்டால், பஞ்சாயத்துக்கள் தோட்டத்துக்குக் காவல்காரர்களை அமர்த்திக் கொள்ளலாம். இக் காவல்காரர்களை அமர்த்த ஆகும் செலவை அரசாங்கம் மூன்றுண்டுக் காலத்துக்கு ஏற்றுக் கொள்ளும். இந்த இனத்திற்கு ஆகும் செலவு ஓராண்டுக்கு ரூ. 500-க்கு மேல் ஆகக்கூடாது.

6. கிணறு வெட்ட, பம்புகளை இயக்க, காவல்காரர்களை அமர்த்த ஆகும் செலவுகளை அரசாங்கம், பஞ்சாயத்து யூனியன் மூலமாக, வேலை நிறைவேற்றத்தின் பின் அளிக்கட்டும் மானிய அடிப்படையில் உதவி மானியங்களாக பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி உதவி மானியங்களை அனுமதித்து, இந்தத் தொகையை சரிக்கட்டுவார்.

7. பஞ்சாயத்து தன் நிதியிலிருந்து இந்தச் செலவுகளை செய்து, ஒவ்வொரு மாதமும் இந்த வேலை இனங்களுக்கு ஆகும் செலவுகளுக்குச் செலவறிக்கை தயாரித்தனுப்பி, அவற்றை. சரிக்கட்ட மானியங்களுக்கு மனுச் செய்ய வேண்டும். இந்த அறிக்கையின் அடிப்படையில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அதனுடைய பொது நிதிக் கணக்கில் சம்பந்தப்பட்ட தலைப்பில் பற்று வைத்தும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துதின் "கிராமப் பஞ்சாயத்துத் தொகுநிதி" கணக்கில் வரவு வைத்தும் பஞ்சாயத்துக்களின் செலவை சரிக்கட்ட வேண்டும். அதன் பின்னர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் செலவறிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரியிடம் மானியத் தொகையைக் கேட்டுப் பெறவேண்டும். ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, அறிக்கைகளைப் பரிசீலனை செய்த பின்னர், செய்யப்பட்ட செலவுகளின் அடிப்படையில் பஞ்சாயத்து யூனியனுக்கு உதவி மானியங்கள் அனுமதிப்பார். "ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி ஸ்தாபனத்தின் (UNICEF) உதவி பெறும் விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்" என்ற புதிய துணைத் தலைப்பில், "37. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல அபிவிருத்தி வேலைகள், 1.-சாதாரணமானவை—டி. பொது" என்ற தலைப்பின் கீழ், கீழ்க்கண்ட விவரமான துணைத் தலைப்புக்களைத் தொடங்கி இந்த மானியங்கள் வரவு வைக்கப்படவேண்டும்.

"3. விவசாயம்.
இதர செலவுகள்.
கிணறு வெட்டுதல்—பராமரித்தல் செலவுகள்.
பம்புசெட்டுகள்.
விதைகளின் விலைகள் முதலியன.
கருவிகளும் யந்திரங்களும்."

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 17-5-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1158).

வேலைகளுக்கு நிர்வாக, தொழில் நுட்ப அனுமதி வழங்கப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம்—1961 மார்ச் 31 தேதிக்குப் பின்னும் நீட்டித்தல்

(Works-Panchayats-Administrative and Technical sanction-Powers of Panchyats Extended beyond 31st March 1961.)

(G.O. Ms. No. 854, R. D. and L. A., dated 6th April 1962.)

தல நிர்வாகத் துறையின் 1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2085-ன் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ள III-விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள விதிகளில் 4-வது விதியின் கீழ், திருத்தப்பட்டபடி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள், பயன்படுத்தி வந்த அதிகாரங்களின் காலவரையறையை 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி வரையில் அரசாங்கம் இதனால் விரிவுபடுத்துகிறது. மேலும், வேலைகளின் உத்தேச மதிப்பீட்டையும், அளவு சரிபார்த்தலையும் (Check measuring) அங்கீகரிக்கின்ற அதிகாரங்களை, மாவட்டப் பஞ்சாயத்து மேற்பார்வையாளர்கள் பயன்படுத்தி வந்த இடங்களில் எல்லாம் இப்பொழுது நெடுஞ் சாலைகள் இராவேலைகள் துறை உதவி எஞ்சினியர்கள் பயன் படுத்துவார்கள். வட்டாரங்கள் அல்லது யூனியன் அல்லாத பகுதிகளின் பஞ்சாயத்து வேலைகள் விஷயத்தில், வேலைகளை அளவெடுக்கும் பணியை, அங்கு பொறுப்பில் உள்ள முறைப்படி அமர்த்தப்பட்ட மேற்பார்வையாளர்களும், கண்காணிப்பாளர்களும் (Overseers) செய்வார்கள்.

2. இந்த ஆணையில் கூறப்பட்டுள்ள விஷயங்களை, வகுப்புப் பஞ்சாயத்துக்கள் எல்லாவற்றிற்கும் அறிவிக்குமாறு, நகர மன்றங்கள்-ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 6-4-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 854).

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 119 (3)-வது பிரிவின்கீழ் விவசாய நிலத்தின்மேல் வரி விதிப்பு—வசூலுக்கான விதிகளில் திருத்த நகல்

[Rules—Madras Panchyats Act, 1953—Rules for the assessment and collection of – on agricultural land under section 119 (3) of the Act—Amendment Draft Published.)

(Appendix of the G.O. Ms. No. 967, R.D. and L.A., dated 17th April 1962)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 119-வது பிரிவைச் சேர்ந்த (3) துணைப் பிரிவிலும், 178-வது பிரிவைச் சேர்ந்த (2) துணைப் பிரிவின் (xx) உட்பிரிவிலும் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதியிட்ட விளம்பரம் 1962-ன், எஸ்.ஆர்.ஓ.எ. எண் 162 டன், 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழின் சிறப்பு வெளியீடு, பாகம் V, பக்கங்கள் 181–182 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட, "பஞ்சாயத்துக்கள் விவசாய நிலத்தின்மேல் விதித்து வசூலிக்கத் தக்க வரி சம்பந்தப்பட்ட விதிகளில் திருத்தம் செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. அதற்கேற்ப, மேற்படி சட்டத்தின் 179-வது பிரிவைச் சேர்ந்த (2) துணைப் பிரிவில் கேட்டுள்ளபடி பொதுவாகச் செய்தி தெரிவிக்கும் முறையில், கீழ்க் கண்ட நகல் திருத்தம் வெளியிடப் படுகிறது :—

செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு, அது வரை இது சம்பந்தமாய் வந்த ஆலோசனைகளையும், ஆட்சேபனைகளையும் கொண்டு இந்த நகல் திருத்தம் மேலும் பரிசீலனை செய்யப்படும்.

இதுபற்றிய ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும், சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள கிராம நல-தல நிர்வாகத் துறை செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதிகளில் 1-வது விதி (2) துணை விதியுடன் கீழ்க்கண்ட ஷரத்து சேர்க்கப்பட வேண்டும் ; அதாவது:

"இந்தத் துணை விதியின் கீழ், பலவகைப்பட்ட நஞ்செய் நிலங்களுக்கும் பல்வகை விகிதாச்சாரங்களைப் பின்பற்றுகின்ற பட்சத்தில், அத்தகைய நிலங்கள், எத்தனை முறை (போகம்) பயிர் வைக்கப்படுகின்றன என்ற அடிப்படையிலோ அல்லது அதற்குள்ள நீர்ப்பாசன வசதிகளின் தன்மையின் அடிப்படையிலோ வகைப்படுத் தப்படலாம் ".

(கிராம நல–தல நிர்வாகத் துறையின் 17–4–62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 967-ன் இணைப்பு).

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—ஆசிரியருக்குச் சம்பள விநியோகம்–ஆசிரியர்களின் விடுமுறைச் சம்பளம்—விநியோகிக்க வேண்டிய நடைமுறை

Elementary Education—Panchayat Union Councils—Disbursement of salaries to the Teachers —Leave salaries of teachers—Procedure for disbursement—Regarding.

(Memo. No. 50712, R. D. Accts., dated 12th April 1962.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியிட்ட அறிக்கை எண் 241418-ல், ஆசிரியர் விடுமுறையில் போய் இருக்கின்ற இடத்திலிருந்து சம்பளத்தைக் கேட்டுப் பெறுவது குறித்த விளக்கங்களைத் தலைமை ஆசிரியருக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதே அறிக்கையில் பட்டியல் மாத நடுவில் அனுப்பப்பட்டிருந்த பட்சத்தில் விடுமுறையில் சென்றிருக்கும் ஆசிரியரின் விடுமுறை சம்பளத்தை மத்திய பள்ளி சம்பளம் கொடுப்பவருக்கு அனுப்புவதற்குப் பதிலாக பள்ளித் தலைமை ஆசிரியருக்கு மணியார்டர் மூலம் அனுப்ப, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். "பஞ்சாயத்துயூனியன்களின் கணக்கு வைப்பு விளக்கக் கையேட்டின்" (Manual of Instructions for the maintenance of accounts of the Panchayat Unions) 55-வது பாராவில் கூறியுள்ள விளக்கத்தின்படி, நிரந்தர முன்பணத்திலிருந்து செய்யப் படும் எதிர்ப்பாராச் சிறு செலவுகள் தவிர, மற்றவை எல்லா விஷயங்களிலும் மன்றத்தின் பணம் வைக்கப்பட்டுள்ள கஜானா அல்லது பாங்குச் செக்குகள் (Cheques) வழங்கப்படுவதன் மூலமே எல்லா பணம் கொடுத்தலும் நடைபெறவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களின் தலை நகரத்தில் கஜானாக்கள் இருக்கும் பட்சத்தில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் செக்கை (விடுமுறை சம்பளத் தொகையும் அதற்குரிய மணியார்டர் கமிஷனும்) உதவி போஸ்ட்மாஸ்டர் பெயரில் வாங்கி, மணியார்டர் அனுப்ப வேண்டும். மேற்படி வசதிகள் எதுவும் இல்லாத பட்சத்தில் தாலூகா தலைநகரில் உள்ள போஸ்ட் மாஸ்டரின் பெயரில் செக் வாங்கி, தாலூகா தலைநகருக்கு அவர், உறுப்பினரை அனுப்புகின்ற நாளில் மணியார்டரைத் தாலூகா தலைநகரிலிருந்து அனுப்பும்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஆசிரியர்களின் விடுமுறைச் சம்பள மணியார்டர் அனுப்ப, எக்காரணம் கொண்டும் பணத்தைக் கையாள்வதோ அல்லது தன் பெயருக்கே செக் வாங்குவதோ செய்யக்கூடாது என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 12-4-1962 தேதியிட்ட அறிக்கை எண் 50712).

பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றும் அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் நலனுக்கான வேலைகளின் நன்கொடை சதவீதங்கள் பற்றிய விளக்கம்

Panchayat Development—Entrustment to Panchayat Unions—Execution of Schemes—Percentage of contribution - Position in regard to works intended for the benifit of Harijans and Backward classes - Clarifications issued.

(G.o. Ms. No. 1000, R. D. and L. A., dated 23-4-1962.)

கிராம நலத் துறையின் 1960-ம் ஆகஸ்ட்மீ 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 664-ல், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சட்ட பூர்வமானதும், சட்டபூர்வமற்றதுமான வருவாய்களைக் குறிப்பிட்டு, "பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம்" ஒன்றை உருவாக்கி அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அந்த திட்டத்தில், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், தம் வருவாயைக்கொண்டு செய்யத்தக்க வேலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே ஆணையில் பஞ்சாயத்து யூனியன்கள், தம் வட்டாரங்களின் அபிவிருத்திக்கான ஐந்தாண்டுத் திட்டமாக அமையக்கூடிய, வட்டாரத்தின் பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் 1958-ம் ஆண்டு, தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் விதிக்கத்தக்க வருவாய்கள், இச்சட்டப்படி அரசாங்கம் அளிக்கும் மானியங்கள், சமுதாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிடைக்கத்தக்க நிதி வசதிகள், சட்டப்படி பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் வசூலிக்கத்தக்க நன்கொடைகள், விகிதாச்சார வசூல்கள் ஆகிய வருவாய்கள் இந்தத் திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும், தல அபிவிருத்தி வேலைத் திட்டம், கிராமிய குடிதண்ணீர் வழங்கு தொகுப்புத் திட்டம், கிராமப்பாதை அபிவிருத்திக் கூட்டுறவுத் திட்டம் ஆகிய திட்டங்களில் இதுவரைத் தனித்தனி ஒதுக்கப்பட்டிருந்த நிதிவசதிகளும் இத்துடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளன.

2. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டவேலைகள் இதுவரையில் "கால் நடைப் பாதுகாப்பு, மீனளம் உட்பட விவசாயம் கல்வியும் சமூகக்கல்வியும், துப்புரவும் சுகாதாரமும், நீர்ப்பாசனமும் நிலத்திருத்தமும்," "கிராமியக் கலை கைவினை" முதலான தலைப்புக்களின்கீழ் நடந்து வந்தன. குறிப்பாக, கிராமிய நீர் வழங்கு வேலைகள் சாக்கடை வடிகால்கள், கழிப்பிடங்களை கட்டுதல், பள்ளிக்கூடங்கள், சமுதாய மனமகிழ் மன்றங்கள் கட்டுதல், கிராமப் பாதைகளுக்கு ஜல்லிக் கற்கள் போடுதல், பழுது பார்த்தல், சிறுபாலங்கள் கட்டுதல் முதலாயன வேலைகள் முறையே "துப்புரவும் சுகாதாரமும்," "கல்வி", "போக்குவரத்து" என்ற தலைப் பின்கீழ் எடுத்து செய்யப்படுகின்றன. தல அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ், கிராமிய நீர் வழங்கு வேலைகள் பள்ளிக் கட்டடங்கள், கிராமப் பாதைகள் அமைப்பு, கல்லிக் கல் போடுதல், சிறுபாலங்கள் கட்டுதல் முதலியன அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், கிராமிய நீர் வழங்கு தொகுப்புத் திட்டத்தின்கீழ் நீர் வழங்கு வேலை மட்டுமே எடுத்துச் செய்ய முடியும். இந்த எல்லா வேலைகளுக்கும் அரசாங்க மானியம் ஓரளவுக்குத்தான் வழங்கப்படும் செலவின் ஒருபகுதியைப் பொது மக்கள் நன்கொடையின் மூலம்தான் ஈடு செய்யவேண்டும். அரிசனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்க்கும் சிறப்பாக நலன் பயக்கும் வேலைகளைப் பொறுத்த மட்டில், சில விசேஷ சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. இந்த விசேஷ சலுகைகள் வருமாறு

கிராமிய நீர் வழங்கு வேலைகள்

அரிசனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் நலன் பயக்கும் கிராமிய நீர்வழங்கு வேலைகளுக்கு, உண்மையான நன்கொடையான 10 சத வீத நன்கொடை செலுத்துதல் தவிர வேறு நன்கொடை செலுத்துதலை வலியுறுத்தத் தேவையில்லை. (பொதுத் துறையின், 25-6-58 தேதியிட்ட அரசாங்க ஆணை 1764-ஐ க்காண்க.) அரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் நலன் தரும் நீர்வழங்கு வேலைகளின் முழுச் செலவும் கிராமிய நீர் வழங்கு தொகுப்புத் திட்டத்தின்கீழ் மாநில நிதிகளிலிருந்து ஈடு செய்யப்பட்டு வந்தன.

பாதைகள்

பாதை வேலைகளுக்கு 50 சத விகிதத் தொகை (தல அபிவிருத்தி வேலைகள் விஷயத்தில் ரூ. 10,000 வரம்புக் குட்பட்டு) அரசாங்க மானியம் அனுமதிக்கப்பட்டது. அரிசனங்களும், பிற்பட்ட வகுப்பினரும் வேலையின் மதிப்பில் 10 சத வீதத்தை நன்கொடையாக அளிக்க எதிர்பார்க்கப்பட்டனர். மீதித் தொகை ஸ்தாபனங்களின் நன்கொடை அல்லது அரிசன நலத் துறையின் நிதிகளைக் கொண்டு ஈடுசெய்யப்பட்டது.

பள்ளிக் கட்டடங்கள்

பல்வேறு வகைப் பள்ளிக் கட்டடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உயர் வரம்புக்குட்பட்டு, பள்ளிக் கட்டடங்களுக்கு 50 சத வீத அரசாங்க மானியம் அனுமதிக்கப்பட்டது. குறைந்த அளவு நன்கொடையாவது, அதாவது ரூ. 100 வரை, பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. மீதித் தொகை, ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து நன்கொடையாகவோ, அரிசன நலத்துறையிடமிருந்தோ ஈடுசெய்யப்பட்டது.

சமுதாய மனமகிழ் மன்றங்கள், சாக்கடை வடிகால்கள், கழிப்பிடங்கள் :

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும் இந்த வேலைகளுக்கு 50 சத வீத அரசாங்க மானியம் அனுமதிக்கப்பட்டது. சாக்கடை வடிகால்கள், கழிப்பிடங்கள் கட்டும் வேலைகளுக்கு மீதித் தொகையில் 10 சத வீதம் பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. சமுதாய மன மகிழ் மன்றங்களுக்கு $33\frac{1}{3}$ சத வீதம் பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. மீதித் தொகை ஸ்தல ஸ்தாபனங்களின் நன்கொடை அல்லது அரிசன நலத் துறை மூலம் ஈடு செய்யப்பட்டது.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அல்லது ஸ்தல அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் மீனவர்களின் நலனுக்கென்றே எடுத்து செய்யப்படும் வேலைகளுக்கும் இந்த விசேஷ சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டது. இந்த வேலைகள் மீனவர்களின் நலனுக்கு மட்டுமே செய்யப்படுவன என்ற மீனளத் துறை இயக்குனரின் சான்றின்மேல், வரையறுக்கப்பட்ட பொது மக்கள் நன்கொடை போக மீதித் தொகையை, மீனளத் துறை அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் அல்லது இரண்டும் அளிக்கும்.

3. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின்கீழ், விவசாய அபிவிருத்தி, கால் நடைப் பாதுகாப்பு, மீனளம், கிராமத் தொழில்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளும் உட்பட தேசிய வளர்ச்சிப் பணித் திட்ட நிறைவேற்றம் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளைப் பஞ்சாயத்து யூனியன் ஏற்று நடத்த, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில், கிராம வேலைகள் மானியம், விவசாய மானியம், சமூகக் கல்வி மானியம் மாதர்-குழந்தைகள் நல மானியம், தல நீர்ப்பாசன மானியம் முதலான சட்ட பூர்வமல்லாத மானியங்கள் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த மானியங்களைப் பயன்படுத்துவது குறித்த விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இப்போதுள்ள ஆணைகளின்படி, சமுதாய மன மகிழ் மன்றங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், குழந்தைகள் பூங்காக்கள் முதலியன கட்ட மானியம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. கிராம வேலைகள் மானியத்திலிருந்து கீழ்கண்ட வேலைகளைச் செய்ய மட்டுமே பஞ்சாயத்து யூனியன்கள் அனுமதிக்கப்படுகின்றன :

(i) கிராமிய நீர்வழங்குத் திட்டங்கள்.
(ii) கிராமப் பாதை வேலைகள்.
(iii) கிராமப் பள்ளிக் கட்டடங்கள்.

மேற் குறித்தவகை வேலைகளுக்கு, பொது மக்கள் நன்கொடை ஒப்புக்கொள்ளும் விஷயம், கிராம நலத் துறையின் 16-8-1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 664-ல் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்கண்ட படி வகுக்கப்பட்டுள்ளது.

(a) நீர் வழங்கு வேலைகளுக்கு பொது மக்கள் நன்கொடை விகிதம் 25 சத வீதமாகும். மீதி 75 சத வீதத் தொகை கிராம வேலைகள் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும். அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் விஷயத்தில் நன்கொடை எதிர் பார்க்கப்படமாட்டாது.

(b) இணைப்புப் பாதைகளை விஷயத்தில் பொது மக்களிடமிருந்து, வருவாய் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள A, B, C, D வகை வட்டாரங்களில் முறையே 50, 40, 30, 20 சத வீதத் தொகைகள் நன்கொடையாக எதிர்பார்க்கப்படுகிறது. பாதைகள் போடப்படும் நிலம் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட நிலம் குறிப்பிட்ட நன்கொடையில் சேர்ந்ததாகக் கருதப்படமாட்டாது.

(c) பள்ளிக் கட்டட வேலைகளுக்கு 50 சத வீத நன்கொடை அளிக்க வேண்டும்.

(d) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இதர மானியங்கள் விஷயத்திலும், அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்குச் சிறப்பாக நலன் பயராக்கும் வகை ஒன்றும் இல்லை என்று கருதப்படுகிறது. அவர்களுக்கு அவ் வேலைகளில் விசேஷ சலுகை ஒன்றும் காட்டப்பட மாட்டாது.

4. ஆகவே இந்த ஆணைகளின்படி, அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு, கிராமிய நீர் வழங்கு வேலைகளுக்கு மட்டும் விசேஷ சலுகைகள் அளிக்கப்படுமே தவிர, கிராம வேலைகள் மானியத்தின் கீழ் மற்ற வகை வேலைகளுக்கும், அல்லது மற்ற மானியங்களின் கீழ் செய்யப்படும் செலவினங்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படமாட்டாது.

5. பள்ளிக் கட்டடங்கள், அல்லது பாதை வேலைகள் விஷயத்தில் ஏதாவது விசேஷ சலுகை காட்டப்படுமா என்று பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. இந்த வேலைகளில் எதுவும் அரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு சிறப்பாக நலன் பயப்பது இல்லை என்பதால் விசேஷ சலுகைகள் தேவையில்லை என்று எடுத்துக் கூறப்பட்டது. அரசாங்கம் இந்த யோசனையை ஒப்புக்கொண்டு, கிராமிய நீர் வழங்கு வேலைகளைத் தவிர, இப்பொழுது கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட இரண்டு வகை வேலைகளுக்கும் விசேஷ சலுகை அளிக்கத் தேவையில்லை என்று ஆணையிடுகிறது.

1. பள்ளிக் கட்டடங்கள்.
2. கிராமப் பாதை வேலைகள்.

மீனவர் சமுதாயத்திற்கு நலன் பயக்கும் வேலைகள் விஷயங்களில் விசேஷ சலுகை அளிக்கும் பிரச்சினையையும் அரசாங்கம் பரிசீலனை செய்தது. மேலே குறிப்பிட்ட அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு நலன் பயக்கும் வேலைகள் விஷயத்தைப் போன்றே இதுவும் கருதப்படுவதால், மீனவர் சமுதாயத்திற்கு நலன் பயக்கும் வேலைகளுக்கு விசேஷ சலுகை அளிக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

6. அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு முழுதும் பயன்படுகின்ற கிராமிய நீர் வழங்கு வேலைகள் விஷயத்தில் மொத்த செலவும் கிராம வேலைகள் மானியத்திலிருந்து செய்யப்படும் என்பதை அரசாங்கம் தெளிவு படுத்துகிறது. அரிசன நலத்துறை அந்தச் செலவின் எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளாது. கிராம வேலைகள் மானியத்துடன் அரிசன நலத்துறை நிதிகளின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளை ஒருமைப் படுத்த அரசாங்கம் தனியே நடவடிக்கை எடுத்து வருகிறது. கிராமிய நீர் வழங்கு வேலைகள் விஷயத்தில் காட்டப்படும் விசேஷ சலுகைகள் திறந்த கிணறுகளுக்கு (Open Wells) மட்டும் பயன்படுத்த வேண்டுமே தவிர, மேல் மட்டத் தண்ணீர் தொட்டிகள் (Over head tanks), குழாய் இணைப்பு நீர் வழங்கு முறைகள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 23-4-1962. தேதியிட்ட ஆணை எண் 1000.)

அலுவலக நடைமுறை.—வட்டார அபிவிருத்தி அலுவலகங்கள்—அரசாங்கத்துக்கும், கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கும் மனுச் செய்துகொள்ளும் முறை—விளக்கங்கள்.

[Office Procedure—Block Development Offices—Mode of addressing Government and Additional Development Commissioners-Instructions.]

(Memorandum No. 45917., R.D. and L.A., dated 7-5-62)

கிராம நலத்துறையின் 9-3-55 தேதியிட்ட அறிக்கை எண் 1080-ல் மிகவும் அவசரமான விஷயங்களில் தவிர ஏனைய விஷயங்களில் எல்லாம் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அரசாங்கத்துக்கு நேராக எழுதக் கூடாது என்றும், கலெக்டர்களின் மூலமாகவே எழுத வேண்டும் என்றும், விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இருந்தும் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் அல்லது கலெக்டர்கள் எளிதில் அளிக்கக்கூடிய விளக்கங்களுக்காகக் கூட, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அரசாங்துக்கே தொடர்ந்து நேரடியாக எழுதிவந்தமையால், கிராம நல தல நிர்வாகத் துறையின் 15-2-61 தேதியிட்ட அறிக்கை எண் 29569-ல் மேற்படி விளக்கங்கள் மறுபடியும் வெளியிடப்பட்டன.

2. இவ்வாறு திரும்பத் திரும்ப விளக்கங்கள் வெளியிடப்பட்ட பின்னரும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகவும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாகவும் உள்ளவர்களிடமிருந்து அன்றுடச் சாதாரண விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு நேரடியாக மனுச் செய்துகொள்வது நீடித்து வருகிறது.

வட்டார அபிவிருத்தி நிலையிலிருந்து, பஞ்சாயத்து யூனியன் நிலைக்கு மாறுகின்ற காலமாகையால், நிர்வாக விஷயங்களில் பல்வேறு முனைகளில் பல்வேறு ஐயங்கள் எழுந்துவந்தன. அவற்றைக் கலெக்டர்களின் அறிக்கைகளையும் எதிர்ப்பார்க்காமல், காலதாமதமின்றி அந்த ஐயங்களைத் தீர்த்து வைக்க வேண்டியது இந்தச் சூழ்நிலையில் செய்ய வேண்டிய ஒன்று, என்று அரசாங்கம் கருதியது. ஆகவே, அத்தகைய விஷயங்களில் இது வரையில் அரசாங்கம் உடனுக்குடன் ஆணைகளை பிறப்பித்து அவற்றுக்கு விளக்கம் அளித்து வந்தன. பல்வேறு நிர்வாக விஷயங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறை, ஏறக்குறைய வகுக்கப்பட்டு; அவை பற்றிய விளக்கத் தொகுப்புகளும் இப்போது வெளியிடப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்தில் வழி காட்டவும், விளக்கம் அளிக்கவும், யோசனை கூறவும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளாலும், கலெக்டர்களாலும் முடியும் என்பதால் இனிமேல் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஒவ்வொரு விஷயத்துக்கும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அரசாங்கத்தை நேரடியாக அணுகத் தேவையில்லை. ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளும், கலெக்டர்களும், கேட்கப்படும் விஷயத்தில் யோசனையோ, விளக்கமோ அளிக்க முடியாத நிலையில் இருப்பார்களேயானால், இது விஷயத்தில் கலெக்டர்கள் அரசாங்கத்துக்கு எழுதலாம்.

3. ஆகவே, வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகவும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாகவும், இருப்பவர்கள், இனிமேல் நேரடியாக அரசாங்கத்துக்கு எழுதுவார்களேயானால், அவை கவனிக்கப்பட மாட்டா. இருந்தபோதிலும், மானிய அங்கீகாரம், முதலிய உடனடி ஆணைகள் தேவைப்படும் அவசர விஷயங்களில், வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகவும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாகவும், இருப்போர் நேரடியாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டால், அவை வழக்கம்போல் தொடர்ந்து கவனிக்கப்படும்.

4. இது சம்பந்தமாக, கிராமநல தல நிர்வாகத் துறையின் 15-2-61 தேதியிட்ட அறிக்கை 29569-ன் பாரா 2-ல் கூறப்பட்டடுள்ள விளக்கங்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் நினைவுக்குக் கொண்டுவரப்படுகிறது.

5. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு (Additional Development Commissioner) நேரடியாக எழுதப்படும் விஷயங்களிலும் பொருந்துவனவாகும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 7-5-62 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 45917)

பஞ்சாயத்து அரசிதழ்

(PANCHAYAT GAZETTE)

ஜூலை, 1962

பொருளடக்கம்

ஆணை (அல்லது) அறிக்கை வெளியிட்ட அரசாங்கத் துறை.	ஆணை (அல்லது) அறிக்கை எண்.	ஆணை (அல்லது) அறிக்கை தேதி.	பக்கம்.
கிராம நல-தல நிர்வாகத்துறை	ஆணை : 993	21—4—62	i
நெடுஞ்சாலை, கிராம வேலைகள் துறை	அறிக்கை : 42223	24—5—61	ii
கிராம நல-தல நிர்வாகத்துறை	ஆணை : 785	31—3—62	iii
,,	ஆணை : 737	26—3—62	vi
,,	ஆணை : 1250	30—5—62	vi
கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதங்கள்	——	——	xi
கிராம நல-தல நிர்வாகத் துறை	ஆணை : 1231	28—5—62	xii
,,	ஆணை : 1054	1—5—62	xiii
,,	ஆணை : 1080	4—5—62	xiv
,,	அறிக்கை : 66367	28—5—62	xvi
,,	ஆணை : 1158	17—5—62	xvi
,,	ஆணை : 854	6—4—62	xviii
,,	ஆணை : 967	17—4—62	xix
,,	அறிக்கை : 50712	12—4—62	xix
,,	ஆணை : 1000	23—4—62	xx
,,	அறிக்கை : 45917	7—5—62	xxii

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

1



2



3

4

5

ஆந்திர மகிள சபையின் வெள்ளி விழாவில்பாரத ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன்....

சென்னையில், மாதர் நலன், குழந்தைகள் நலன் வளர்ச்சிக்கு, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஆந்திர மகிள சபையின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளை, ஜனாதிபதி டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், 27-5-62ல், துவக்கிவைத்தார்.

தனியார், தாமே முன் வந்து நடத்தும் இத் தகைய சமூக நல ஸ்தாபனங்கள், நாட்டில் பெருகி, மாதர்-குழந்தைகள் நலன் விஷயத்தில் பணியாற்றினால், நம்முடைய சமுதாயத்தில் மாதர்நிலை உயர்வதுடன், நல்லதோர் வருங்காலத்தைக் காண நாம் வழிவகுத்தவர்களாவோம்.

Regd. No. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1962

தமிழ்நாட்டின் தலைநகரில் புதிய ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன்....

படங்கள் 1, 2, 4: 26—5—62ம் தேதி சென்னைக்கு விஜயம் செய்த பாரத ஜனாதிபதியை, விமான நிலையத்தில் முதலமைச்சர் திரு காமராஜ் அவர்களும், முக்கிய அதிகாரிகளும் வரவேற்றனர். ஜனாதிபதி அவர்கள் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டு, அணி வகுப்பைப் பார்வையிட்டார்.

3. கிண்டி ராஜ்பவனில், கவர்னர் அளித்த விருந்தில், ஜனாதிபதி அவர்களுக்கு, தமிழ்நாட்டு அமைச்சர்கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர்.

5, 6: தென் பிராந்திய தனியார் சமூக நல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மகாநாடு, 25—5—62 தேதியில், சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. மகாநாட்டுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. காமராஜ் தலைமை வகித்தார்.

1

2

3



4

6